தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# கொடுமணல் இலக்கியங்கள்

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி

பதிப்பாசிரியர்
புலவர் செ. இராசு எம். ஏ.

பொறுப்பாசிரியர்
டாக்டர் இரா. நாகசாமி

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981.

First Edition 1981
T. N. D. A. Publication No. 78.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
1097
Date
MADRAS

© Tamilnadu State Department of Archaeology

**Kodumanal Ilakkiyangal**

Editor
**Pulavar S. Raju**

General Editor
DR. R. NAGASWAMY

Price : Rs. 7-75.

Printed and Published by the State Dept. of Archaeology
On behalf of
Oriental Manuscripts Library, Madras.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங் களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

செ. அரங்கநாயகம்
27-12-1980

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

Kodumanal is now a small village on the banks of the river Noyyalāru, in Perundurai Taluk of Periyar District. Its antiquity however dates back to the Sangam age. The credit of having identified the Village with the ancient village 'Kodumanam' of Sangam Litrature goes to Pulavar S. Velusamy of Sennimalai. The village abounds in semi-precious stones, crystal etc. which were used for jewellery in ancient times. Not far away from this village, Roman coins have been found and it is almost certain that the Romans frequented this site for semi-precious stones. At the instance of Thiru Aranganayakam, the Hon'ble Minister for Education, Government of tamil Nadu, the Tamil Nadu State Archaeology Department explored the village and found Arretine ware and inscribed black and red ware assignable to the beginning of the Christian era. In ancient Sangam works Kodumanal is described as a place famous for its jewellery and that the Chera ruler used to give jewels from this place to Barole (*Padirrupattu 67-74*). Thus the antiquity of this village is now well attested.

About 11 palm leaf manuscripts were acquired on behalf of the Government of Tamilnadu from one Nacchimuttu Pulavar of this village, through the good offices of Pulavar S. Raju of Erode and Miss M. Muthiah, Headmistress of Kalaimagal Kalvi Nilayam, Erode.

The owner of the manuscripts, Nachimuttu Pulavar hails from Tambirattippalayam a suburb of Kodumanal and it is learnt that the collection belongs to his family. He himself cannot read the manuscripts but recites them from memory. Obviously he has been trained in the tra-

ditional manner from his childhood. His ancestors are said to have come from Puduppai in Kongu Nadu. This village Puduppai, seems to have been the abode of many poets in the late 17th to 19th centuries. Thirukkaivel Pulavan, Senjurippulavan, Sivanmalaippulavan and Sami Pulavan, are the poets known to the people of the region as those who have sung various places of Kongu country. Nacchimuthu Pulavar belongs to this great abode of poets. At present he is working as a weaver and is learnt that for more than three generations they are following this profession. Occasionally Nacchimuthu Pulavar attends the marriages of Kongu Vellala family and recites some of these verses especially on Kuruppu Nadu etc. It is not unlikely some of the verses in the collection were composed by his ancestors on such occasions.

The collections in this book, include two major poems and a few minor poems.

The first two, which are the major poems, belong to the *'Kādal'* love poems. The first is on a patron Kandaswamy, the noble of Kodumanal and is hence called "*Kodumanal Kādal*". He belonged to the Panankāḍai group of the Kongu Vellala and was the son of Palani. He married Muthuvelammal, daughter of one Chennimalai. The text gives the names of various relatives of Kandaswami. Describing the greatness of the agriculturists (Kārāḷās) the poet says that Karalas are worshipped by even the rulers of the country (V. 78). The poem describes the hero's hunting expedition. Before starting on hunting, he feeds Sedas, Vaniyas, Seniyars, Sengunatars, Vedars, Maravars, Okkiliyars, Vaduga Telungas, Oddas, Uppilliyas, Kucciyaryas(?) and Valaiyars, which is an interesting reference to inhabitants of the region during 17th-18th century A.D. Among the weapons used Tuppākki with silver lining finds a special mention.

The gods and goddesses for whom temples are found in the Kodumanal Village are invoked at the beginning of

the work. Sellandiyamman, Attanuramman, Madurakali, Tangamar, Muttalamman, Mariyamman, Tambiratti-yamman, Ravitta Nayaki.

The second work is on Muthu Ponnaiyan, a cousin of Kandaswami, the hero of the first work. Both the heroes were contemporaries. Both the poems were composed by one and the same poet, Senjerip-pulavan, as gleaned from the colophon of the work. The poet received an eight-stringed gold chain as gift from the Patron Ponnaiyan (V. 103). Among the garments and jewels mentioned in the poem, *Vajramuttari*, *minji* (a ring worn on the foot) *Vira Muttari motira* (a ring worn on fingers) *Arcot Tanga nijār* (a gold laced pant of Arcot) are interesting. *Vīracinna*, *Nāgasura*, *Tullari*, *Tārai*, *Tamburu*, *Purigai*, *Ekkāla*, *Berigai*, *Mattala*, *Ganattappttai* are musical instruments mentioned in the text.

The third section given under the title *Nāttup-pādal*, consists of a number of stray verses, dealing with the places in Kongu Nādu, the greatness of Vellalās and others. A few are clearly on Ponnaiyan, the hero of the work.

The fourth section is a palm leaf document, purporting to confer certain previleges (the right to receive *Vibhuti prasāda*) in a given order, on the day of car festival of the Lord of Kadittamalai. The first right was conferred on Kāliyāṇḍā Gaundar of Panangādai Kula, the chief of Elumāttur (Evidently a member of the family of the heroes of the first two poems). A certain Nanjarāya Pulavar, belonging to Sengunta gotra, Pokkankūtta, received as gift a village from the 32 villagers of the region. Obviously these manuscripts belong to the family of this poet Nanjarāya Pulavar.

The last section includes a number of stray verses comprising of 25 verses on Lord Subramanya of Murugan-pundi, Palani and Sivanmalai. A few patrons of Kōngunāḍu also come in for praise. A point worthy of

mention in this connection is that Poet Kamban, the author of Rāmāyana comes in for special praise in several verses. That Kongu vellalas were great patrons of Kamban's poems, is brought out by the graphic statement that they will remain slaves of Kamban's poem, so long as the river Kaveri, the mountains and the sun and the moon last.

*'கல்லுங் காவேரியும் சந்திராதித்தர் உள்ளமட்டும் கம்பநாடன்
சொல்லிய செந்தமிழ்க் கடிமை துரை நாங்கள்'* —*Verse* 59

This clearly shows how far the poems of Kamban have inspired the entire Kongu country in its intelectual and literary fervour. Pulavar S. Raju of Erode has edited the text and that he deserves the thanks of all.

R. Nagaswamy

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆய்வு முன்னுரை | 3 |
| கந்தசாமிக் காதல் | 17 |
| அருஞ்சொல் அகராதி | 68 |
| கந்தசாமி, பொன்னையன் குடிவழி | 72 |
| கொடுமணல் பொன்னையன் காதல் | 73 |
| கொடுமணல் கோயில்கள் | 97 |
| நாட்டுப்பாடல்கள் | 109 |
| குருப்பு நாட்டுப் பட்டயம் | 123 |
| பட்டய அருஞ்சொற்பொருள் | 129 |
| தனிப்பாடல்கள் | 131 |
| பொருள் அகராதி | |
| பாட்டு முதற்குறிப்பு அகராதி | |

# கொடுமணல் இலக்கியங்கள்

# ஆய்வு முன்னுரை

## கொடுமணல்

பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டத்தின் தென் கோடியில் ஓடும் நொய்யலாற்றின் கரையில் உள்ள சிற்றூர் கொடுமணல். சுமார் 800 மக்கள் தொகையுடன் சிறு ஊராக இன்று அது விளங்கினாலும் அதன் பெருமை மிகப்பழமையானது. அண்மைக் காலத்தில் அங்கு கண்டெடுக்கப்பட்ட பழம் பொருட்கள் மூலம் அது உறுதிப் படுகின்றது.

பதிற்றுப்பத்தில் சேர அரசர்கள் 'கொடுமணம்' என்ற ஊரிலே செய்யப்பட்ட வேலைப்பாடு மிக்க அணிகலன்களைப் புலவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று இரண்டிடங்களில் வருகிறது (பதிற்றுப்பத்து 67,74). இன்றும் கொடுமணலில் பல வண்ணக்கற்களிலும், படிகக் கற்களிலும், சங்கிலும் செய்யப் பட்ட சிறப்பான தொழில் வேலைப்பாட்டினையுடைய பல் வேறு ஆபரணங்கள் கிடைக்கின்றன. வினைமாண் நன்கலங் களையும், அருங்கலங்களையும் கொடுத்த சங்ககாலக் கொடு மணம்தான் இன்றைய கொடுமணல்.

'பெரில்' எனப்படும் கடல் நிற நீலம், பச்சைக்கற்களை ரோமானிய நாட்டுக்களித்த பட்டாலியும், படியூரும் கொடு மணலுக்கு மிக அண்மையிலேயே உள்ளன.

சங்க காலத்தில் சிறப்புப் பெற்ற கொடுமணல் பிற் காலத்தும் மிகச்சிறப்பாகவே விளங்கியுள்ளது. அங்கு பல பட்டயங்களும் (சுவடிகளில்), தனிப்பாடல்களும், பந்தடி, பதிகம் காதல் போன்ற சிற்றிலக்கியங்களும் கிடைத்துள்ளன. இவ்வூரில் வாழும் பரம்பரைப் புலவர் குடும்பத்தில் வந்த தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் இச்சுவடிகளைப் பாதுகாத்து வைத்துள்ளார். அவற்றுள் இந்நூற் சுவடியும் ஒன்று. இச்சுவடி தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பழஞ்சுவடித் தொகுப்பிற்கு அளிக்கப்பட்டு, பாதுகாத்து வரப்படுகிறது.

### காஞ்சியாறு

இது பதிற்றுப்பத்தில் காஞ்சியம் பெருந்துறை என்று பாராட்டப்பெறும் சிறப்புடையது (பதிற்: 48). சுந்தரர் தேவாரத்திலும், பாண்டியர் செப்பேட்டிலும் கூடக் 'காஞ்சி' என்றே கூறப்படுகிறது. பிற்காலத்தில் இவ்வாறு மக்கள் வழக்கில் நொய்யல் என்று மாறிவிட்டது. இக்காதல் பிரபந்தத்திலும் தனிப்பாடல்களிலும் காஞ்சிமாநதி என்றும், 'மணக்கும் திருக்காஞ்சி' என்றும் நொய்யலாறு குறிப்பிடப் பெறுகின்றது. கொங்கு நாட்டில் தோன்றிக் கொங்கு நாட்டுக்குள்ளேயே ஓடிக் காவிரியில் கலப்பது. நள்ளாறு, வண்ணாற்றங்கரைப் பள்ளம், நீலிப்பள்ளம், நன்காஞ்சி முதலிய துணையாறுகளைப் பெற்று விளங்குவது.

போளுவாம்பட்டிப் பள்ளத்தாக்கில் வெள்ளியங்கிரி மலையில் தோன்றும் இவ்வாறு 170 கி. மீ. நீளம்உடையது. இதன் கரையில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள் உள்ளன. அவற்றுள் கொடுமணல் மிகச் சிறப்பான ஒன்று.

### கந்தசாமி

நொய்யலாற்றங்கரையில் உள்ள இக்கொடுமணலில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த ஒரு உழவர்குடிச் செல்வன் கந்தசாமி. கொங்கு வேளாளர்களில் பனங்காடை என்னும் குலத்தைச் சேர்ந்தவன். ஈரோடு வட்டத்தில் உள்ள எழுமாத்தூரில் வாழ்ந்து, பின் கொடுமணலில் குடியேறியவன். கொங்குநாடெங்கும் பரந்து 34 ஊர்களைக் காணியாகக் கொண்டு இப்பனங் காடைக்குலத்தினர் வாழ்ந்திருக்கிறார்கள்.

இவன் தந்தை பெயர் பழனி. பெருந்தொழுவூரில் உள்ள காணியாளன் ஓதாளன் கூட்டத்தில் சென்னிமலை என்பானின் மகள் முத்து வேலம்மா என்பவளைத் திருமணம் செய்து கொண்டவன். இந்நூலில் இவனுடைய பெரியப்பா, சித்தப்பா, அண்ணன், தம்பிமார், மைத்துனர் ஆகியோர் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

## நூல்

பிற்காலச் செல்வர்களின் செல்வச் சிறப்பினையும், வாழ்க்கை முறையினையும், உற்றார் உறவினர் பெருமை களையும், அவர்தம் பொழுது போக்குகளையும் சுவைபடக் கூறப் பல சிற்றிலக்கியங்கள் எழுந்தன. அவற்றில் 'காதல்' என்பதும் ஒன்று. கோவை முதலிய பிரபந்தங்கள் தொடர் நிகழ்ச்சியைக் கூறுவது. ஒரே நாள் நிகழ்ச்சியைச் சுவைபடக் கலிவெண்பா யாப்பில் எழுதப் பெறும் நூலே காதலாகும். பழையகோட்டை நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் காதல், முதல் காதல் சிற்றிலக்கியம் என்பர்.

பரம்பரைப் பாளையக்காரராகவோ அன்றிச் சிற்றர சாகவோ இல்லாத ஒரு உழவர் குடிமகன்மீது இது பாடப் பட்டுள்ளது மிகப்புதுமையானதாகும். எனவே இதனைக் குடிமக்கள் சிற்றிலக்கியம் எனலாம்.

## நூலின் போக்கு

பூந்துறை நாட்டு எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தில் தோன்றிய கந்தசாமி. கொடுமணலில் குடியேறி உழவுத் தொழில் செய்யும் செல்வனாக வாழ்கின்றான். அவன் சைவ சமயம் சார்ந்தவன். பக்தியுடன் பல ஆலயங்களில் வழி பட்டுத் திருப்பணி செய்தவன். கற்றறிந்தவன். புலவர்களை ஆதரிப்பவன். கொடிமுடிப் பண்டிதர் என்பவரைத் தன் குலகுருவாகக் கொண்டவன். பல நற்செயல் புரிந்த குடிச்சிறப் புக்கள் கொண்டவன். உற்றார் உறவினர்களை அன்புடன் ஆதரிக்கக்கூடியவன். கொடைபல கொடுத்தவன். கால்நடைச் செல்வமுடையவன்.

வேட்டைமேல் விருப்பம் கொண்ட அவன் கணக்கன் மூலம் வேட்டை ஓலை எழுதுகின்றான். பணியாள் மூலம் ஓலை செல்கிறது. உற்றார் உறவினர் அனைவரும் வரு கின்றனர். உள்ளூர்ப் பொதுமக்கள் அனைத்துச் சாதியாரும் வருகின்றனர். 34 ஊர்களில் இருக்கும் பங்காளிக் காணி யாளர்கள் அனைவரும் வருகின்றனர். அனைவரும் கூடி நீராடி, விருந்துண்டு வேட்டை உடை அணிந்து கொண்டு

வேட்டைக் கருவிகளுடன் வாத்தியங்கள் முழங்க, ஒருமாத வேட்டைக்குப் புறப்படுகின்றனர். எழுமாத்தார் அருகே உள்ள பொதிமலையில் வேட்டையாடுகின்றனர்.

வேட்டைக்குப் புறப்பட்டபோதே நல்லசகுனம் ஏற்பட்ட தால் நல்ல வேட்டை கிடைக்கிறது. வேட்டை மிருகங்களும் காட்டு மரங்களின் வகைகளும் கூறப்படுகின்றன. 16 அடி வேங்கைப்புலியைத் தொடர்ந்த தலைவன் தனிமையாகச் செல்லுகின்றான். புலியைச் சுட்டபின் நீரருந்திக் குருந்த மரத்தடியில் இருக்கின்றான்.

அன்னை வன்னமுத்துவின் மகள் மாலைமுத்து திருவா ரூரைச் சேர்ந்தவள். மலரெடுக்கத் தோழிமாருடன் வந்து தனிமையாகின்றாள். தலைவனும் தலைவியும் சந்தித்துக் கூடுகின்றனர். தலைவனின் ஆட்கள் வரவே தலைவன் சென்று விடுகின்றான். தனியாகத் தலைவி புலம்புகின்றாள். அன்னைக்கு அறிவித்த தோழிமார்கள் தலைவியை வீட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். பின் மாலைமுத்து சிவிகை யேறித் தலைவன் வீடு சென்று சுகமாக வாழ்கின்றாள் என்று நூல் முடிகிறது.

அகத்துறை நுட்பங்கள் பல இந்நூலில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன.

## நூலின் காலம்

நூலினுள் ஆயுதவகையில் துப்பாக்கி கூறப்படுகிறது. ஆற்காடு, செஞ்சி போன்ற ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை பிற்காலச் சிற்றரசுகளின் காலத்தில் சிறப்புப் பெற்றவை. சுவடியை அளித்த புலவர் ஆறு தலைமுறை ஆயிற்று என்றும் கூறுகின்றார். 17-ஆம் நூற்றாண்டில் கொங்குநாட்டில் குடி யேறிய ஒக்கிலியர் இந்நூலிற் குறிக்கப்படுகின்றனர். இவை களையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது இந்நூல் இன்று ஏறத்தாழ 250 ஆண்டுகட்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஐதர், திப்பு, கம்பெனிப் படையினர் ஆகியோர் கொங்கு நாட்டுக்குள் புகாத அமைதியான காலத்தில் இந்த நூல் தோன்றியிருக்கவேண்டும். அக்காலம் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம்.

## நூலாசிரியர்

இந்நூலைப் பாடியவர் திருக்கைவேல் புலவன் மகன் செஞ்சேரிப் புலவன் என்பது ஏட்டுக் குறிப்பிலிருந்து தெரிகிறது. இவர்கள் காங்கேய நாட்டில் வாழ்ந்தவர்கள் என்பதும் புதுப்பைப் புலவர்கள் மரபில் வந்தவர்கள் என்பதும் தெரிகிறது. இப்புலவர் மரபினர் கொடுமணல் கந்தசாமியின் மரபினரால் நன்கு ஆதரிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்நூல் மூலம் கொங்குநாட்டுச் சமுதாய வரலாற்றை நன்கு அறிந்தவர் இவ்வாசிரியர் என்பதும், வேளாளர் குலப் பிரிவுகள், காணியூர்கள் பற்றியும் நன்கு அறிந்தவர் என்பதும் தெரிகிறது. சைவ சமயத்தில் ஈடுபாடு உடையவர்; புராண இதிகாசங்களையும், பிற தமிழ் நூல்களையும் நன்கு கற்றவர்; வெற்றெனத் தொடுத்தல் இன்றி எளிய இனிய ஆற்றுப் போக்கான நடையில் பாடக்கூடியவர் என்பனவும் இந்நூல் மூலம் தெரிகின்றன.

## நூலின் செய்திகள்

### தலைவன்

சாந்தகுணவசனன்; கொடுமணலூர் ஆளும் புவிராசன்; சித்திரமொழி நேயன்; குவளையணி மார்பன்; குபேரன்; துரைராசன்; மகராசன்; சிறந்த கந்தசாமி; தீர்க்க முள்ள காராளன்; உண்மையே பேசுபவன்; பக்தியுடையவன்; மேழிக்கொடிக்கு அதிபன்; கங்கை குலத்தினன்; காராளத் தெய்வம்; சங்கீதம், நாடகத்தில் ஈடுபாடு உடையவன்; புலவர்களை ஆதரித்தவன்; சோமநுதல் அழகன்; வாலை சவுந்தரியவான்; காமன்; தீபமணி மார்பன் போன்ற சொற்களால் தலைவன் புகழ் பேசப்படுகிறது.

### வேளாளர் குலங்கள்

பனங்காடை (எழுமாத்தூர்), பெருந்தொழுவூர் ஓதாளன்; தென்கொடுவாய் ஓதாளன்; அமக்கைநகர்ப் பொருளந்தை குலம்; பாண்டிய குலம் போன்ற கொங்கு வேளாளர் குலப் பிரிவுகளை இந்நூல் மூலம் அறிகின்றோம்.

புற்றரவின் வாயில் கைவிட்டது; புலையருடன் சமமாக உணவு உண்டது; மேகத்தின் தளையை விடுவித்தது; புலவருக்காக முளைவாரி அமுது படைத்தது; பாண்டிய னிடம் புலவருக்காகப் பட்டயம் கொடுத்தது; அநாதைப் பாணன் பிணத்தைச் சுமந்தது; நீலி பழியைத் துடைத்தது; கூழில் துரும்பு எடுத்துச் சோதனை காட்டியது போன்ற வேளாளரின் 96 கீர்த்திகளில் சிலவற்றை ஆசிரியர் பாடியுள் ளார்.

### கொங்கு நாட்டு ஊர்கள்

அமக்கை நகர், அய்ந்தூர், (அஞ்சூர்); ஆத்தூர், ஆனங் கூர், இடையாறு, ஈஞ்சநகர், ஊராச்சிக் கோட்டை, எளஞ்சு நகர், எழுமாத்தூர், கிழாங்குன்றல், குந்தாணி, குறிச்சி, கொடுமணல், கொடுவாய், கொன்னையாறு, கோம்பைக்கணு வாய், கோனூர், சிவகிரி, சேனை நகர், தம்பிராட்டி, திங்க ளூர், திருகுருணி, திருப்பூர், நடுநகர், நண்ணாவூர் (வானி கூடல்) நல்லூர், நெல்லிநகர், பஞ்சமாதேவி, பட்டுலூர், பனயம்பள்ளி, பிரமியம், பெருந்தொழு, மருதுறை, மாத்தூர், மாவிளம்பதி, மானூர், முடக்குறிச்சி, வயித்தம் போன்ற கொங்குநாட்டு ஊர்கள் கூறப்படுகின்றன.

### மலைகள்

அலகுமலை, கஞ்சமலை, கதித்தமலை, கம்பனூர் மலை, சென்னி மலை, தீர்த்தகிரி, தென்சேரி, பரன்கிரி, வேதகிரி, சிரகிரி ஆகிய கொங்கு நாட்டு மலைகள் குறிக்கப்படுகின் றன.

### தேவாரத் தலங்கள்

திருப்பாண்டிக் கொடுமுடி, கருவூர், பேரூர், திருச்செங் கோடு, திருமுருகன்பூண்டி, அவினாசி ஆகிய கொங்குத் தலங்கள் சுட்டப்படுகின்றன.

### ஆறுகள்

காவேரி, காஞ்சி என இரு ஆறுகள் குறிக்கப்படுகின் றன.

### நாட்டுப் பிரிவுகள்

வீரசோழபுர நாடு, குறுப்பு நாடு, பொங்கலூர் நாடு என்ற மூன்று நாடுகள் பற்றிய குறிப்பு வருகிறது.

### தெய்வங்கள்

அத்தனூரம்மன், அர்த்தநாரீசுவரன், ஆலடியண்ணன், கச்சிநாயகி, கருப்பணன், செட்டிவிநாயகன் (வணிக விநாயகன்) செல்லாண்டியம்மன், காட்டுக் கருப்பணன், சொக்க விநாயகர், சோழியம்மன், தங்கமார், தம்பிராட்டியம்மன், நல்ல மல்லாண்டார், பசுபதி, படைத்தலைச்சி, மசரி உமை, மதுரகாளியம்மன், மாதேச லிங்கர், மாரியம்மன், முத்தாலையம்மன், ராமர், ராவுத்த நாயகி, வஞ்சியம்மன், வண்டி அங்கான், வய்யாபுரித் துரை, வன்னீசர் (அக்னீசுவரன்) வீரநாராயணன் போன்ற கொடுமணல் தெய்வங்கள் இந்நூலில் சுட்டப்படுகின்றன. இவையன்றிப் பொதுவாக இறையவன், பார்வதி, முருகன், வள்ளி, கலைவாணி, அட்டலட்சுமி (இருநான்கு லட்சுமி), விநாயகன், அபிராமி, விசாலாட்சி, லட்சுமி, காசி விசுவநாதர், ஏகாம்பர நாதர் போன்ற தெய்வங்களும் குறிக்கப்படுகின்றனர். திருவண்ணாமலை, விருத்தகிரி, திருவாரூர், தென்காசி போன்ற தலங்களும் குறிக்கப்படுகின்றன.

### ஆடவர் பெயர்கள்

அத்தப்பன், ஈசுவரமூர்த்தி, கந்தசாமி, கெட்டிமுத்து, கிரீடபதி, குருநாதன், செங்கோடன், சாமி, சிதம்பரத் தாண்டவன், சின்னய்யன், சின்னத்தம்பி, சுப்பையன், பழனி பழனியப்பன், பிடராப்பன், பொன்னய்யன், முத்துக்குமார், முத்து, முத்துக் குழந்தைவேல், ராசதுரை, ராமய்யன், லிங்கய்யன், விசயரங்கன் போன்ற அக்கால மக்கள் பெயர்களை இந்நூல் மூலம் அறிகின்றோம்.

### காரியக்காரர்கள்

கொடுமுடிப்பண்டிதர் (குரு), பிரதானியர், மந்திரிமார், குறிக்காரன், குழல்காரர், காரியப்பேர், கருணீகர் (முத்துவேல் பிள்ளை), கட்டியக்காரன், ஊழியக்காரன், இளந்தாரி வீரியர், தோட்டி (சாம்புவன்) ஆகியவர்கள் கூறப்படுகின்றனர்.

### பெண்கள் பெயர்கள்

முத்து வேலம்மா, வன்னமுத்து, மாலைமுத்து, வீரமுத்து, மீனாட்சி, சந்திரமதி, கருணை, இந்திராணி, செண்பகம், சீதை, சிவகாமி, ரத்தினவல்லி, அபிராமி, காமாட்சி, முத்துவள்ளி போன்ற பெண்கள் பெயர்கள் இந்நூலில் கூறப்பெறுகின்றன.

### இதிகாசச் செய்திகள்

தேவேந்திரன், கண்ணன் - கோபியர், துரோபதை, நாரணன் சிலை வாங்கல், இராமன், வரையைச் சிறகு அரிந்தது, விசயன்-அல்லி, விசயன்-சுமித்திரை, அரிச்சந்திரன், அருந்ததி, இராமன் - இராவணன் போர், கும்பகர்ணன் படைமிகுதி ஆகிய செய்திகளைக் கூறியுள்ளார். இவை மட்டுமின்றிக் கண்ணப்ப நாயனார், ஏலேலசிங்கன் பற்றியும் அறிந்து கூறியுள்ளார்.

### வழக்கங்கள்

ஒரு செயல் செய்யத் தொடங்கும் போது விநாயகனை வணங்குதல், நல்ல முகூர்த்தநாள் பார்த்துக் காரியம் செய்தல், பல்லி (கெவுளி) சொல்லும் பலனை அறிதல், மங்கலப் பெண்கள் ஆலாத்தி எடுத்தல், பறவை போதல் முதலியவை களைப் பார்த்து நன்மை தீமை அறிதல், கனவு கண்டு பலன் அறிதல், கண்ணேறு நீங்கத் திட்டி சுற்றுதல் ஆகிய பண்டைய வழக்கங்கள் ஆங்காங்கு சுட்டப்படுகின்றன. தகவலுக்காக ஓலை அனுப்புவதும், முரசறைந்து செய்தி கூறப்படுவதும் குறிக்கப்படுகின்றன.

### உணவு வகை

துவரைப்பருப்பு, ஊறுகாய் (10வகை), முள்ளங்கி, மிதிபாகல், வெண்பாகல், கத்தரிக்காய், கதலிக்காய், (பூவன், சாம்பிராணி) கருணைக் கிழங்கு, சக்கரைவள்ளிக் கிழங்கு, அவரைக்காய், மாங்காய், பலாக்காய், வழுதலங்காய், கொத்தவரங்காய், கருவேப்பிலைத் துவையல், வேப்பம் பூ வடகம், வாசமுள்ள அப்பளம், சீடை, கச்சாயம், தேன்குழல், அதிரசம், தோசை, வடை, கற்கண்டு, முக்கனி, புத்துருக்கு நெய், மிளகு நீர் ஆகியன பற்றிய குறிப்பும், பச்சடிக்குத் தேங்காய் மிகக்

கொள்ளும் அளவுக்குப்போட வேண்டும் என்றும், புடலங் காய்க்குப் பொடிதூவிச் சமைக்க வேண்டும் என்றும், வாழை யிலை பெரிதாகப் போடவேண்டும் என்றும் பல குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. உண்டபின் இறுதியாக வாசனைப் பொருட்கள் கொடுத்து வெற்றிலைப் பாக்குக் கொடுப்பதும் குறிக்கப்பட்டுள்ளது.

**கொடுமணல் மக்கள்**

தலைவன் வேட்டைக்குப் போகும்போது உள்ளூர் மக்களுக்கெல்லாம் ஆள்மூலம் தகவல் கூறி அனுப்புகின்றான். அவ்விடத்தில் கொடுமணலில் உள்ள மக்கள் அனைவரும் கூறப்படுகின்றனர். சேடர், வணிகர், சேணியர், செங்குந்தர், வேடர், மறவர், ஒக்கிலியர், தெலுங்கர், வண்டி ஒட்டர், உப்பிலியர், சாம்புவன், குச்சியாரியர், கடியர், வலையர் ஆகியோர் கூறப்படுகின்றனர்.

**கால்நடைகள்**

கொங்கு நாட்டில் எப்போதுமே கால்நடைச் செல்வம் மிகுதி. இந்நூலில் காளை வகைகள் பல கூறப்படுகின்றன. மரை எருது, பில்லை, மயிலை, சிவலை, பொன்னரக்கன், செம்பூதை, கரும்பூதை, காரி, வெள்ளை ஆகியவை கூறப்படு கின்றன.

**சிறப்புச் செய்திகள்**

தலைவன் கந்தசாமியுடன் வேட்டைக்குச் செல்லும் வீரர்கள் கொம்பன் யானையைப் பிடித்து,

'நாட்டிமைசேர் கொடுமணல் நல்லகந்த சாமிமன்னன்
பூட்டிவயல் ஏர்நடத்தப் புகழ்ந்து தருவம்'

என்று கூறும் பகுதி வியக்கத்தக்கது. பாண்டி நாட்டில் போரடிப்பதற்கு யானை பயன்படுத்தப் பட்டதாகக் கூறும் ஒரு பழம் பாடல் இங்கே நினைவுகொள்ளத் தக்கது.

'மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல்என்று
யானைகட்டிப் போரடிக்கும்
அழகான தென்மதுரை' —என்பது அப்பாடலாகும்.

அதுபோல்,

'ஓடிவரும் சிங்கத்தை உபாயமா கப்பிடித்து
தேடிவரும் கொடுமணல் செல்லாண்டி யம்மனுக்கு'

வாகனமாகக் கொடுப்போம் என்கின்றனர்.

புள்ளிமான், கரடி, புலி இவைகளைத் தங்கம்மனுக்கு விளையாடக் கொடுப்போம் என்று கூறுகின்றனர். வேட்டை முடிவில் சிலர்,

'விடையேறும் பெம்மான் விளங்குவன் னீசருக்கு
உடைதரிக்கப் புலித்தோல் உரிப்பார்'

என்று கூறப்பெற்றுள்ள நயம் மிகச்சிறப்பானதாகும்.

**தனித்தன்மை**

பெரும்பாலும் காதல் சிற்றிலக்கியத்தில் தலைவனுக்கு மனைவி கூறப்படுவதில்லை. ஆனால், இக்காதலில் பெருந் தொழுவூர் ஓதாளன் குலத்துச் சென்னிமலை என்பானின் மகள் முத்துவேலம்மா என்னும் மங்கை நல்லாள், நூல் தலைவன் கந்தசாமியின் மனைவி எனக் குறிப்பிடப் பெறுகின்றாள். இது ஏனைய காதல் நூலுக்கு இல்லாத புதுமையாகும். மயில்போன்ற அழகான இத்தலைவிதான் விருந்தோம்புவ தாகக் கூறப்பட்டுள்ளாள்.

**வாத்தியங்கள்**

இந்நூலில் தாரை, தப்பட்டை, நவுரி, தவில், முரசு, வீரசின்னம், பூரிகை, எக்காளம், திடுமம், தம்பூரா, கொம்பு நாகசுரம், பூரிகை, மேளம், மணி முதலான பல வாத்தியங்கள் குறிக்கப்படுகின்றன.

**ஆயுதங்கள்**

வேட்டைக்குச் செல்லுமிடத்தில் பல ஆயுதங்கள் கூறப் படுகின்றன. துப்பாக்கி, சாட்டைக் கயிறு, சக்கிமிக்கி, ஓட்டு, பருசு, கத்தி, பிடிஅம்பு, சக்கரம், பன்றிவேல், வளைதடி, கைவெடி, சாகுழல் ஆகியவையாகும்.

**ஆடை, அணிகலன்கள்**

ஆடவரும் பெண்டிரும் அணிந்துகொள்ளும் பல அணிக லன்கள் கூறப்பட்டுள்ளன. பெண் அணிகள் கேசாதிபாத மாகக் கூறப்பட்டுள்ளன. குப்பி, சுட்டி, கொப்பு, முத்துமணி

மாலை, ஒட்டியாணம், சிலம்பு, கொலுசு, மெட்டிகை போன்ற பெண்கள் அணிகளும், சேலை, ரவுக்கை போன்ற ஆடைகளும், பச்சொண்டி, முத்தொண்டி, வர்ணப்பாகு, பதக்கம், தங்கவளை, பட்சடம், சோமன், அரைஞாண், பதக்கம், முருகு, கடுக்கண், கணையாழி, கெண்டைச்சோமன், நிசார், அங்கி, சரிகைப்பாகு, சாலுவை, கெவுடம் முதலியன ஆடவர்களின் ஆடை, அணிகலன் வகைகளாகும்.

**மலைவளம்**

கொங்குநாட்டு மலைவளத்தையும் அங்கு கிடைக்கும் செடி, கொடி மரங்களின் பெயர்களையும் அறிந்துகொள்ள இந்நூல் நன்கு துணைபுரிகிறது. காரிண்டன், கருங்காலி, கடப்பை, பாம்பை, வெள்ளி, சிலை, வாகை, அளிஞ்சி, கடுக்காய், செம்புளிஞ்சன், கரும்புளிஞ்சன், சேகு, விசா, அத்தி, சிறுமூங்கில், பெருமூங்கில், தேக்கு, மயிப்பூட்டு, செந் தலாக்கு, பொருசன், பயிரன், தளிஞ்சி, குமிளன், நிலவேம்பு, மலைவேம்பு, கொடிக்கால் அத்தி, பாவட்டன், வஞ்சி, பலா, புடங்கு, மருதம், பூமுருக்கு, தாழை, வேல், நெல்லி, சம்பு நாவல், ஈகம், புன்னை, எலுமிச்சை, தென்னை, கொழு மிச்சை, நொச்சி போன்றவை கூறப்படுகின்றன.

**பேச்சுத் தமிழ்**

எளிய கிராமத் தலைவன்மீது பாடப்பட்ட நூலாதலாலும், கிராமத்துப் புலவர் பாடிய காரணத்தாலும் பல பேச்சுத் தமிழ் சொற்களை அப்படியே ஆசிரியர் எடுத்துக் கையாண்டுள்ளார். அமுர்து - அமிர்தம், அருந்துதி-அருந்ததி, அதிசியம் - அதிசயம், கனுவாய் - கணவாய், தனுச்சு நிக்க - தனித்து நிற்க, பூந்து - புகுந்து, வார - வருகின்ற, தாமசம் - தாமதம், சுத்தத்தார் - சுற்றத்தார், வேணும்-வேண்டும், சுத்தி-சுற்றி, குமிச்சு-குவித்து, ரம்ப - நிரம்ப, தருகாமல்-தராமல் போன்ற பல வழக்குச் சொற்களைக் காணுகின்றோம்.

**கவிநயம்**

பனங்காடை குலத்தினரின் காணி ஊர்கள் 34. அதனைப் பல இடங்களில் பலவாறாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்,

''அய்யரையும் பத்தரையும் ஆறரையும் ஏழரையும்
மெய்யரையும் மூன்றரையும் வேண்டிவரும் ஊர்''

'நாலேழும் ஓராறும் நகர்'
'ஈரொன்ப தீரெட்டும் இலங்கும் நகர்'
'எண்மூன்றும் ஈரைந்தும் இலங்கும் நகர்'
'ஆறஞ்சு நாலூர்'
'ஈரேழும் இருபத்தும் இலங்கும் நகர்'
'மூவாறும் ஈரெட்டும் முயங்கு நகர்'

கொடு மணலை வருணிக்குமிடத்து

'கார்மேகம் நீர்மேகம் கருணை மழைமேகம்
பார்மீதில் தேடிவரும் பண்புகொடு மணலூர்' என்றும்

வானிகூடலாகிய பவானியைக் குறிக்குமிடத்து

'பொன்மாரி பூமாரி பொழியும் மழைமாரி
நன்மாரி தேடிவரும் நானிலத்தின் நல்லூரான்
தேன்மாரி மின்மாரி தெளியும் புனல்மாரி
வான்மாரி தேடிவரும் வானிகூ டல்அதிபன்'

என்றும் நயம்படக் கூறுகின்றார்.

'பருதிநீர் பொய்த்தாலும் பரிதிமதி பொய்த்தாலும்
சுருதிமறை பொய்த்தாலும் சொன்னமொழி
பொய்யாதான்'

என்று தலைவனைக் குறிக்கும் இடம் நயம் மிக்கது.

**உவமைகள்**

நல்ல உவமைகளை ஆசிரியர் பல இடங்களில் கையாளு கின்றார்.

'கும்பகருணன் படைபோல்'
'இராமர்படை இராவணனை நாடி வளைத்தாப்போல்'
'வெயிலவனைக் கண்டு விலகும் பனிபோல'
'சிலம்பு வளைந்தாப்போல் திருத்திய கொண்டை'
'இனம் பிரிந்த மான்போல'
'எள்ளுக்குள் எண்ணெய் இருந்து கலந்தாப்போல்'
'கூத்தாடும் பெண்களைப்போல்'

என்பன அவற்றில் சில உவமைகள்.

18-ஆம் நூற்றாண்டின் கொங்கு நாட்டு பழக்கவழக்கங்கள், பேச்சு மொழி, மக்கள் பெயர், உணவு முறை, கால்நடைச் செல்வம், மலைவளம், பெருமக்களின் வாழ்க்கை முறை, ஆடை அணிகலன்கள், ஊர்ப்பெயர்கள், ஆடவர் பெண்டிர் பெயர்கள் முதலிய வரலாற்றுக் குறிப்புக்களை அறிந்துகொள்ள இந்நூல் மிகத் துணைபுரியும்.

இத்துடன் பின்னிணைப்பாகக் கொடுமணல் தனிப் பாடல்களும், வேளாளர் குலப்பிரிவுப் பாடல்களும், பனங்காடை காணிப்பாடல்களும், கந்தசாமியின் தம்பி சிறிய தந்தை மகன் பொன்னையன் மேல் எழுதப்பெற்ற காதலும் இணைக்கப் பட்டுள்ளன. கொடுமணல் பற்றியும், கொங்குநாடு பற்றியும் ஆய்வு செய்வோருக்கு இவை துணையாக அமையும்.

**புலவர் செ. இராசு,** எம்.ஏ;
பதிப்பாசிரியர்.

# கந்தசாமிக் காதல்

# கந்தசாமிக் காதல்

## காப்பு

சென்னெல் எழுமாத்தூர் செய்கந்த சாமியெனும்
மன்னன்மேல் காதல் மகிழ்ந்துரைக்கக் - கன்னல்மொழி
செப்ப வரமுதவும் செய்யசிவ காமியருள்
அப்பனெங்கள் அய்ங்கரனே காப்பு.

## அவையடக்கம்

முத்தமிழைக் கற்றுணர்ந்து மூதறிவுண் டானவர்கள்
குத்தமொன்று பாராட்டிக் கொள்வதுண்டோ - இத்தலத்தில்
நல்லபெரி யோர்கள்முனே நாயொன் றறியாமல்
செல்வதுபோல் செப்பினேன் யான்.

---

எழுமாத்தூர் - கொங்கு நாட்டின் உட்பிரிவு நாடான பூந்துறை நாட்டின் நான்காம் தலைநகர். கன்னல் - கரும்பு. செப்ப - கூற. அய்ங்கரன்-ஐந்து கைகளையுடை விநாயகன். குத்தம் - குற்றம் என்ற சொல் எதுகை நோக்கிக் குத்தம் என்று வந்தது.

'கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு — மெல்ல
இருப்பினும் நாய்இருந் தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று'

என்ற நாலடியார் பாடல் நினைவுக்கு வருகிறது.

## தலைவன்

வேந்தனெழு மாதைநகர் விளங்குபனங் காடைகுலன்
சாந்த குணவசனன் சாமிமகா ராசனருள் 1

ஆழிசூழ் கொடுமணலூர் ஆளும் புவிராசன்
மேழிக் கொடிக்கதிபன் மிக்கபிடா ரப்பனருள் 2

வாகுகன உல்லாசன் வளர்பிடா ரப்பனருள்
பாகான ரூபன் பழனிமகா ராசனருள் 3

பண்பான யோகன் பழனிமகா ராசனருள்
நண்பான சீர்க்கந்த சாமி நராதிபன்மேல் 4

## கடவுள் வாழ்த்து

கூவிவருங் காதலுக்குக் கூர்ந்து மனதிரங்கி
மேவி யருள்புரியும் வினாயகனே முன்னடவாய் 5

சித்திரமொழி நேயன் சிறந்தகந்த சாமிமன்னன்
வெத்திபெறுங் காதலுக்கு விநாயகனே முன்னடவாய் 6

---

1. எழுமாதை - எழுமாத்தூர்; பாட்டுடைத் தலைவன் கந்தசாமியின் பூர்வீக ஊர்; அங்கிருந்து கொடுமணலுக்குக் குடியேறியவர்கள் எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தினர்; பனங்காடை - கொங்கு வேளாளர்களின் குலப்பிரிவு களில் ஒன்று. காடை என்பதும் மற்றோர் தனிப்பிரிவு. அது சாகாடை எனவும் வழங்கப்பெறும்.

   தாழைவனம் பூகவனம் சந்தனப்பூங் காவனமும்
   வாழைவனம் சூழ்எழு மாத்தூரே - தாழை
   நகர்மே படைத்த நகர்மே படைத்த
   நகர்மே படைத்த நகர் (தனிப்பாடல்)

2. ஆழி - கடல்; மேழிக்கொடி - வேளாளர்கட்குரிய கொடி; வேளாளர் களை 'மேழித்தேவர்' என்று ஏரெழுபது கூறும். 'சித்திரமேழிப் பெரியநாட் டார்' என்ற கல்வெட்டுத் தொடரும் காண்க. அதிபன் - தலைவன். 'யெழு மாத்தூரு பொன்மேழித் துவசனாகிய பனங்காடை கோத்திரத்தில் காங்கய கவுண்டன் மகன் பொங்கியண கவுண்டன்' (முருகன் பூண்டிக் கிரைய சாசனம்)

3. ரூபன் - அழகியோன். வாகு - தோள். கனம் - உறுதி. உல்லாசன் - மகிழ்ச்சியோடு இருப்பவன். பாகு - இனிமை.

4. நராதிபன் - மக்கள் தலைவன்: சாமி மகாராயர், பிடாரப்பன், பழனி மகாராசன் ஆகியோர் பாட்டுடைத் தலைவர் கந்தசாமியின் முன்னோர்.

5. கூர்ந்து - மிகுதியாக; மேவி - பொருத்தமாக; முன்னடவாய் - கவி தையை முன்னடத்திச் செல்லுவாயாக என்பது பொருள். பிற்கால இலக்கியங் களில் இச்சொல் பயின்று வருகின்றது.

6. எதுகை நோக்கி வெற்றி வெத்தி எனத்திரிந்தது. சித்திரம் - சிறப்பு (பிங்கலம்).

குவளையணி மார்பன் குபேரன்கந்த சாமிமன்னன் 7
நவமணிசேர் காதலுக்கு நல்வாணி முன்னடவாய்

செந்தமிழ்சேர் நல்லூர் சிறந்தகந்த சாமிமன்னன் 8
விந்தைசெறி காதலுக்கு விசாலாட்சி முன்னடவாய்

அன்பான கொடுமணலூர் ஆளுங்கந்த சாமிமன்னன் 9
இன்பமுள்ள காதலுக்கு ஈசுபரியும் முன்னடவாய்

துரைராச ராசன் துலங்குங் கந்த சாமிமன்னன் 10
நிரைசேருங் காதலுக்கு நீவருவாய் லட்சுமியே

## தலைவனின் பக்தி

கோபத்தை நீக்கிக் குவலயத்தி லன்னமிட
ஆபத்தைக் காத்த அய்ங்கரனைக் கைதொழுவோன் 11

தக்க புகழ்விளங்கத் தாட்டியங்கள் வேணுமென்று
சொக்க விநாயகனைத் தொழுவா னனுதினமும் 12

இன்னிலத்தில் அன்னசொன்னம் இயல்பாய் விளங்கிவர
வன்னீசர் பொற்பதத்தை மறவாமல் போற்றிசெய்வோன் 13

ஆரமணி பூண்ட அஷ்டலட் சுமியிலங்க
வீரநா ராயணனை வேண்டிப் பணிந்துகொள்வோன் 14

---

7. வேளாளர்கட்குக் குவளை மாலை உரிமையுடையதாகும்.
'கைக்குவளை பூண்மாதர் கண்பறித்து வைத்ததென
மெய்க்குவளை மாலையணி மேவு புயாசலத்தான்'
(நல்லதம்பிச் சர்க்கரை காதல். 25)

குபேரன் - செல்வத்திற்குத் தலைவன்.

8. நல்லூர்-பனங்காடை குலத்துக் காணிகளில் ஒன்று. சுந்தரபாண்டிய நல்லூர் எனவும் வழங்கப் பெறும். விந்தை - அழகு.

9. ஈசுபரி – ஈசுவரி

10. துலங்கும் - விளங்கும்; நிரை - முறைமை.

11. குவலயம் - உலகம்.

12. தாட்டியம் - வலிமை; சொக்க வினாயகன் - கொடுமணல் கிராமத்தில் உள்ள பல வினாயகரில் ஒருவர்.

13. சொன்னம் - பொன்; வன்னீசர்–கொடுமணலில் உள்ள சிவபெருமான்; அக்னீசுவரர் என்பதன் மொழிபெயர்ப்பு; வன்னி - நெருப்பு. 'இவ்வூர் திரு வக்நீஸ்வரமுடையார் தேவதானம்' கொடுமணல் குருக்கள் மானியக் காட்டுக் கல்வெட்டு.

14. வீரநாராயணர் - கொடுமணலில் உள்ள திருமால்.

வல்லாண்மை கொண்டுநித்தம் மறையவர்க்குச் சொர்னமிடச்
செல்லாண்டி யம்மனுட சீர்பாதம் போற்றிசெய்வோன் 15

நித்தந் தவறாமல் நீணிலத்தி லன்னமிட
அத்தனூ ரம்மனுட அடியிணையைப் போற்றிசெய்வோன் 16

சாமமென்று வந்தவர்க்குச் சலியாம லன்னமிட
மாமதுரை காளி மலர்ப்பதத்தைப் போற்றிசெய்வோன் 17

மங்காம லெந்நாளும் மாநிலத்தி லன்னமிடத்
தங்கமார் பொற்பதத்தைத் தயவாய்ப் பணிந்துகொள்வோன் 18

வத்தாத பாக்கியங்கள் வந்துதவ வேணுமென்று
முத்தாலை யம்மனையும் முக்காலம் போற்றிசெய்வோன் 19

வாரிதரும் செல்வம் வந்துதவ வேணுமென்று
மாரியம்மன் பொற்பதத்தை மறவாமல் போற்றிசெய்வோன் 20

நம்பி வருவார்க்கு நானிலத்தி லன்னமிட
தம்பிராட்டி யம்மனையும் தயவாய்ப் பணிந்துகொள்வோன் 21

கோவெருது கன்றுகுரி குபேரசம்பத் துண்டாக
ராவுத்த னாயகியை நாள்தோறும் போற்றிசெய்வோன் 22

---

15. மறையவர் - அந்தணர்; செல்லாண்டியம்மன் - கொடுமணலில் உள்ள அம்மன்; கொங்கு நாடெங்கும் பல இடங்களில் செல்லாண்டியம்மன் கோயில்கள் உண்டு. மதுக்கரைச் செல்லாண்டியன் மூலக்கோயிலாகும்.

16. அத்தனூரம்மன்-கொடுமணலில் அத்தனூரம்மன் கோயிலும் உள்ளது.

17. மதுரகாளி – கொடுமணல் சிலாசாசனக்காட்டுக்கருகில் இக்கோயில் உள்ளது. சாமம் - பஞ்சம் (க்ஷாமம்).

18. தங்கமார் - தங்கம்மன் என வழங்கும் அம்மன் கோயில் கொடுமணலில் நொய்யலாற்றின் தென்கரையில் உள்ளது. கொங்கு வேளாளரில் பனங்காடை குலத்தினர்க்கும், சேரன் குலத்தினர்க்கும், பாண்டியன் குலத்தினர்க்கும், தேவர்களில் கணக்கன் கூட்டத்திற்கும், காணிதெய்வம். இங்கு சப்த கன்னியர் (எழுவர்) எழுந்தருளியுள்ளனர்.

19. வத்தாத-வற்றாத; முத்தாலையம்மன் கோயில் கொடுமணலிலுள்ளது.

20. மாரியம்மன் - கொடுமணல் மாரியம்மன். வாரி - விளைவு;
'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்' (புறம் 35)

21. தம்பிராட்டியம்மன் - கொடுமணலுக்குத் தெற்கே 2 கி. மீ. தூரத்தில் உள்ள தம்பிராட்டிபாளையத்தில் உள்ள அம்மன். கோயிலால் ஊருக்குப் பெயர் வந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் மரபினர் நாச்சிமுத்துப் புலவர் இவ்வூரினர்.

22. கோ - பசு; குரி - ஆடு; (குறி கன்னடம்) சம்பத்-செல்வம்; ராவுத்த னாயகி - இராவுத்தமார் சாமியின் பெண்பால் தெய்வம் போலும். சீதைக்கும் இப்பெயர் உண்டு. (இந்நூல் கண்ணி-503)

ஏதேது காரியங்க ளெல்லாம் விளங்கிவர
மாதேச லிங்கரையும் மறவாமல் போற்றிசெய்வோன் 23

குடைகுதிரை சூரியபான் கொற்றவர் தான்கொடுக்க
படைத்தலைச்சி யம்மனுட பாதம் மறவாதான் 24

நாட்டும் புகழ்விளங்கும் நல்லதெய்வ மல்லாண்டார்
காட்டுக் கருப்பணனைக் கைதொழுது போற்றிசெய்வோன் 25

நீடூழி யாயிருக்கும் நிலையான தன்மனையில்
தேடிவருந் தேவதையைத் தினமும் பணிந்துகொள்வோன் 26

பொய்யாத வாய்மையுள்ள புத்திரசந் தானமருள்
வய்யா புரித்துரையை மறவாமல் போற்றிசெய்வோன் 27

குருமொழிக்குள் மெய்யான கொடுமுடிப் பண்டிதனார்
தருபதத்தை யெந்நாளும் தயவாய்ப் பணிந்துகொள்வோன் 28

**பனங்காடைக் காணியூர்கள்**

நல்லூர் கொடுமணலூர் நாரியெழு மாதைநகர்
வெல்லும் மருதுறையும் விளங்குதிங்கள் மாநகரும் 29

கோனூர் முடக்குறிச்சி குவலயத்தில் ஆத்தூரும்
மானூர் பிரமியமும் வானிகூ டல்பதியும் 30

ஆனங்கூர் கொன்னை ஆரும் பனையம்பள்ளி
சேனை நகர்க்கதிபன் செய்யபனங் காடைகுலன் 31

நலஞ்சிறந்த காராளன் நற்குவளை மார்பன்
குலமிகுந்த சோமனெனும் குறிப்புவள நாடதிபன் 32

---

26. இல்லுறை தெய்வம் இங்கு குறிக்கப்படுகிறது.

27. புத்திர சந்தானம் - மக்கட்பேறு; வய்யாபுரித்துரை - பழனி முருகன்; வைகாவூர் வய்யாபுரி ஆயிற்று.

28. கொடுமுடிப் பண்டிதனார் - பனங்காடை குலத்தினரின் குலகுருவினர்; மருதுறையைச் சார்ந்தவர்கள். கொடுமுடியின் பெயர் தாங்கியவர்கள்.

28-31. கொங்கு வேளாளரில் பனங்காடை குலத்தினரின் காணிஊர்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. 'எழுமாதர் போற்றும் எழுமாதை' என்ற பழம் பாடலினை எண்ணி நாரி எழுமாதை என்றார். நாரி - பெண்கள்; திங்கள் மாநகர் - திங்களூர்.

30. வானிகூடல் - பவானி.

32. குறிப்பு வளநாடு - கொங்கு 24 நாடுகளில் ஒன்று. இந்நாட்டு ஊர் களின் பட்டியலைப் பின்னிணைப்பில் காண்க.

குலஞ்சிறந்த காராளன் குவளை யணிமார்பன்
நலஞ்சிறந்த வீர சோழபுர நாடதிபன் 33

வெத்திதரும் வேதகிரி விளங்கும் சிவகிரியும்
பத்திதரும் சிரகிரியைப் படைத்த மகராசன் 34

கார்மேகம் நீர்மேகம் கருணை மழைமேகம்
பார்மீதில் தேடிவரும் பண்புகொடு மணலூரான் 35

பொன்மாரி பூமாரி பொழியும் மழைமாரி
நன்மாரி தேடிவரும் நானிலத்தில் நல்லூரான் 36

தேன்மாரி மின்மாரி தெளியும் புனல்மாரி
வான்மாரி தேடிவரும் வானிகூ டற்கதிபன் 37

## குடிச்சிறப்பு

வங்காரத் தென்தெற்கு வானவரைக் கைதொழுது
சிங்கார வித்தெடுத்துச் செய்யும் பயிர்க்கதிபன் 38

வேட னருந்தாமல் வேணுமென்று நல்லதெல்லாம்
ஆடரவம் பூண்ட அரனுக்குத் தந்ததுபோல் 39

தேக்கினங்க ளுண்ணாமல் தேடும் பொருளையெல்லாம்
காக்க வரமருளும் கர்த்தனுக்குத் தந்ததுபோல் 40

தீப மணிமார்பன் செகராசர் தங்களுக்குத்
தாப விடாய்தீர்க்கத் தருவான் திரவியத்தை 41

## பெரிய தந்தை

சேலழகன் முத்துமன்னன் சிறந்தசின்னத் தம்பிமன்னன்
மாலழகன் ராசதுரை மகராசன் லிங்கேந்திரன் 42

---

33. வீரசோழபுரநாடு - குறுப்பு நாட்டின் வேறுபெயர். முகுந்தனூர்ப் பட்டயத்திலும் கொடுமணல் கல்வெட்டிலும் இந்நாடு குறிக்கப்படுகிறது.

34. வேதகிரி - ஊராட்சிக்கோட்டை மலை: சிரகிரி - சென்னி மலை.

38. தென்புலத்தார் (முன்னோர்) வழிபாடு இங்கு சுட்டப்படுகிறது போலும்.

39. கண்ணப்ப நாயனார் வரலாறு குறிக்கப்படுகின்றது.
'தின்றுருசி யானகறி தன்னைச்—சிவனே
தின்னப்பா எனக் கொடுத்த கண்ணப்பன்' (திங்களூர் நொண்டி)

40. பட்டினத்தார் பாராட்டும் வரகுணன் போலும்.

சிந்தை களிகூர்ந்து செய்யபெரி யய்யனென்று
விந்தையுடன் கூறி விளம்புகந்த சாமிமன்னன் 43

### சிறிய தந்தை

ரதிமதன ஈசுபர மூர்த்திரா சேந்திரனை
அதியமுள்ள சின்னையனென் றன்புடனே தான்கூறும் 44

### தமையன்மார்

ஏருலவும் பழனிமன்னன் இயல்புபிடா ரப்பனையும்
தாருலவும் பூவுலகில் தயவு தமையனெனும் 45

முடிமன்னர் கொண்டாடும் முத்துக் குமாரனருள்
படிமீதில் விசையரங்க பூபாலன் தமையனெனும் 46

அகமகி ழும்பிடா ரப்ப னருள்பாலன்
பகரறிய சுப்பய்ய பூபாலன் தமையனெனும் 47

செங்கமல மார்பழகன் செங்கோட ராசனருள்
தங்கமிகும் அத்தப்ப பூபாலன் தமையனெனும் 48

### தம்பிகள்

மூவுலகில் முத்துப் பிடாரப்ப பூபதியும்
நாவலர்கள் கொண்டாடும் நல்லமுத்துப் பொன்னையனும் 49

மோதுபுகழ் கெட்டிமுத்து முத்துப் பழனிமன்னன்
மாதுசெரி பொன்னையனும் மன்னன்முத்து லிங்கயனும் 50

கெம்பீரஞ் சென்னிமலை கிரீடபதி தன்னுடனே
தம்பிமா ரெழுவரையும் தயவாய்ப் படைத்துவந்தோன் 51

---

43. களி - மகிழ்ச்சி; பெரியப்பாவைப் பெரிய அய்யன் என்றும் சித்தப்பாவைச் சின்னையன் என்பதும் கொங்கு நாட்டு வழக்கு.

46. படி - உலகம்.

47. பகரரிய - சொல்ல இயலா.

48. கமலம்-தாமரை.

49. நாவலர் - கற்றறிந்தவர்.

50. மாதுசெரி - புகழ்மிக்க. 'மாதுபடு நோக்கினவர்' (சீவக, 499)

51. கிரீடபதி-மகுடபதி; இன்றும் கொங்கு நாட்டில் இப்பெயரிடுதல் வழக்கமாக உள்ளது.

## மைத்துனன்மார்

சிங்காரப் பெருந்தொழுலூர்ச் செய்யபுகழ் ஓதாளன்
மங்காத முத்துக் குமாரமன்னன் மைத்துனனாம் 52

பேரான பெருந்தொழுலூர்ப் பிரதாப னென்னும்அந்தச்
.சீரான ராமயனும் செய்யபுகழ் மைத்துனனாம் 53

வையகத்தில் தென்கொடுவாய் வாழ்கின்ற ஓதாளன்
பொய்சொல்லா மைத்துனனாம் புகழ்மா ரதிபூபன் 54

அமக்கைநக ராளும் அழகுபொரு ளந்தைகுலன்
சமத்தான நல்லயனும் தயவான மைத்துனனாம் 55

பாண்டிய குலராசன் பண்புகந்த சாமிமன்னன்
வேண்டியதெல் லாங்கொடுக்கும் வித்தார மைத்துனனாம் 56

## கொடைச்சிறப்பு

முந்துபனங் காடைகுலன் முத்துக்கந்த சாமிமன்னன்
இந்து செறிவதென்ன ஈரைந்து நாடதிபன் 57

பழிப்பார்க ளென்று பயந்து மறைச்சுக்
களிப்பார்கள் தங்கள்முன்னே காட்டுந் தனமுடையான் 58

வித்தார மானதுரை வெள்ளிவள்ளந் தானெடுத்து
முத்தான வாய்திறந்து மொழியும் பொழியெனவே 59

---

52. ஓதாளன்-கொங்கு வேளாளர்களில் ஒரு பிரிவினர். பெருந்தொழுலூர் ஓதாளர். 'ஓதுப்புகழ் சித்திரக் கொடிக்கதிபர் ஓதாளர்' (காணிப்பாடல்)

54. ஓதாளரில் ஒரு பிரிவினர் கொடுவாய் ஓதாளர். இவர்கள் மீது குறவஞ்சி நூல் ஒன்றுண்டு. கொடுவாய் ஓதாளர் தலைவனுக்குக் கொலு சேனை மன்றாடி என்ற பட்டம் உண்டு. (கொங்கு வேளாளர் வரலாறு பக். 156).

55. அமுக்கை நகர் - பொருளந்தை குலத்தாரின் காணி ஊரான அமுக்கயம்
'ஆதிகரு மாபுரம் காடையூர் தென்பள்ளி ஆதியூர் விசயமங்கை
அமுக்கயம் பரமத்தி புன்னமும் தோடயம் ஆறுதொழுவு'
(காணிப்பாடல்)

56, பாண்டியகுலம் - குளித்தலை, மூலனூர், கவசை முதலிய ஊர்களைக் காணியாகக் கொண்ட கொங்கு வேளாளர்கள். கொடுமணலிலும் இவர்கட்குக் காணி உண்டு.

57. வித்தாரம் - கல்வி கலைகளில் வல்லமை. 'பொதியக்குறுத்த வித்தார முனிக்கருள்' (மறைசை. 20) இந்து - சந்திரன்; பத்து நாடுகள் பனங்காடை குலத்தினர் பரவி வாழும் நாடுகள் போலும்.

யீரெட் டவுதான மியல்பாய்ப் படிப்பார்முன்
ஓரெட்டும் பத்து மொன்றுபிடி யென்பவர்தான் 60

## வாசல் வளம்

கண்டு மகிழ்ச்சியுடன் கவிவாணர் தங்களுக்குக்
குண்டு மிளகிஅன்னங் கூர்ந்துதவும் வாசலினான் 61

தஞ்சமென்று வந்தவர்க்குத் தயவாய் மனதிரங்கி
மஞ்சள் மிளகிஅன்னம் மகிழ்ந்துதரு வாசலினான் 62

தெள்ளுதமிழ்க் கொடுமணலூர் தீரன்கந்த சாமிமன்னன்
வெள்ளை மிளகிஅன்னம் விளங்கிவரு வாசலினான் 63

வன்ன மிளகி வரிமிளகி செம்மிளகி
சொன்ன மிளகிஅன்னம் துலங்கிவரும் வாசலினான் 64

அத்திபரி ஒட்டகமும் அணிமுரசு வீரசின்னஞ்
சித்தர்மணிப் பொற்சிவிகை சிறந்திருக்கும் வாசலினான் 65

முத்துமணி யிலங்கும் முகசாலை மண்டபத்தில்
வித்வசன ரெந்நாளும் வீற்றிருக்கும் வாசலினான் 66

பாராளுங் கொடுமணலூர் பண்புகந்த சாமிமன்னன்
காராளன் பொன்கலப்பை கட்டிவரு வாசலினான் 67

மரையெருது பில்லை மயிலை சிவலையுடன்
நிரைசேரும் பொன்னரக்கன் நின்றிலங்கும் வாசலினான் 68

---

60. ஈரெட் டவுதானம் - சோடசாவதானம் (பதினாறு கலைகளில் வல்லமை பெறுதல்) ஓரெட்டும் பத்தும் - 18 தரும நூல்கள், 18 புராணம் எனலாம்.

61. கவிவாணர் - புலவர்; மிளகு என்பதை மிளகி என்றே பாடுகிறார்.

62. தஞ்சம் - அடைக்கலம்.

64. துலங்கி - விளங்கி: நான்கு வரிகளில் மிளகி என்ற சொல் பலமுறை வந்து சுவை அளித்தல் காண்க.

65. அத்தி - யானை: சிவிகை - பல்லக்கு.

66. முகசாலை - முன்மண்டபம்; வித்வசனர் - புலவர்கள்.

67. பார் - உலகம், காராளன் - உழவன்; உழவின் தொடக்கத்தில் பொன்னேர் பூட்டி விழாவெடுப்பது பண்டைய மரபு.

'காடுவெட்டி உலகநெறிக் காராளர் காத்திலரேல்' (ஏரெழுபது-41) கரூர்ப் பக்கத்துப் பெருங்குடி வேளாளர் காராளர் என்றே பெயருடன் சேர்த்துக்கொள்கின்றனர்.

68. மரை - வரிக்கோடுகளை உடையது. பில்லை - மரவண்ணம் உடையது. சிவப்பு - செம்மை நிறம் கொண்டது; அரக்கன் - கருப்பு நிறமுடையது: செம்பூதை - செம்போத்து நிறம் உடையது. 68, 69 - கண்ணிகளில் எருதுகளின் பல்வேறு வகைகள் சுட்டப்படுகின்றன.

செம்பூதை கரும்பூதை சிறந்த பெருங்காரி
கொம்பு வளந்தவெள்ளை கூடிவரும் வாசலினான் 69

நாட்டார் புவியரசர் நானிலத்தி லுள்ளவர்கள்
கேட்ட மனுவிளங்கும் கீர்த்தியுள்ள வாசலினான் 70

சேர னுடன்சோழன் தென்மதுரைப் பாண்டியனும்
பார மணிமகுடம் பண்புதரு வாசலினான் 71

ஈசன் துணைவி இருநான்கு லட்சுமியும்
நேசமுட னெந்நாளும் நின்றிலங்கும் வாசலினான் 72

காசிவிசு வேசருடன் கருணைவிசா லாட்சியம்மன்
வீசி நடந்துவந்து விளையாடும் வாசலினான் 73

மதனரதிக் கொப்பான மங்கையர்க ளோடிவந்து
பதம்பாடி யெந்நாளும் பந்தாடும் வாசலினான் 74

கங்கை குலதிலதன் கனகமுடி மன்னியர்சூழ்
பொங்கலூர் நாட்டிலுள்ள பெண்ணிலங்கும் வாசலினான் 75

**பண்பு நலன்கள்**

பருதிநீர் பொய்த்தாலும் பரிதிமதி பொய்த்தாலும்
சுருதிமறை பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான் 76

இமையவர்கள் பொய்த்தாலும் இந்திரனார் பொய்த்தாலும்
உமைபாகர் கிருபையினால் உற்றமொழி பொய்யாதான் 77

---

72. நேசம் - அன்பு; இருநான்கு லட்சுமி-அட்டலட்சுமி என்பதும் வழக்கு.

73. தெய்வம் அருட்குடி கொண்டுள்ள இல்லம் என்பது.

74. சிலம்பின் கந்துக வரிப்பாடல் நினைவுகூரத் தக்கது.

75. கங்கை குலம்-கொங்கு வேளாளர்களைக் கங்கை குலத்தினர் என்பது வழக்கு. 'கங்கா குலம் விளங்கக் கம்பர் சொன்ன வாக்கியத்தை'' (வேளாளர் மங்கல வாழ்த்து); கனகம் - பொன்; பொங்கலூர் நாடு கொங்கு 24 நாடுகளில் ஒன்று; பொங்கலூர்க்கா நாடு என்பது கல்வெட்டு வழக்கு.

76. பருதி - வாருதி (கடல்); பரிதி - சூரியன்; மதி - சந்திரன்; சுருதி-வேதம்.

'மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்''
(கூள. காதல். 31)

77. இமையவர் - தேவர்; உமைபாகர் - சிவபெருமான்; கிருபை-அருள்.

மண்ணாளும் வேந்தருக்கும் மாநிலத்தி லுள்ளவர்க்குங்
கண்ணாரக் கண்டதெய்வம் காராளத் தெய்வமென்றே 78

காலக் கிரயமுடன் கண்டுகொண் டௌஞ்சுநகர்
ஓலக்கஞ் செய்து உலாவிவரும் ராசேந்திரன் 79

## வேட்டைமேல் விருப்பம்

நாடுகட்டிச் செங்கோல் நடத்துகந்த சாமிமன்னன்
கோடுகட்டி வேட்டையிப்போ கொண்டுவர வேணுமென்று 80

கனிவாய் மொழிநேயன் காமன்கந்த சாமிமன்னன்
இனியபுக ழோலை எழுதுமென்று தானுரைத்தான் 81

## தலைவன் ஆணை

கூறு மொழிகேட்டுக் கூர்ந்துமுத்து வேல்பிள்ளை
தேறு புகழோலை செய்யும்வகை செப்புமென்றார் 82

அய்யரையும் பத்தரையும் ஆறரையும் ஏழரையும்
மெய்யரையும் மூன்றரையும் வேண்டிவரும் ஊர்தனக்குத் 83

தீர்க்கமுள்ள காராளன் தெய்வகுல மன்னவர்க்கு
நாற்றிசையும் கொண்டாடும் நகரிலுள்ள பேர்களுக்கும் 84

அய்யாறு நாள்வேட்டை ஆடிவர வேணுமென்று
மெய்யான வாய்திறந்து விளம்பி யெழுதுமென்றார் 85

---

78. வீறுடன் வார்த்தை யுண்டோ மாமேருக் கப்பால் இப்பால்
ஊறுடன் கிணறு போல உதவிய செங்கை மேகம்
பாறிடும் கலிய கன்ற பாணிவே ளாளர் தம்மை
சோறிடும் தெய்வ மென்றும் சொல்லுவோம் சொல்லு வோமே
என்ற தனிப்பாடலும் வேளாளரைத் தெய்வமென்று கூறும்.

80. கோடு - எல்லை.

81. காமன் - மன்மதன்; ஓலை-வேட்டைக்குப் போகும் செய்தி அறிவிக்கும் ஓலை.

82. முத்துவேல் பிள்ளை - கணக்கர்.

83. அய்யரை (5·5), பத்தரை (10·5). ஆறரை (6·5). ஏழரை (7·5). மெய்யரை (·5). மூன்றரை (3·5)—மொத்தம் 34 ஊர்கள் பனங்காடை குலத்தினரின் காணி ஊர்களாம். அவ்வூர்களில் உள்ள பங்காளிகள் அனைவருக்கும் ஓலை அனுப்புகின்றனர்.

84. நாற்றிசை - நான்கு திசை.

85. அய்யாறு நாள் - முப்பது நாள்; விளம்பி - சொல்லி.

DEPARTMENT ... MADRAS 109

## ஓலையில் உள்ள செய்தி

விள்ளுமொழி தப்பாமல் விளங்குமுத்து வேல்பிள்ளை
உள்ளம் மகிழ்ந்துகொண்டு ஓலை யெழுதலுற்றான் 86

வேட்டைக் கழகான வெள்ளிகட்டுந் துப்பாக்கி
சாட்டைக் கயிற்றுடனே சக்கிமிக்கி தப்பாமல் 87

ஒட்டுப் பருசுகத்தி ஓங்குபிடி அம்புகளும்
விட்டுப் பரந்தாடும் வீரமுள்ள சக்கரமும் 88

வளந்தபன்றி வேலும் வளைதடியும் கைவெடியும்
இளந்தாரி வீரியர்க ளெல்லோரும் தான்கூடி 89

மூப்பு முதுமைசென்ற முத்துமுடி மன்னவரும்
தாப்பான கொடுமணலூர் தன்னில்வந்து கூடுமென்றான் 90

வரிசையாய் அவரவர்க்கு வகைவிபர மாயெழுதி
துரிதமாய் ஓலைதனைத் தோட்டிகையில் தான்கொடுத்து 91

## உள்ளூர் மக்களுக்குச் செய்தி

ஓலை யனுப்பினபின் உள்ளூரி லுள்ளவர்க்கும்
வாலைசவுந் தரியவான் வாழ்கந்த சுவாமிமன்னன் 92

சேடர் வணிகர் சேணியர்செங் குந்தருடன்
வேடர் மறவர் விதமான ஒக்கிலியர் 93

வடுகத் தெலுங்கர் வண்டிஒட்டர் உப்பிலியர்
கொடுமணலூர்க் கழகான குச்சி யாரியரும் 94

கறைக்கழுத்தின் பட்சிடகாய் கடியர் தங்களுக்குத்
திறைக்குரிய மன்னவரைத் தேடி யெடுப்பவர்க்கும் 95

முன்னேழும் பின்னேழில் மோது மனைதோறும்
என்னேரம் பொருள்தேடு மியல்பான வலையருக்கும் 96

---

86. விள்ளு - சொன்ன.

87-89. கண்ணிகளில் வேட்டைக்கு எடுத்துக்கொண்டு செல்லும் பலவகையான ஆயுதங்கள் கூறப்படுகின்றன. இளந்தாரி வீரியர் - ஏவலாட்கள்.

91. துரிதம் - விரைவு; தோட்டி - ஊர்ப்பணியாளன்.

92. வாலை சவுந்தரியவான்-இளமையும் அழகும் உள்ளவன்.

94. குச்சி ஆரியர்-அந்தணர்; குச்சி என்பது தருப்பைப் புல்லைக்குறிக்கும் குசை என்பதன் திரிபு. ‘குடமும் குச்சியும் கொண்டு கோயில் உள்புகுவாரே இத்தன்மம் இரட்சிக்க’ என்பது கொங்கு நாட்டுக் கல்வெட்டுத் தொடர்.

எல்லவர்க்கும் வேட்டையென் றியல்பாய் முரசறைய 97
வல்லமைசேர் பனங்காடை மகராசன் சொல்லுமென்றான்

## சாம்புவனின் வேட்டை முரசு

உண்மை மொழிகேட்டு ஊழியக் காரன்வந்து 98
வன்மையுடன் சாம்புவனை வரவழைத்துச் சொல்லலுற்றான்

சாமி பராக்கென்று சாம்புவனும் ஓடிவந்து 99
பூமியெங்குந் தானதிரப் பொலிவான கனமுரசு

இனஞ்சேருந் திங்களொன்று இதமான வேட்டையென்று 100
சனந்தோறுந் தப்பாமல் தான்முரசு சாற்றலுற்றான்

அரிசி பருப்பு அதற்கான முஷ்திதியும்
வரிசை குறையாமல் வரவேணு மென்றுரைத்தான் 101

## வேட்டைக்குக் கூடுதல்

முரசுத் தொனிகேட்டு முத்துமக்க ளாத்தூரர்
சிரசுக் கழகான சிகப்புவர்ணப் பாகுகட்டி 102

பச்சொண்டி முத்தொண்டி பதக்கந் தனையணிந்து
உச்சிதமாய்த் தங்கவளை ஒளிவுபெறத் தானணிந்து 103

வெங்களூர் பட்சடமும் வேண்டும் பணிதியுடன்
தங்கநிறச் சோமன் தயவாகத் தான்தரித்து 104

புனுகு பரிமளமும் பூசுமகில் சந்தனமும்
குளுமை யுடன்தரித்துக் கூர்ந்து அமுதருந்தி 105

தன்குலத்து மன்னவரும் தம்பிமார் தன்னுடனே
பின்கலந்து கூடிவரும் பிரதானி மார்களுடன் 106

அவரவர்கள் கட்டுவர்க்கம் அழகாகத் தான்தரித்து
நவமணிசே ராணுவமும் நன்றெனவே வந்துசென்றார் 107

100. திங்கள் - மாதம்.

101. முஸ்திதி - வேண்டும் துணைப்பொருட்கள்.

102. பாகு - தலைப்பாகை.

103. உச்சிதம் - அழகு; பச்சொண்டி, முத்தொண்டி-ஆண்கள் அணியும் மார்புப் பதக்கம்.

104. வெங்களூர் - பெங்களூர்.

106. பிரதானிமார் - அதிகாரிகள்.

107. கட்டுவர்க்கம் - ஆடை, அணிகலன் அணிய வேண்டிய முறை. 102-7 ஆடை அணிகலன்கள் கூறப்படுகின்றன.

சென்றதொரு ஆத்தூரார் சேனைதள மத்தினையும்
இன்று பயணமென்று எல்லோருந் தான்கூடி 108

அழகான வெண்பரியும் ஆனைமேல் பேரிகையும்
நளராச னாத்தூரர் நற்சிவிகை மீதேறி 109

தாரை நவுரி தவில்முரசு வீரசின்னம்
பூரிகையும் எக்காளம் புகழ்ந்து விளங்கிவர 110

ஓங்குபுகழ் காவேரி ஓடந் தனிலேறி
பாங்குபெறும் எழுமாத்தூர்ப் பாதைவந்து சேரலுற்றார் 111

இங்கிதஞ்சே ரெழுமாத்தூர் இயல்பான மன்னனுடன்
பொங்கமுள்ள கொடுமணலூர்ப் பூங்காவில் வந்திருந்தார் 112

மாதுசெறி பிரமியத்தார் வானிகூ டல்பதியார்
ஓதும் மருதுறையார் உற்றதிங்கள் மாநகரார் 113

ஆடவரெல் லாங்கூடி அழகு கொடுமணலூர்
தேடரிய பொன்மாரி திருச்சன்னதி முன்வந்தார் 114

முடக்குறிச்சி கோனூரரார் முந்துகொன்னை மாநகரார்
மடக்கொடிசேர் மானூரரார் வளரும் பனயம்பள்ளி 115

ஏற்கைதரும் ஆனங்கூர் இலங்கிவரும் அய்ந்தூரரார்
வாக்குதவுங் கொடுமணலூர் வன்னீசர் கோயில்வந்தார் 116

பாகுமொழி நடுநகரார் பாங்குதிருப் பூர்மார்க்கம்
வாகுபெரு நல்லூரர் மகராசன் பக்கல்வந்தார் 117

இதமாய் நடுவைநகர் இயல்பான மன்னவர்க்கு
விதமான போசனமும் வெள்ளிலையுந் தான்கொடுத்தார் 118

கவிராசர் தனைக்காக்கும் கரன்பிடா ரதுரையும்
புவியாளும் தம்பி பொன்னையனுந் தானழைத்து 119

---

109. பரி - குதிரை.

110. தாரை, நவுரி, தவில், முரசு, வீரசின்னம், பூரிகை, எக்காளம் ஆகியவை வாத்தியக் கருவிகள்.

112. இங்கிதம் - உளம் அறிதல்.

113. வானிகூடல்-பவானி; திங்கள் மாநகர் - திங்களூர்.

116. அய்ந்தூர் - அஞ்சூர்; பெரியார் மாவட்டம் சிவகிரியின் அருகேஉள்ள தோர் ஊர்.

117. நடுநகர் - நடுவச்சேரி.

118. போசனம் - உணவு வகை; வெள்ளிலை - வெற்றிலை.

நாடாளுங் கெட்டிமுத்து நல்ல பழனிமன்னன்
கோடான கோடி குடிமன்ன ரெல்லோரும் 120

முத்துக் குழந்தைவேல் முதலான கண்ணாளன்
சித்திரவித் தாரமுள்ள சிதம்பரத் தாண்டவனும் 121

நட்டுமுட்டுச் சங்கீதம் நாடகசா லைக்கிசைந்த
எட்டுவகைச் சனமும் இவர்கள் பிரியாமல் 122

செகராச ராசன் செய்யபிடா ரேந்திரதுரை
மகராச ராசன் மண்டகத்தில் வந்திருந்து 123

தேன்குழலும் அதிரசமும் செய்யபர மான்னமுடன்
தான்வேணு மென்றதெல்லாம் தயவா யமுதருந்தி 124

வச்சிர மணிக்கடுக்கன் வயிடூரி யம்பதக்கம்
மெச்சிவருந் தங்கவளை மேல்முருகு தானணிந்து 125

புராண புரிபாகும் பொற்கெண்டைச் சாலுவையும்
திராணி மகராசன் திரணவல்லி அங்கிதொட்டு 126

ஏகாந்தப் பொன்னையனும் இன்பமுள்ள கெட்டிமுத்தும்
வாகான பழனியப்பன் மற்றுமுள்ள பேர்களுடன் 127

செப்பரிய நடுநகரார் செய்யபுகழ் நல்லூரார்
இப்பநல்ல வேளையென்று எல்லோருந் தான்கூடி 128

## வேட்டை வெற்றிக்கு இறைவணக்கம்

தென்காசி விசுவேசர் தேவிவிசா லாட்சியம்மன்
அன்பான பொற்பதத்தை அடிதொழுது தெண்டனிட்டு 129

வில்லா லுயர்ந்த வெடிக்கார ரெல்லோரும்
செல்லாண்டி யம்மன் சீர்பாதம் போற்றிசெய்து 130

கொஞ்சி மகிழ்ந்துவரும் கொற்றவர்க ளெல்லோரும்
வஞ்சியம்மன் பாதம் வணங்கித் தொழுதேற்றி 131

சேலடிக்கும் ராசரிட சிறந்துவரும் காலாளும்
ஆலடி யண்ணனையும் அடிவணங்கித் தெண்டனிட்டு 132

விபூதிப் பிரசாதம் வெற்றிபெறத் தான்வணங்கி
அபிராமி சோழியம்மன் அடியிணையைப் போற்றிசெய்து 133

---

128. நல்ல வேளை - முகூர்த்த வேளை.
129. தெண்டனிட்டு - வணங்கி.

## வேட்டைக் கருவிகளுடன் வேந்தன்

துப்பாக்கி நேரிசமும் துண்டுதுண்டு சாகுழலுந்
தப்பாமல் ராணுவத்தார் தானெடுத்துக் கொண்டார்கள் 134

ஒயிலான தப்பட்டையும் ஓசைப் பெருந்திடுமம்
குயில்மொழிசேர் தாம்பூராக் கொம்புத் தொனியதிர 135

நாகசரம் பூரிகையும் நன்றாகத் தித்தியுடன்
வாகுபெரும் உள்மோள வாத்தியமுந் தான்முழங்க 136

பஞ்ச கலியாணிப் பரிமீதில் தானேறி
மஞ்சுலவுங் கொடுமணலூர் மாந்தோப்பில் வந்தபின்பு 137

தேசத் தழகன் சிறந்தகந்த சாமிமன்னன்
வாசவன்போல் மண்டகத்தில் வந்திருக்கும் வேளைதனில் 138

## கட்டியக்காரன் கூற்று

கட்டியக்கா ரன்வந்து கரங்குவித்துத் தாள்பணிந்து
அட்டிவரா மல்சின்னான் அன்புகளி கூர்ந்துரைப்பான் 139

பட்டாபி ராமா பனங்காடை குலதிலதா
மாட்டாருஞ் செங்குவளை மாலையணி மார்பழகா 140

முன்னாளில் புலவனுக்கு முளைவாரி யமுதளிக்கும்
மன்னர் பரிநகுலா வாகாம கோசரனே 141

---

135-136. வேட்டைக்குப் போகும்போது ஒலிக்கும் வாத்தியங்கள்.

137. பரி - குதிரை; மஞ்சு-மேகம்.

138. வாசவன் - இந்திரன். 'வாசவன் விழாக்கோள்' (மணி. 26. 69)

139. கட்டியக்காரன் - புகழ்மொழிகளைக் கூறுபவன். அட்டி-தடை.

140. பட்டாபிராமா - தலைவனை இராமனாக உருவகித்தல்.

141. புலவருக்கு முளைவாரி அமுதளித்தவன் அடகர் குலத்தலைவன் காலிங்க நல்லண்ணன்.

> 'குடகிரி தன்னில் வருமாரி பெய்யக் குளிர்மழையால்
> முடுகிடுஞ் செந்தமிழ் வாணருக் கேமுளை வாரிமுன்னாள்
> அடகர் குலாதிபன் காலிங்க நல்லண்ணன் அன்னமிட்டு
> வடகர் பதிபுரம் பேறுபெற் றான்கொங்கு மண்டலமே.
> (கொங்குமண்டல சதகம். வால. 81)

'செந்நெல் முளைவாரி அமுது செய்தோம்' (மேழிவிளக்கம். 193)

'இராவில் முளைச் செஞ்சாலி வாரி அமுதளித்துவந்த பயிரகுலன்'
(நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் காதல் - 48)

'திருந்தடு நிசியால் வருந்திடு பெரியோர்
அருந்திட முளையனம் விருந்தென அளித்தோன்'
(பாம்பண்ண காங்கேயன் குறவஞ்சி)

நெஞ்சார வஞ்சகமாய் நீலி துடந்துவர
அஞ்சாமல் பலிகொடுத்த அதிவீர செயராமா 142

அரவின் மணியெடுத்து அன்றுகவி ராசருக்குத்
திரவியம்போ லேகொடுக்கும் தீரா குபேரமன்னா 143

இட்டுண்டு கூழமுதை இயல்பாய்த் துரும்பதினால்
விட்டெடுத்துச் சோதினை விளங்கவே தந்தமன்னா 144

பாணன் பிணஞ்சுமந்து பண்பு புவிமீதில்
சாணனெனக் கீர்த்திபெற்ற சரச குணவசனா 145

---

142. நீலிபலி தந்தவன், விளிய குலத்துத் துலுக்கண்ண ராவுத்தர்.
'வாலியுமோர் பெண்ணாலே மடிந்ததுபோல் இவ்வுலகில்
நீலிபலி தந்தோமிந் நேமிதனில்' (மே. வி. 185)
'எளியவர் நீலி வணிகனுக் கோர்பழிக் கேழுபத்துப்
பழிதனை யீந்து கொழுமுனை யாற்பதின் மூவர்முன்னே
விளிய குலேந்திரன் துலுக்கண்ண ராவுத்தன் மேவுகங்கை
வழிபெற மூழ்கி யெழுந்தான் புகழ்கொங்கு மண்டலமே'
(கொ. ம. சதகம் 79)
'நீலி பழிகொடுத்த நீதிவள்ளல்' (சர்க்கரை மன்றாடியார் காதல்-45)
'பழைய நல்லூரின் பிழைபடு நீலிக்
கெழுபது பழியும் வழுவறத் துடைத்தோன்'
(பாம்பண்ண காங்கேயன் குறவஞ்சி)

143. புற்றரவின் வாய்மணியெடுத்துப் புலவருக்கு ஈந்தவன் செம்ப குலாதிபன் அமராவதி.
'நித்தம் பசும்பொன்னை நீட்டுகொடைக் கன்னனைப்போல்
புத்தரவின் வாய்மணியால் புகழ்பெற்றோம்' (மே. வி. 187)
'அம்பல வாணர்மின் காமாட்சி யம்ம னணிவரைமேல்
கம்பருக் கென்றும் அடிமையென் ரேபற் கடியரவிற்
செம்பர் குலாதிபன் கைநீட்டி நாவில் திகழ்முத்தமாம்
வம்பர்கள் கண்டன் அமரா பதிகொங்கு மண்டலமே'
(கொ, ம. ச. 80)
'பேணிக் கரும்பாம்பின் பேழ்வாயில் கைந்நீட்டி
மாணிக்கம் ஒன்றெடுத்து வாணர்க்கு அளித்தமுகில்'
(ந. ச. ம. காதல் 47)

145. அனாதைப் பாணன் பிணத்தை முன்புஒரு வேளாளன் சுமந்தான்,
'கோணம் சுமந்தகரக் கொற்றவன்முன் நாளில்ஒரு
பாணன் பிணம்சுமந்து' (ந. ச. ம. காதல் 52)
'உறவைப் பிரிந்துவந் தேஇறந் தான்அங் கொருபுலவன்
மறவைப் பதிநதி வம்சம்வந் தோன்அரங் கேசவள்ளல்
அறவைப் பிணம்சுடத் தான்செய் எண்ணான்இவ் வறத்ததென்றோ
பிறர்கைக் கொடாமல் எடுத்தான்அப் பாணன் பிணத்தினையே'
(பழம்பாடல்)

வேண்டியதெல் லாங்கொடுக்கும் விரும்பும் கவிஞர்க்குப்
பாண்டியனார் தானறியப் பட்டயந் தந்தமன்னா 146

நயமான தென்மதுரை நாடாளும் பாண்டியர்க்குப்
புயல்பொழியப் பிணைகொடுத்த பூமி யருள்பாலா 147

அலைகடல்சூழ் வையகத்தில் அன்று மனமகிழ்ந்து
புலையரைக் கூடவைத்துப் போசனஞ் செய்தமன்னா 148

உலகமெங்கும் வாழ்வுபெற ஊற்றாணி தான்பூட்டி
விலகாமல் ஏர்நடத்தும் வெள்ளாளச் சாமிமன்னா 149

நாலேழும் ஓராறும் நகரிலுள்ள பேர்களெல்லாம்
ஏலேல சிங்கனைப்போல் எல்லோரும் வந்தார்கள் 150

மன்மதனுக் கொப்பான மதிமந்திரி ராசமன்னா
தன்ம நெறிமுறைமை தவறாத சற்குணனே 151

வீதிசெறி கொடுமணலில் விளங்கி அரசாளும்
நீதியுள்ள சாமிமுன்னே நின்றுரைத்தான் நேயமதாய் 152

காவி விழியழகன் கட்டியக்கா ரன்கூற
மேவி மனமகிழ்ந்து விம்மியுடல் கெச்சிதமாய் 153

## தலைவன் நீராடி வழிபடல்

குச்சிலிய ராசேந்திரன் கூறு மொழிகேட்டு
மெச்சி மனமகிழ்ந்து வீரமணி மண்டகத்தில் 154

புருவ நுதலழகன் புகழ்கந்த சாமிமன்னன்
அருகிருந்த மந்திரிமார் அனைவோருஞ் சூழ்ந்திருக்க 155

---

147. மேகத்திற்காகப் பாண்டியனுக்குப் பிணை கொடுத்தவர்கள் கார் காத்த வேளாளர் என்று கூறும் மேழிவிளக்கம் (554-564).

148. 'பண்டு பறையன்என்று பாராமல் கூடவைத்தே
உண்டு புகழ்படைத்த உத்தமக்கா மிண்டன் எங்கோன்'
(ந. ச. ம. காதல். 46)

149. 'வாராத காலங்கள் வந்தாலும் பார வழக்குவரும்
தீராத கோபம் பசிநோய் தரிக்கச் சிதந்தனிலே
சேராத பேர்வந்து மேலில் விழுந்தாலும் அதைத்தீர்க்கச்சிவன்
தோராத மேழியன் வேளாளச் சாமி துணைநமக்கே' (தனிப்பாடல்)

150. நாலேழும் ஓராறும்-பனங்காடை குலத்தாரின் காணி ஊர்கள் 34. ஏலேல சிங்கன் - வள்ளுவர் காலத்தில் வாழ்ந்திருந்த ஒரு வள்ளல் என்பர்.

151. தன்மம் - தருமம்.

153. காவி - குவளை.

மணக்குந் திருக்காஞ்சி மாநதிநீ ராடிவந்து
வணக்கமாய்ச் சிவபூசை மறவாமல் தான்முடித்து 156

## உறவினருடன் விருந்துண்ணல்

பேர்பெரிய சின்னய்யன் பிரபலனீ சுரமூர்த்தி
தார்பெரிய தம்பி தயவுபிடா ரப்பனுடன் 157

மாணிக்க மானதம்பி மன்னன்முத்துப் பொன்னையனும்
ஆணிக்கை யானதம்பி அழகுகெட்டி முத்துமன்னன் 158

மனசுக் கிசைந்ததம்பி மன்னன்முத்துச் சென்னிமலை
கனக மணியான தம்பிகர்ணன் பழனிமன்னன் 159

விசையமுள்ள தம்பி விளங்குமுத்துப் பொன்னையனும்
இசைபரவுந் தம்பி யினியலிங்க மன்னனுடன் 160

முப்பத்து நான்குநகர் முடிமன்ன ரெல்லோரும்
ஒப்பவாய்ப் பந்தி ஒய்யார மாகவைத்து 161

விண்ணவர்சூழ் பெருந்தொழு விளங்கிவரும் ஓதாளன்
வண்ணமணி மார்பன் மகராசன் சென்னிமலை 162

## மனைவி முத்துவேலம்மாள்

புதல்விமுத்து வேலம்மாள் பூதலத்தில் மாமயிலாள்
விதமான கொடுமணல் வேந்தன்கந்த சாமிமன்னன் 163

இன்பமுள்ள மனைவியென்று எல்லோருந் தானுரைக்க
அன்புப சாரமுடன் அமுதளிக்கும் பூமகள்தான் 164

சுகமான பூமாது துலங்குமுத்து வேலம்மாள்
அகலமாய்க் கதலியிலை அனைவருக்கும் தான்போட்டு 165

---

156. காஞ்சி - நொய்யல் ஆறு. இக்காஞ்சியாற்றின் கரையில்தான் கொடுமணல் உள்ளது. 'காஞ்சியம் பெருந்துறை' (பதிற்.)

157. பிரபலன் - புகழுடையவன்.

161. இசை - புகழ்.

162. விண்ணவர் - தேவர்கள்; மணிமார்பன் - திருமால், கவுத்துவம் என்கின்ற மணியை மார்பில் தரித்தவன் போன்றவன் சென்னிமலை. ஓதாளர் சிறப்பினைக் கூற 'அலகுமலைக் குறவஞ்சி' என்ற தனி நூல் ஒன்று உண்டு.

163. பூதலம் - உலகம்.

164. பூமகள் - லட்சுமி; தலைவியை லட்சுமியாகக் கூறுகின்றார்.

165. கதலி - வாழை. 'நண்டு சிப்பி வேய் கதலி' (தனிப்பாடல்)

அகலம் - விரிவு; அனைவருக்கும் - கீழ்மேல் பாராது எல்லோருக்கும் சமமாக உணவு படைக்கும் திறத்தைக் கம்பன் சீதை திருமணத்தில் கூறுகின்றான்.

**விருந்துவகை**

நிரைநிரையாய்ப் பந்திதனில் நீரெடுத்துப் பரிமாறித்
திரைகடல்சம் பாய்விரித்துச் சிறப்பாய்ப் பரிமாறி 166

பூறுவத்தி லுள்ள புதுமை குறையாமல்
ஊறுகாய் பத்துவகை உண்மையுடன் பரிமாறி 167

ஈற்குஞ்சம் பாவமுதும் இனியதுவ ரைப்பருப்பும்
ஏற்கையுட னெல்லோர்க்கும் இதமாய்ப் பரிமாறி 168

முள்ளங்கி நற்கிழங்கும் மிதிபாகல் வெண்பாகல்
எல்லவரும் கொண்டாடும் இயல்பான கத்திரிக்காய் 169

கரிக்கொம்பு கதலிக்காய் கறணைக் கிழங்குடனே
பொரிக்கரிக்கு மேலான பூவன்கத லிக்காயும் 170

சக்கரைவள் ளிக்கிழங்கும் சாம்பிராணிக் கதலிக்காய்
அக்கரையாய்த் தானருந்தும் அவரைக்காய் தன்னுடனே 171

மாங்காய்க் குழம்பு மணக்கும் பிலாக்காயும்
தேங்காய் மிகக்கவரும் திரமான பச்சடியும் 172

கொடிக்காய் வழுதலங்காய் கொத்தவரைக் காயுடனே
பொடித்தூவி யேசமைக்கும் புடலங்காய் தன்னுடனே 173

கருவேப் பிலைத்துவையல் கருதிய நற்குழம்பும்
மருவேப்பன் பூவடகம் வாசமுள்ள அப்பளமும் 174

சீடையுடன் கச்சாயம் தேன்குழலும் அதிரசமும்
பேடையன்ன மாமயிலாள் பின்னும் வகைவகையாய் 175

---

166. நிரைநிரை - வரிசை; பந்தி - உண்பார் தொடர்ச்சியைப் பந்தி என்பர். சம்புபாய் - கோரைப்பாய்; திக்கு+கயம்=திக்கயம் என்றாற்போலச் சம்பு+பாய்—சம்பாய் என வந்தது. திரைகடல் - அலையோடு கூடிய கடல். ''திரை கடல் ஓடியும் திரவியம் தேடு'' என்பது அவ்வை வாக்கு;

167. பூறுவம்-பழமை.

168. ஈர்க்கும்-அனைவரையும் கவரும்; ஏற்கை-இயல்பாக; இதம்—அன்பு.

169. பாகல் - பாவல் என்று ஆகிப் பாவக்காய் ஆயிற்று.

170. கதலிக்காய் - வாழைக்காய்; கறணை - கருணை; கரிக்கொம்பு கதலிக்காய் - யானைத் தந்தம் போன்ற மொந்தன் வாழை.

172. மாங்காய்க்குழம்பு - மாங்காயால் செய்யப்படும் குழம்பு.

173. புடலங்காய்க் கூட்டு பொடி தூவி வைப்பதாம். வழுதலங்காய் - கத்தரிக்காயின் ஒரு வகை: கொடிக்காய் - பூசணிக்காய்.

174. வேப்பன்பூவடகம் - வேப்பம்பூவால் செய்யப்பட்ட வடகம்.

175. பேடை அன்னம் - பெண் அன்னம்.

கதிப்பான தோசைவடை கற்கண்டுஞ் சக்கரையும்
மதிப்பான முக்கனியும் மகிழ்ந்து பரிமாறி 176
பொன்னனைய கொப்பரையில் புத்துருக்கு நெய்யெடுத்து
தன்னமையா யெல்லோர்க்குந் தாராள மாச்சொரிந்து 177
அவரவர்கள் தங்களுக்கு அழகுசெம்பு தானெடுத்து
துவரை மிளகிநீர் தோராய மாய்க்கொடுத்து 178
ஆச்சரிய மான ஆவமுர்தந் தான்கொடுத்துத்
தாட்சிவா ராமல் தயவாய் அமுதருந்தி 179
பக்கத்தி லேயிருக்கும் பாலர்மரு மக்களுடன்
ஒக்க அமுதருந்தி உண்டவர்க ளெல்லோரும் 180
பனிநீ ரதினால் பண்புகைகால் சுத்திபண்ணி
இனியமணி மண்டகத்தில் எல்லோரும் வந்திருந்து 181
பூமனுக்கு ராசன் புகழ்கந்த சாமிமன்னன்
தாமமணி மார்பன் தயவுகந்த சாமிமன்னன் 182
பூசிமகிழ் சந்தனமும் புனுகு பரிமளமும்
நேசமுடன் எல்லோரும் நீங்காமல் தான்தரித்து 183
வெள்ளிலையும் அடைக்காயும் வித்தார மாய்க்கொடுத்துத்
தெள்ளிமைசேர் மண்டகத்தில் தேவேந்திரன் போலிருந்து 184

## வேட்டை உடை

மானுலவும் பூவுலகில் வாழ்கந்த சாமிமன்னன்
தானும் பரிமளங்கள் தயவாய் அணிந்துகொண்டு 185
ஆற்காட்டுத் தங்கநிசார் அருகுகெண்டைச் சோமனுடன்
பாற்கா வணிதமாய்ப் பசும்பொன்னா லங்கிதொட்டு 186

---

176. கதிப்பு - பூரிக்கின்ற; மதிப்பான முக்கனி என்பதால் முக்கனிக்கு நிகர் எக்கனியும் இல்லை என்ற வழக்கு நினைவுக்கு வருகிறது.

177. கொப்பரை - பெரிய பாத்திரம்; முக்கனி-மா பலா வாழை.

178. மிளகுசாறு என வழங்கும் ரசம்; தோராயம் - அளவில்லாமல்.

179. ஆஅமிர்தம் - பசும்பால்; தாழ்ச்சி என்பது தாட்சி என்றாயிற்று.

180. ஒக்க - ஒன்றாகக் கூடி.

181. பனிநீர் - குளிர்ச்சியான நீர்; மண்டகம் - மண்டபம்.

182. பூமனுக்கு ராசன் – அரசர்க்கரசன்; தாமம் - மாலை.

183. புனுகு - புனுகுப் பூனையிலிருந்து எடுக்கப்படுவது.

184. வெள்ளிலை, அடைக்காய் – வெற்றிலை பாக்கு.

185. பரிமளம் - வாசனைப் பொருள்கள்.

186. கெண்டைச் சோமன் - சரிகைத் தலைப்பாகை. அங்கி-சட்டை; தொட்டு - போட்டு.

*பாகு மொழிவசனன் பண்புகந்த சாமிமன்னன்*
*நாகூ ரபரஞ்சி நற்சரிகைப் பாகுகட்டி* 187

*தன்னால் மனமகிழ்ந்து தார்வேந்தர் தான்கொடுக்கும்*
*பொன்னாணி மாந்தளிருப் பொற்கெண்டைச் சாலுவையும்* 188

*செஞ்சிநகர்ப் பொற்பதக்கம் சீவுரத்தின மேல்முருகுக்*
*கொஞ்சிவரும் பொன்னாணி கூர்ந்தபசுந் தங்கவளை* 189

*மோகம் புரிவயிரம் முத்துக் கடுக்கனிட்டு*
*போகதே வேந்திரன்போல் பொன்கெவுடம் தான்தரித்து* 190

*கேதார வச்சிரமணிக் கெட்டிமுத் தாரியிட்டுக்*
*கோதா புரியறணாக் கூர்ந்துஇடை தன்னிலிட்டு* 191

*காஞ்சிபுரத் தங்கக் கணையாழி மோதிரமும்*
*வாஞ்சகமாய்த் திருக்கரத்தில் வண்மை யுடன்தரித்து* 192

*மதுரா புரிவயிர மாணிக்க மோதிரமும்*
*சதுரான ஆபரணம் சம்பிரமுட னேயணிந்து* 193

*தர்ம பரிபாலன் தயவுகந்த சாமிமன்னன்*
*வர்ண மணிவீதி மண்டகத்தின் வாசல்வந்து* 194

## வேட்டைக்குப் புறப்படுதல்

*தரள மணிக்குடையும் தங்கப்பொன் னாலவட்டம்*
*திரளாய் மணிபதித்த திங்கள்வர்ணச் சூரியபான்* 195

*சீமான் முகங்குளிரச் சிங்கார சூரியபான்*
*கோமான் முகங்குளிரக் கூர்ந்து குடைநிழற்ற* 196

*பூரிகையும் நாகசரம் பொன்முரசு தாரைசின்னம்*
*பாரியதுத் தாரிதத்தி பகருமே ளந்தொனிக்க* 197

---

187. பாகு-வெல்லப்பாகு; பாகு கட்டி-தலைப்பாகையைக் கட்டி; அபரஞ்சி-மாற்றுயர்ந்த தங்கம்.

188. கெண்டைச் சாலுவை - ஒருவகை மேல் துப்பட்டா.

189. சீவு-கடைசல் பிடிக்கப்பட்ட; முருகு - காதணி; பசுந்தங்கம்-கலப்பற்ற தங்கம்.

190. மோகம்புரி-எல்லோருக்கும் விருப்பத்தை உண்டாக்குகின்ற; கெவுடம்-உருத்திராக்கம்; போகதேவேந்திரன் – இந்திரனுக்குப் போகி என்பது பெயர்.

191. முத்தாரி-முத்துமாலை; அறணா-அரைஞாண்.

192. கணையாழி-மோதிர வகையில் ஒன்று. கரம் - கை.

193. மதுரர்புரி-மதுரை.

195. தரளம் - முத்து; ஆலவட்டம் - பெரு விசிறி.

சீரான நற்றிடுமம் திசையெங்குந் தானதிரப்
பேரான தம்பூராக் கொம்புபே ரிகைமுழங்க 198

விகட மணியோசை வெங்கலக்கொம் பூதிவர
தகடை நகரதிரத் தப்பட்டை தான்முழங்க 199

கூட்டம் பிரியாத குருவார பஞ்சமியும்
நாட்ட முளஉத்திர நட்சத் திரந்தனிலே 200

**விநாயகனை வணங்கல்**

அணிபரவு வேட்டை ஆடிவர வேணுமென்று
வணிகர் வினாயகனை வலமாகச் சுத்திவந்து 201

சீனிப்ப லாச்சுளையும் செந்தேனும் சக்கரையும்
மானிய மாயிருக்கும் மாங்கனிகற் கண்டுடனே 202

பாலுங்கத லிக்கனியும் பணியாரம் எள்ளுருண்டை
ஓலும் பொரிகடலை உரிசைதரு செங்கரும்பு 203

கொண்டுவந்து தான்கொடுத்து கொடுமுடிப் பண்டிதனார்
பண்டுதவுஞ் சேனாபதி பண்டிதனார் தாள்பணிந்து 204

பைங்கடப்பந் தார்மார்பன் பரன்கிரிவே லன்துணைவன்
அய்ங்கரனுக் குண்மையுடன் அவிசேகஞ் செய்யுமென்று 205

இளநீருஞ் சந்தனமும் ஏதேதுண் டானதெல்லாம்
உளமகிழ்ந் தவிசேகம் உண்மையுடன் செய்தபின்பு 206

நல்ல கணபதியை நமஸ்கரித்துப் போற்றிசெய்து
வல்லமைசேர் வேட்டைசெய்ய வந்துதவ வேணுமென்று 207

**புறப்பாடு**

தும்பிமுக னைப்பணிந்து துளாயிரந்தேங் காயுடைத்து
அம்புவியோர் கொண்டாடும் அசுபதிமேற் கொண்டருளி 208

மேலான சின்னையன் வெண்பரிமேல் கொண்டருளி
மாலான தம்பியரும் வான்பரிமேல் கொண்டருளி 209

---

200. குருவாரம் - வியாழக்கிழமை; பஞ்சமி - ஐந்தாம் திதி.
201. வணிகர் விநாயகன் - கொடுமணலில் உள்ள செட்டி விநாயகன்.
202. மானியம் - சிறப்பு,
203. எள்ளுருண்டை விநாயகனுக்கு மிகவிருப்பமானது.
204. கந்தசாமியின் குருக்கள்.
205. பரன்கிரி - சிவன்மலை; கொங்கு நாட்டுக் காங்கேயத்துக்கு அண்மையிலுள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலம்; துணைவன்-சகோதரன்.
208. தும்பி - யானை; அசுபதி - குதிரை.

பிரதானி மந்திரிமார் பின்புகரு ணீகருடன் 210
திரமான படைத்தலைவர் செய்ய குறிக்காரன்

நாட்கொண்டு முன்னடக்கும் நாலுலட்சம் ராணுவங்கள்
வாட்கொண்டு வீரியர்கள் வகைவகையாய் முன்னடக்க 211

மேரான வெண்பரியும் விளங்குந் தளத்துடனே
காரானை ஒட்டகைமேல் கனமுரசு தானதிர 212

வில்விசையன் தேரேறி வெற்றிகொண்டு வந்தாப்போல்
நல்விசையங் கொண்டு நாலுலட்சம் சேனையுடன் 213

ஆரணஞ்சேரெழுமாத்தூர் அன்புகந்த சாமிமன்னன்
வாரணத்தின் மீதேறி வார வழிதனிலே 214

### வழியில் சகுனம்

உபய கெருடனங்கே ஓங்கிவல மாயிருந்து
தபனன்போல் வட்டமிட்டுத் தார்வேந்த னிடத்தில்வர 215

இடத்தில்வருஞ் செங்கருடன் இதுகுண மேதென்று
அடக்கமுள ஆரூடம் அறிந்தவரைத் தான்கேட்க 216

செங்கருடன் ரெண்டு சேர்ந்துஇட மாகவத்தால்
கங்கைகுல மன்னவனே கன்னிமணங் கூடுமென்றார் 217

உற்றமொழி கேட்டு உகந்தகந்த சாமிமன்னன்
வெற்றிலையும் அடைக்காயும் வேண்டியதெல் லாங்கொடுத்து

கருதும்பனங் காடைகுலன் காராள பூபாலன்
எருதெடுக்குங் கிரிதேடி யெல்லோரும் வந்தணுகி 219

சூழும் படைத்தலைவர் துலங்குக் குறிக்காரர்
ஆளுந் தளகர்த்த ரனைவோரு மேதுரைப்பார் 220

---

210. கருணீகர் - கணக்கு அலுவலர்; குறிக்காரன் - அரசர்களிடம் உள்ள பணியாளரில் ஒருவர். 'குறிக்கார மாதையன்' என்ற வழக்குண்மை காண்க.

211. நாலுலக்கம் - நான்கு லட்சம்; ராணுவம் - சேனை.

212. காரானை - கரிய யானை.

214. ஆரணம் - வேதம், காடு என்றும் பொருள் கொள்ளலாம்; வாரணம் - யானை.

215. உபயம் - இரண்டு; தபனன் - இளஞ்சூரியன்.

216. குணம் - பயன். ஆரூடம் - பின் நடப்பவற்றை முன்னறிந்து கூறுதல்,

218. வேண்டியதெல்லாம் ஒருமை பன்மை மயக்கம்.

219. கிரி - மலை; எருதெடுக்கும் கிரி - சேமலை (சிவன்மலை).

220. தளகர்த்தர் - சேனாதிபதி.

ஓடிவருஞ் சிங்கத்தை உபாயமா கப்பிடித்துத்
தேடிவருங் கொடுமணல் செல்லாண்டி யம்மனுக்கு 221

ஊர்ந்து நடத்திவந்து ஒய்யார வாகனமாய்க்
கூர்ந்து தருவமென்று கொக்கரித்துக் கூறலுற்றார் 222

புள்ளிமான் கரடிபுலி போதப் பிடித்துவந்து
தெள்ளிமைசேர் கொடுமணல் தேவிதங்க மாருமையாள் 223

பிடிச்சு விளையாடப் புகழ்ந்து தருவமென்று
வெடிக்கார ரெல்லோரும் விளம்பி உரைக்கலுற்றார் 224

கொம்பானை மேதியுடன் கூடுங் கிடாவினங்கள்
சம்பா விளைவேறத் தாராள மாய்ப்பிடித்து 225

நாட்டிமைசேர் கொடுமணல் நல்லகந்த சாமிமன்னன்
பூட்டிவயல் ஏர்நடத்தப் புகழ்ந்து தருவமென்றார் 226

## வேட்டை ஏற்பாடு

கும்பகர்ணன் படைபோல் கூடிவரும் ராணுவங்கள்
கம்பனூர் மலைவரைக்கும் காலாள் பரந்துவர 227

கட்டாப்புக் கேத்த காரியப்பேர் மந்திரிமார்
இட்டாட வேபரந்து எல்லோரும் சூழ்ந்துகொண்டு 228

கோம்பைக்கணு வாயருகே குழல்கார ரைநிறுத்திப்
பூமணஞ்சேர் மேடுபள்ளம் போதவலை கட்டிவிட்டு 229

தளக்கர்த்த ரெல்லோரும் தங்கள்பரி விட்டிறங்கி
முளக்கி மலைதோறும் முள்ளிமரன் புதர்குலுங்க 230

ராமர்படை ராவணனை நாடி வளைத்தாப்போல்
சோமநுத லழகன் துலங்கு பொதிமலையில் 231

---

221. உபாயம் - தந்திரம்

223. போத - மிகுதியாக.

224. வெடி - துப்பாக்கி.

225. யானையை ஏர் ஓட்ட வைப்போம் என்பது அழகிய கற்பனை; மேதி - எருமை; கிடா - கடா.

228. இட்டாட - மகிழ்ச்சியோடு.

231. சோமன் – சந்திரன்; நுதல் - நெற்றி.

## மலைவளம்

காரிண்டன் கருங்காலி கடப்பைபாம் பைவெள்ளி
ஆரிண்டான் சிலைவாகை அளிஞ்சிகடுக் காய்மரமும் 232

செம்புளிஞ்சன் கரும்புளிஞ்சன் சேகுவிசா விருட்சம்
அம்பு நுழையாத அத்திசிறு மூங்கிலுடன் 233

தேக்கு மயிப்பூட்டும் செந்தணக்கும் பெரும்பொருசன்
தாக்குஞ் சிறுபயறன் தளிஞ்சி பெருங்குமிழன் 234

நெட்டுப் பெருமூங்கில் நிலவேம்பு மலைவேம்பும்
குட்டை குளம்விளங்கும் கொடிக்கால கத்தியுடன் 235

பாவட்டன் வஞ்சிமரம் படரும் பிலாவிருட்சம்
பூவட்ட மாப்புடங்கும் பொன்மருதம் பூமுருக்கும் 236

பூத்தாழை மகளீனும் புன்னையெலு மிச்சையுடன்
தேத்தா னிளங்கமுகு தென்னைகொளு மிச்சையுடன் 237

நெல்லிமரஞ் சம்புநாவல் நெடுமால் பதிவிருட்சம்
வில்லி யுமைபாலன் வேலனுரு வானமரம் 238

அரைச்செடுத்துத் தேவர்க் கபிஷேகம் பண்ணுமரம்
கரைச்சு ரசமருந்தும் கனக விருட்சமுடன் 239

சஞ்சீவி வெண்சாரைச் சகல விருட்சமெல்லாம்
கொஞ்சிவரும் எழுமாத்தூர்க் குபேரன் பொதிகிரியில் 240

விதவிதமாய்ச் சென்றேறி வெற்றிமுர சுந்தொனிக்க
மதனனெனும் பனங்காடை மன்னன் மகிழலுற்றான் 241

## வேட்டையாடல்

காண்டா மிருகமுடன் கண்ட மிருகமெல்லாந்
தூண்டாக் குருதிவிளைத் துடந்துடந் தெய்வாரும் 242

---

232-240. மரவகைகள் கூறப்படுகின்றன.

232. இண்டு - புதர்; சிலை - ஒலிக்கின்ற.

233. சேகு - வயிரம்.

237. மகள் - பெண்மரம்.

238. சம்பு நாவல் - இரு பெயரொட்டு; வில்லி - சிவபெருமான்; பாலன்-முருகன்; வேலனுருவான மரம் - வேங்கை மரம்.

239. தேவர்க்கு அபிஷேகம் செய்யும் மரம்-சந்தன மரம்; கனகவிருட்சம்-கனக எருமை மரம்.

242. குருதி விளைத்து - இரத்தம் பெருகச் செய்து.

பாயும் புலிகடமான் பன்றிகுட லூடுருவ
மேயுங் கரடிமுயல் விதமான மான்களெல்லாம் 243

குத்திக் குடல்சரியச் கொக்கரித்து வேல்வாங்கிச்
சுத்திப் பதின்காதம் துடந்துதுடந் தெய்வாரும் 244

மெத்தவட்ட மான்கரடி மேயுங் கடமானைத்
தத்தளிக்கத் தான்முடிக்கித் தாம்புகட்டிக் கொள்வாரும் 245

கொழுத்தபன்றி புள்ளிமான் கொம்பன் சலகையெல்லாம்
இழுத்திழுத்துத் தான்பிடித் திணைச்சோட்டிக் கொள்வாரும்

வானக வரிமானை வளையமிட்டுத் தான்பிடித்துத்
போனகமரி மானுடனே பிணையலிட்டுக் கொள்வாரும் 247

மிரண்டுவருங் கடமானை வேணு மெனப்பிடித்துத்
திரண்டுவருங் கடமானைச் சேத்திப் பிணைப்பாரும் 248

கள்ளிக்குள் போய்மறைந்த கடமானைத் தான்பிடித்து
புள்ளிமான் தன்னுடனே பிணையலிட்டுக் கொள்வாரும் 249

ஆலா விருட்சம்போல் அடிச்சுக் குமிச்சமுயல்
கோலார வண்டிரம்பக் குமிச்செடுத்துக் கொள்வாரும் 250

விடையேறும் பெம்மான் விளங்குவன் னீசருக்கு
உடைதரிக்கப் புலித்தோல் உரிப்பார் சிலபேர்கள் 251

வெயிலவனைக் கண்டு விலகும் பனிபோல
சயிலமெனும் பொதிகிரியில் சார்ந்த மிருகமெல்லாம் 252

தூள்பறக்க மலைதோறும் சுத்தித் துணித்ததினால்
ஆள்பெருக்கங் கண்டோடி அளிஞ்சிப் புதைதனிலே 253

**புலியைத் தொடர்ந்த தலைவன்**

பதிங்கி யிருந்ததொரு பதினா றடிவேங்கை
குதிங்கால் நரம்பலுங்கக் கொக்கரித்துச் சத்தமிட்டு 254

---

245. தாம்பு - கயிறு; 'கண்ணினுண் சிறுத்தாம்பு' என்பார் மதுர கவியார்.

250 கோலார வண்டி - ஒருவகை வண்டி; விருட்சம் - மரம்.

251. விடை - காளை.

252, சயிலம் - மலை.

253. அளிஞ்சி - அளிஞ்சில் மரம்.

254. கொக்கரித்து- ஆரவாரித்து.

பூமி யதிரப் புலியொன் றெழுந்திரிச்சு
ஆமிக்கை யானமன்னன் அதிவீரர்க் கெட்டாமல் 255

அலறிக் குதிகுதிச்சு அந்தவன ந் தனிலோடக்
கலவிக் குயில்மொழியான் காஞ்சிமா நதியுடையான் 256

தாயகமாய் வரமுதவும் தங்கமார் பொற்பதத்தை
நேயபரி பூரணமாய் நீங்காம லுச்சரித்து 257

போரபுலி யைத்துடர்ந்து பூங்கா வனத்தருகே
நாரணன்போல் சிலைவாங்கி நல்லவட்டம் பூசையிட்டான் 258

## பூங்காவில் தலைவன்

வனந்தனிலே எழுந்தோடும் வான்புலியைச் சுட்டபின்பு
அனந்தமா யன்னம்வாழ் அழகுபூங் காவனத்தில் 259

இருந்து தகையாறி இளநீரு தனையருந்திக்
குருந்த மரத்தடியில் கொற்றவன்போல் வீற்றிருக்கும் 260

தெட்சணமாய்க் கெவுளியங்கே திடமாகத் தானுரைக்க
லட்சண வொய்யாரன் நல்லகந்த சாமிமன்னன் 261

கோட்டு மதகரியான் கும்பவிக்கி ரஞ்சாத்தன்
கேட்டு மனமகிழ்ந்து கெம்பீர மாயிருக்க 262

## பெண்ணரசி கண்ட கனவு

ஆரூர் தனிலிருக்கும் அன்னநடைப் பெண்ணரசு
பேரூர் எழுமாத்தூர் பொதிமலைப்பூங் காவனத்தில் 263

பூவெடுத்துக் கொண்டந்தப் பூங்காவில் நானிருக்கத்
தேவேந் திரன்புதல்வி தெவியானை பங்கன்வந்து 264

---

257. பொற்பதம் - பஞ்சாட்சரம்.

258. சிலை - வில்; நாரணன் - திருமால் (இராமன்); இராமன் மானைத் தொடர்ந்தது போல் தலைவன் புலியைத் தொடர்ந்தான்.

259. அனந்தமாய் - மிகுதியாய்.

260. தகை - வெப்பம்; கொற்றவன் - சிவபெருமான்.

261. தெட்சணம் - தெற்கு; கெவுளி - பல்லி.

262. கோடு - தந்தம்; கும்ப விக்கிரஞ்சாத்தன் - வீராபிசேகமும் விசயாபிசேகமும் செய்து கொள்பவன்

264. நான் - தலைவி தன்னைக் குறித்துக் கொள்ளுகின்றாள்; தெய்வயானை பங்கன் - முருகன்.

என்னைக் கலந்திருக்க எந்தனிட சொப்பனத்தில்
தன்மையாய்க் கண்டனென்று தாதியுடன் தானுரைத்தாள் 265

## அணிகலன்கள் அணிதல்

தாதியவள் கேட்டுத் தயவாய் மனமகிழ்ந்து
சோதியவ ரஞ்சிமுத்தே சொல்லுகிறேன் கேளுமென்றாள் 266

உந்தனுக்குச் சோவனம் உடனே நிறைவேறும்
விந்தையுடன் பூவெடுக்க வேணுமென்று தானுரைத்தாள் 267

பொன்னனைய தாதிசொல்ல புரிகுழலாள் தான்கேட்டு
வன்னமணிப் பூஷணத்தை வகையாய்த் தரியுமென்றாள் 268

பூட்டுமென்று தானுரைக்கப் புரிகுழலாள் தன்தாதி
சூட்டு முடமையெல்லாந் தோகையர்க்குத் தானெடுத்துச் 269

சிலம்பு வளைந்தாப்போல் திருத்திய கொண்டைதனில்
அலங்கார மாய்க்குலுங்க ஆணிமுத்துக் குப்பியிட்டு 270

வளையுந் திருநுதலில் வச்சிரமணிச் சுட்டிகட்டி
முலைமருவப் பொற்கழுத்தில் முத்துமணி தான்பூட்டி 271

இலங்கு நயனத்தில் இயல்பான மையுமிட்டு
துலங்கிவரும் மேற்காதில் சோதியன்னக் கொப்புமிட்டு 272

நாகநீ ழல்காட்டும் நற்செரிகைச் சேலைகட்டி
தோகை இடைகுலுங்கத் துலங்குமொட்டி யாணமிட்டு 273

அலுக்கி நடந்துவர அழகான பொன்சிலம்பு
குலுக்கி நடந்துவரக் கொலுசுதண்டை தான்பூட்டி 274

பாத சரம்பீலி பகுத்த மயிலடியும்
வேத மொழிகாட்டும் வீரமுள்ள மெட்டிகையும் 275

மின்கொடியாள் தனக்கேற்ற வீரமணிப் பாடகமும்
பொன்கொடியுஞ் சிந்தாக்கும் பூஷணமெல் லாந்தரித்து 276

---

265. சொப்பனம் - கனவு; தாதி - தோழி.

267. சோவனம் - திருமண முகூர்த்தம்.

268. பூஷணம் - அணிகலன்கள்; புரிகுழலாள் - சுருண்ட கூந்தலை உடையவள்.

269. உடமை - அணிகலன்கள்.

272. நயனம் - கண்; துலங்கி - விளங்கி.

276. பாதகடகம் என்பது பாடகம் என்றாயிற்று; சிந்தாக்கு - புளியஇலை வடிவாகச் செய்யும் அணிகலன் (தெலுங்குச் சொல்).

கும்பமுலை மார்பில் குடகுமணித் தாவடமும்
இன்பமுள்ள நற்கடகம் இயல்பான பொற்சரியும் 277

வன்ன மணிக்கரத்தில் வாகான நற்பவளம்
நன்னயஞ்சேர் தோளுவந்தி நாகபடந் தானணிந்து 278

செந்திரு மடந்தையைப்போல் திருவும் பிறையணிந்து
பைந்தொடியாள் தனக்கேற்ற பட்டுரவுக் கைதொட்டு 279

மேலுலக ரம்பையைப்போல் விளங்குந் திருநுதலாள்
பாலமுதங் கற்கண்டு பண்பாய் அமுதருந்தி 280

மங்கையர் சிரோமணியாள் மாதுமுத்து மாலையெனும்
நங்கையர்கள் கொண்டாடும் நல்லமலர்ப் பூவெடுக்க 281

**பூங்காவில் மாலைமுத்து**

சிறந்துவருந் தாதியுடன் சிங்கார மாலைமுத்து
அறம்விளங்கும் எழுமாத்தூர் அன்பான பூங்காவில் 282

பூந்து மலரெடுக்கப் புரந்தரனார் தேவியைப்போல்
சேர்ந்து மலரெடுக்கச் சிங்கார மாய்நடந்தார் 283

பூங்காவில் போய்ப்புகுந்து புரிகுழலார் தாதியர்கள்
நீங்காமல் பூவெடுக்க நின்றா ரொருமுகமாய் 284

சங்குமுத்து மீனாட்சி சந்திரமதி பொன்கருணை
எங்கும் விளங்கிவரும் இந்திராணி செண்பகமும் 285

சீதை சிவகாமி சிறந்தமுத்து ரத்தினவல்லி
கோதை யபிராமி குச்சிரமணி நல்லமுத்து 286

கன்னி பெருங்கருணை காமாட்சி வீரமுத்து
பொன்னிபச்சை ரத்தினமணி பூஞ்சோலை யாணிமுத்து 287

அவரஞ்சி ஆறுமுகம் அழகு மரகதமும்
நவமணிசேர் முத்துவள்ளி நல்லதெவி யானையுடன் 288

---

277. சரி - வளையல்.

283. புரந்தரனார் - இந்திரன்; சிங்காரம்-சிருங்காரம்; பூந்து - புகுந்து, இரட்டைக்குறில் ஒற்றை நெடில் ஆயிற்று.

288. ஆறுமுகம் - இது பெண்களுக்கும் வைக்கும் பெயர்.

## தாதியர்க்கு ஆணை

கிளிமொழியாள் தாதியரைக் கிட்ட வரவழைத்து
பழுதில்லா நல்லமலர் பாத்தெடுக்க வேணுமென்று 289

சொற்படியே தாதியர்கள் துய்ய மலரெடுக்கப்
பொற்கமல வண்டதுபோல் பூஞ்சண் பகமெடுத்தாள் 290

நல்லமுல்லை செவ்வந்தி நற்பவள மல்லிகையும்
சொல்ல விளங்கிவரும் துய்ய மருக்கொழுந்து 291

இருவாட்சி புன்னை இயல்பான மந்தாரை
ஒருநாளும் வாடாத ஓங்குநீ லச்சிவந்தி 292

## தனிமையில் தலைவி

சுத்தி மலரெடுத்துச் சூழ்ந்துவருந் தாதியர்கள்
பத்தினியாள் தனுச்சிறிக்கப் பாங்கிமா ரெல்லோரும் 293

வனந்தோறும் பறந்தோடி வாரிமலர் கொய்தெடுக்க
இனம்பிரிந்த மான்போலே இயல்பான மாலைமுத்து 294

தனித்தனியே மலரெடுக்குந் தாதியரைக் காணாமல்
அனிச்ச மலர்ப்பதத்தாள் அவளொருத்தி யாகநின்றாள் 295

## தலைவி வேண்டுதல்

தேனாரும் பூமதனன் தேடும் மலர்களெல்லாந்
தானாகக் கொள்ளையிட்டுத் தயவாய் மலரெடுக்க 296

வாணுத லுக்கான மல்லிகைப்பூஞ் செண்டிருக்க
நாணுருவப் பார்வைதரும் நல்லமலர் தானிருக்க 297

தேரியுடல் வாடாத செய்யமலர் தன்னுடனே
ஊரி அலர்ந்திருக்கும் உண்ணுமலர் தானிருக்க 298

---

289. பழுது - குற்றம்; குற்றமாவது முற்றும் மலராதது, மலர்ந்து செவ்வி கெட்டது, சூடத்தகாத பூக்கள்.

290. துய்ய - தூய்மையான.

292. நீலச் சிவந்தி - வாடாமல்லி.

297. தலைவியின்பால் மல்லிகைப் பூச்செண்டு (தனம்) இருக்க, பார்வை தரும் மலர் (கண்) இருக்க (இவள்) வேறு மலர்கள் தேடலுற்றாள்.

நேத்திதரும் பூங்காவில் நின்றுவிளை யாடாமல்
பூத்த மரந்தோறும் பூங்கொடியாள் சென்றுசென்று 299

படர்ந்திருக்கும் பாதிரியே பண்பான மாமரமே
அடர்ந்த குழல்முடிக்க ஆனமலர் தாரீரோ 300

துகைசேர் மலரினமே தோன்றிவரும் மாதுளையே
வகையாய் மலர்முடிக்க வண்ணமலர் தாரீரோ 301

தாவிப் படர்ந்திருக்கும் தாழையே செங்குவளை
சீவிக் குழல்முடிக்கச் சிறந்தமலர் தாரீரோ 302

உசந்த மரந்தோறும் உலாவிவரும் பூங்கிளியே
இசைந்த குழல்முடிக்க எனக்குமலர் தாரீரோ 303

அழியாத மாலைமுத்து அன்பாய்ப் புகன்றதினால்
களிகூர்ந்து பூங்கிளிகள் காவில் புறமொதுங்கி 304

வல்லி யலங்காரி வச்சிரமணி மாலைமின்னாள்
நெல்லி மரத்தடியில் நின்றாள் ஒருத்தியுமாய் 305

**தலைவன் - பெண்ணரசி சந்திப்பு**

களப மணிமார்பன் காமன்கந்த சாமிமன்னன்
அழகான பூங்காவில் அதிசெயமெல் லாம்பார்த்து 306

வாடிக்கை யாகவந்து வண்டுலவும் பூங்காவில்
வேடிக்கை யாகவந்த மெல்லியரைக் காணலுற்றான் 307

கண்டு மனமகிழ்ந்து கன்னிதன்மே லாசைகொண்டு
ஒண்டொடியாள் கிட்டவந்து உண்மையுட னேதுரைப்பான் 308

**தலைவன் கூற்று**

அருக்கன்விழி யாயிரத்தின் அழகை வடிச்செடுத்து
திருத்தி வடிவெடுத்த செய்யிழையின் கண்மணியோ 309

---

299. நேத்தி - அழகு.

300-303. 'சாதிநறுஞ் சண்பகமே தாதுளபூந் தாதகியே
கோதிக் குழல்முடிக்கக் கோவைமலர் தாரீரோ
மந்தாரை யேசெருந்தி மாமரமே நீர்எனது
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீரோ'
(கூள. கா. 157, 158)

308. ஒண்டொடி - அழகிய வளையல்.

செந்திருவின் வடிவெல்லாம் திரட்டி [illegible]சுருக்கி
விந்தையுடன் வடிவெடுத்து வெல்விழியின் பெண்ணரசோ 310

செந்தேனே மானே சிறந்த வனக்குயிலே
உந்தனூ ருன்பெருமை உரைத்தருளும் பெண்ணமுர்தே 311

என்னுடைய பூங்காவில் இயல்பாக வந்தினயேல்
உன்னுடைய வாய்திறந்து உரைபகல லாகாதோ 312

சுதிபரவும் பூவுலகில் தோன்றிமணஞ் செய்தோர்கள்
அதிசியமாய்த் தான்பார்க்கும் அருந்துதியும் நீர்தாமோ 313

போகமுற் றும்புணரும் பொன்னுலகோர் தானறிய
பாகசா தனன்தேடும் பைந்தொடியும் நீர்தாமோ 314

காயக்கிங் கொண்டுநித்தம் காமவிடாய் தீர்வதற்கு
ஆயன்மே லாசைகொள்ளும் அருந்துதியும் நீர்தாமோ 315

பாந்தமுள்ள மின்னலின்மேல் படர்ந்துவரும் கார்மேகம்
ஏந்திழையாள் கூந்தலுக்கு எழுந்தமுகில் ஒப்பாமோ 316

ஒப்பான கூந்தலுக்கு ஊஞ்சலிடக் குப்பியுண்டு
வைப்பான கொண்டலின்மேல் விளங்குகுப்பி காணேனே 317

தொழுகும் பிறையைத் துலங்குநுதல் என்றதினால்
அழகெரிக்கும் சுட்டி அணிந்திருக்கக் காணேனே 318

வரிசை குறையாத மன்னர் தொழிலுடையோர்
உரிசைதரும் பல்வரிசைக் குவமையினி என்சொலுவேன் 319

குமுர்தமிடு நீர்பெருகுங் குன்றுகளைச் செய்ததின்மேல்
அமுர்த மலைபடைத்த ஆரணனை யென்சொலுவேன் 320

காலூறி உடல்தோன்றிக் கட்டுமிடை மீதில்வரும்
நூலின் குலமதுபோல் நுகருமிடைக் கென்சொலுவேன் 321

சொல்லுக் கடங்காத சுகமதனன் தன்மனைவி
மெல்ல நடந்துவரும் வீரைமலர்க் கொப்பாமோ 322

---

313. அருந்துதி-கற்பில் சிறந்தவள், வசிட்டர் மனைவி அருந்ததி.
314. பாகசாதனன் - இந்திரன்; பைந்தொடி - அகலிகை.
320. ஆரணன் - பிரம்மா.
'விந்தைதரு மேருமுதல் வெற்பெல்லாம் செய்தவன்கை
வந்ததற்பின் உங்கள் வனமுலையைச் செய்தானோ'
—கூள. கா. 195
322. சுகமதனன் தன்மனைவி - ரதி; மலர் – மலர்போன்ற பாதம்

கலைசே ரிடையழகும் கண்ணழகைக் கண்டுசென்று
முலையழகைக் கண்டால் முனிவர்தவம் செய்வாரோ 323

வரையைச் சிறகரிந்த வச்சிர விழிக்குயிலே
புரையிலா மேனியெங்கும் பிடுச்சுவிளை யாடேனோ 324

பளிங்குமா மண்டபத்தில் பந்து முலைநெருடி
குளிர்ந்தமதிச் சந்திரன்போல் கூடிவிளை யாடேனோ 325

முச்சதிர மான முத்துமணி மண்டபத்தில்
வச்சிரமணி மாலைமின்ன வந்துவிளை யாடேனோ 326

பூணுமேல் பொன்னரும்பு பொருந்திக் கலந்தாப்போல்
வேணுமென்று நேரமெல்லாம் விளையாடிக் கொள்ளேனோ

எள்ளுக்கு ளெண்ணெய் இருந்து கலந்தாப்போல்
துள்ளு மயில்போலத் துவண்டுவிளை யாடேனோ 328

முருக்கு வளையசைய முத்துச் சரங்குலுங்க
இருக்கி இதழருந்தி யின்பரசங் கொள்ளேனோ 329

மூக்குத்தி முத்தலுங்க முத்தமிட்டுக் கொண்டிருக்கி
தேக்கி மதனரசம் தினந்தினமுங் கொள்ளேனோ 330

பஞ்சுமெத்தை மீதிருந்து பாடகஞ்சிந் தாக்குமின்னக்
கொஞ்சியுனைக் கலந்து கூடிவிளை யாடேனோ 331

கடகரிக்கும் நாயகமே கன்னி யிளங்குயிலே
தடவி யுடலெங்குந் தட்டிவிளை யாடேனோ 332

தாங்கி யெடுத்தணைச்சுத் தழுவி யிதழ்பருகி
ஏங்கி யிளையாமல் இன்பசுகங் கொள்ளேனோ 333

தண்டை சிலம்பலுங்கத் தாங்கி மடியில்வைத்துக்
கொண்டை அசையாமல் கூடிவிளை யாடேனோ 334

செய்கை அறியாமல் சிவன்சிரசில் பெண்ணைவைத்தான்
மய்யல்தரும் பெண்ணை மலரயனும் மார்பில் வைத்தான் 335

ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் ஆயன் மனைவிதனை
மாலிமையென் றெண்ணாமல் மார்பில் தரிக்கலுற்றான் 336

---

329. இதழ் - உதடு.

331. சிந்தாக்கு, கண்ணி 276 பார்க்க.

விட்டுப் பிரியாமல் விதவிதமாய் நானுமுன்னை
பட்டுடைசேர் என்னுடலில் பகுந்திருத்திக் கொள்ளேனோ 337

ஆலடியின் கீழ்வயலை அனுசார மாய்க்கொடுத்தால்
காலமுள்ள நாள்வரைக்கும் கட்டிவிரை யேற்றேனோ 338

சக்கர கிரிவயலைச் சம்மதிச்சு நீகொடுத்தால்
விக்கிரமா தித்தனைப்போல் விளைவேற்றிக் கொள்ளேனோ

காமக் குளத்துவயல் கைவசமா நீகொடுத்தால்
சாமத்துக் குள்ளாகச் சலகைவயல் நானுழுவேன் 340

அரசன் குளத்துவயல் அத்தனையும் நீகொடுத்தால்
திரவியசம் பாவிரைத்துச் சேறுகட்டிக் கொள்ளேனோ 341

ஆலத்தூர்க் குளத்துவயல் அத்தனையும் நீகொடுத்தால்
சேலத்து வாசல்மட்டும் செரியாய்ப் பயிரிடுவேன் 342

தாழைக் குளவயல் தயவாய் எனக்குவிட்டால்
வாழைக் கரும்புதென்னை வச்சுரசங் கொள்ளேனோ 343

வணங்கி எனைக்கலந்து மருவிவிளை யாடிவந்தால்
குணங்க ளறிந்துகொண்டு கொடுப்பேன் திரவியத்தை 344

ஆட்டிக் குலுக்கிமெள்ள அவுதான மாய்ச்சேர்ந்தால்
பூட்டிக் குலுக்கிவரப் பூஷணமெல் லாம்தருவேன் 345

வாங்காமல் நித்தநித்தம் வருவார் வருமளவுந்
தூங்காமல் எனைச்சேர்ந்தால் தூங்குமஞ்சம் நான்தருவேன் 346

---

338. ஆலடி - வயிறு; ஆலிலையை வயிற்றுக்கு இணையாகச் சொல்வர். ''தன் காதலன் வைகும் ஆலிலை வயிற்றினை'' என்று கம்பன் சொல்வான்.

339. சக்கரகிரி - மார்பு. விக்கிரமாதித்தன் - உச்செயினி மன்னன்; காளியின் அருள் பெற்றவன்; எல்லாக் கலைகளிலும் வல்லமையும் பேராற்றலும் படைத்தவன்.

340. சலகை - ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் விதைப்பாடுள்ள நிலம்.

341. சம்பா-ஒரு வகை நெல்; அரசன் குளம், 'அருக்கு மங்கையர்' என்ற திருப்புகழ் காண்க.

338-343. சில ஊர்ப் பெயர்கள் சிலேடைப் பொருளில் வழங்கப்பெற்றுள்ளன.

344. திரவியம் - செல்வம்.

பதினாறு நாங்கினுக்கும் பண்பாய்ச் சகடேற்றி
அதியூக மாப்பார்த்து ஆடிக் கெலியேனோ 347

முன்னை வருஞ்சிகப்பை மோதி வரநிறுத்திப்
பின்னை வருங்கருப்பைப் பிறகே தளுங்கவிட்டு 348

ஆடிவருங் குங்குமக்காய் அத்தினையும் சோடுகட்டு
ஓடிவரும் பச்சையெல்லாம் உள்ளே படுக்கவிட்டு 349

சிகப்புக்குங் கருப்புக்கும் சிக்காமல் உட்புகுந்து
அகத்தில் விளையாடி அனுதினமும் வெல்லேனோ 350

ஈராறு நாலெட் டியல்பான பன்னிரண்டும்
மாறாமல் போட்டெடுத்து மனையில்விளை யாடேனோ 351

கானகத்தில் கரடிபுலி களவேட்டை வந்தவரை
மானைக் கலச்சோட்டி மயில்வேட்டை யாடவிட்டால் 352

தட்டிச் சலாக்குவிட்டுத் தாங்கி யெடுத்தணைச்சு
மெட்டிமெட்டி வில்லிறுக்கி வேட்டையிட்டுக் கொள்ளேனோ

விசையன் சுமுத்திரயை வேணுமென்று தானதர்மம்
இசைய மனம்பொருந்தி யிருந்ததுவுங் கேளாயோ 354

சேவல் கொடியுடைய செந்திவடி வேலருடன்
ஆவலுடன் வள்ளியம்மை யணைந்ததுவுங் காரியங்காண் 355

கெம்பீர மான கிஷ்டண்கோ பாலருடன்
கும்பமுலை மாதர்வந்து கூடினதுவுங் கேளாயோ 356

சுத்தத்தார் சம்மதியேன் துய்யதந்தை சம்மதியேன்
இத்தலத்தில் என்னைச்சேர்ந் திருப்பதுவுங் காரியங்காண் 357

---

347. பதினாறு நாங்கு - 64 கலை; சகடு - வண்டி; கெலி-வெற்றி.

351. ஈராறு, நாலெட்டு, பன்னிரெண்டு-தாயம் ஆடுவோர் போடும் நல்ல எண்கள்.

352. கானகம் - காடு.

354. அருச்சுனன் சுமித்திரையை மணந்தது கூறப்படுகிறது,

355. முருகப்பெருமானுடன் வள்ளி மணந்தது கூறப்படுகிறது.

356. கண்ணன் கோபியர் கூடல்.

357. சுத்தத்தார் - உறவினர்.

சிரிச்சு மனமகிழ்ந்து சேலை நெகிழ்த்துவிட்டால்
தரிக்கவே முத்துமணித் தாவடத்தை நான்தருவேன் 358

தனக்கோட்டை யுள்ள தையல்முத்து மாலையுநீ
கனக்கமணிக் கோட்டையுள்ள காராள பூபன்நான் 359

ஈரொன்ப தீரெட்டும் இலங்குநகர்க் கதிபனுடன்
சேர வுறவாகிச் செய்வதற்குத் தாமிசமேன் 360

**கூடல்**

தீட்டியசெந் தேனுதலின் திருக்கரத்தைத் தான்பிடிச்சு
நீட்டி யிளுக்க நினைவுங் களிகூர்ந்து 361

சுகபோக நாகரிகன் துலங்குகந்த சாமிமன்னன்
செகமோக னாங்கி சிறந்தமுத்து மாலையுடன் 362

அலங்காரப் பூச்சொரிந்து அழகான மெத்தையிட்டுக்
கலங்காத மாமதனன் காமரதி போலிருந்து 363

பிளவோ டிலையருந்திப் பூவையரை முத்தமிட்டு
வளமான பூங்குழலில் வாசமுள்ள பூமுடித்து 364

சேத்தி யணைச்சுச் சிவந்தயிதழ் தான்பருகி
நேத்தியுள்ள துகில்நெகிழ்த்து நிரடித் தனம்பிடித்து 365

ஆங்கார மானஅய்ந்து ஆலிங் கினவிதங்கள்
பாங்கான புட்குரல்கள் பனுவலெட்டுந் தான்புரிந்து 366

ஏந்திழையா ளின்பசுகம் இயல்பாய் மனமகிழ்ந்து
காந்திமதி வதனி கரணவகை பாராட்டி 367

பைம்பொன்னி செண்டுமுலை மீதில் நிகம்பதிய
அன்புடன் முடிந்தகுழல் அங்குமிங்கு மேசொரிய 368

தாமிசமில் லாமல்வெகு காமவெள்ளந் தாவிவர
பூமிதனில் மாங்குயில் புறாவொலி குகுகுவென 369

உன்னியொரு போகமிட உற்பன விசாலமதில்
பொன்னிநதி போல்பெருகிப் பின்னையொரு போகமிட 370

---

360. ஈரொன்ப தீரெட்டும் - தலைவனின் காணி ஊர்கள் 34; தாமிசம்-தாமதம்.

366. ஆலிங்கினம் - தழுவல் 'ஆலிங்கனம் ஐந்து தாடணம் எட்டு' (குமார லிங்க வேந்தன் காதல் க. 291.)

368. நிகம் - நகம்.

விளங்கி வரும்போகம் விதமான சம்போகம்
களங்கிமயில் நற்போருக் கனபோக மாய்ப்பெருகி 371

தேன்கனிவாய் வாலைமுத்துச் சேர்ந்துஉற வாகியபின்
வான்கனிந்து வந்துறையும் மலர்ச்சுனைநீர் தான்வாங்கி 372

கமலமுகங் கைகாலும் கருணைபெறச் சுத்திபண்ணி
விமலர்பதம் போற்றி வெண்ணீறுந் தான்தரித்து 373

உற்றபுகழ் கொடுமணலூர் உகந்தகந்த சாமிமன்னன்
குற்றமிலாப் பூங்காவில் கூர்ந்திருக்கும் வேளைதனில் 374

**பிரிந்த சேனை கூடல்**

வட்டமிட்டு வேட்டையிட்டு வந்தவர்க ளெல்லோரும்
கட்டழகன் பக்கல்வந்து கண்டுகொளத் தானெழுந்து 375

சன்னைசொல்லிக் கைகாட்டித் தானைக் கெதிராகப்
பின்னையொன்றுஞ் சொல்லாமல் பிரிந்துவந்தான்
சேனை முன்பாய் 376

ரற்றின மணிபதித்த நற்சிவிகை மீதேறிக்
கொற்றவர்கள் எல்லோரும் கூடி நடக்கலுற்றார் 377

வில்காரர் வேல்காரர் விதவிதமாய் முன்னடக்க
சொல்படிக்கு ராணியப்போ துடர்ந்து பரந்துவர 378

குதிரைகரி ஒட்டகைமேல் கொம்புத் தொனிமுழங்க
அதிரதிரப் பேரிகையும் ஆனைமேல் ஆர்ப்பரிக்க 379

துலங்கு குடைநிழற்றத் துரைமக்கள் சூழ்ந்துவர
இலங்கிவரும் வாத்தியங்கள் எல்லாம் விளங்கிவர 380

எண்மூன்று மீரைந்து மிலங்கு நகரதிபன்
திண்புயவேள் பழனிமன்னன் சீமான் புதல்வனெனும் 381

---

373. விமலர் - சிவபெருமான்.

376. சன்னை - குறிப்பு. 'சன்னைகாட்டித் திரிந்து கரைவாரும்'' (விறலி. 330).

377. ரற்றினம் - இரத்தினம்.

378. ராணி-இராணுவம்.

379. கரி - யானை.

381. எண்மூன்றும் ஈரைந்தும் 24 + 10 = 34 ஊர்கள்; திண்புயம்- வலிமையான தோள்கள்; வேள் - மன்மதன்.

சீருற்ற மந்திரிமார் செய்ய குறிக்காரர்
தாருற்ற படைத்தலைவர் தரியலர்கள் தற்சூழ 382

## ஊர் திரும்புதல்

மங்களஞ்சேர் கொடுமணலூர் மாநகருக் கோர்முகமாய்
திங்களிளம் பிறையணியும் சிறந்தவன் னீசரிட 383

சன்னதிமுன் வந்து தயவாய்ப் பணிந்தேற்றி
தன்மையாய்ப் பிரசாதம் தயவாகக் கொண்டருளி 384

வலப்பிரமாய்ச் சுத்திவந்து மால்யானை மீதேறி
கெலிப்பாய் மனமகிழ்ந்து கெம்பீர மாகிவர 385

## வரவேற்பு

பவ்வமுத்துப் பச்சைரத்தின பவளவை டூரியத்தின்
அவ்வீதி மங்கையர்கள் ஆலாத்தி யேந்திவர 386

விருது கவரியிட்டு வெஞ்சா மரைவீச
அருமைபெறக் கட்டியங்கள் அன்பாய் மொழிந்துரைக்க 387

மறையோர் கவிவாணர் மகிழ்ந்து புகழ்ந்துவர
குறையாத செல்வமுள்ளோன் குஞ்சரத்தை விட்டிறங்கிப் 388

போதப் பவுசுதரும் புகழ்சுக்கிர வாரமதில்
பூதலத்தோர் கொண்டாடும் பொன்மண் டகத்தில்வந்து 389

## முத்துமாலையின் புலம்பல்

வாழி விளங்கி மன்னவனு மிங்கிருக்க
தோழியுடன் கூடிவந்து துய்யமுத்து மாலைமின்னாள் 390

தாண்டி அகலவிட்ட தாடாளன் எங்கையென்று
வேண்டிப் புகழ்ந்துகொண்டு மின்கொடியாள் தேடலுற்றாள் 391

---

383. திங்களிளம் பிறையணியும் வன்னீசர் - பிறைச்சந்திரனைத் தலையில் சூடிய கொடுமணல் அக்னீசுவரர்.

386. பவ்வம்-கடல்; பெண்கள் நவமணிகளினால் ஆலாத்தி எடுக்கின்றனர். இன்றும் கொடுமணலில் இவை கிடைக்கின்றன,

389. பவுசு - நன்மை.

391. தாடாளன் - வீரமுள்ளவன்.

ஆனைமுக னய்ங்கரனை அன்பாய்ப் பணிந்தேற்றி
மானனையாள் தன்னுடைய மையல் சகியாமல் 392

பொன்னரசு மேவன்புப் பூங்காவில் சேர்ந்திருக்க
என்னரசைக் காணாமல் இங்கிருப்ப தெப்படிகாண் 393

வனத்தில்விளை யாடிவரும் வண்டுகாள் பூங்குயிலே
மனத்தில் கவுடறியா மன்னனென்று நானிருந்தேன் 394

அரும்பு மலரென்று அகலவிட்ட வண்டதுபோல்
குரும்பை முலையென்று கோவமிட்டுக் கொண்டாரோ 395

பேசியின்பந் தந்து பிரதாபஞ் செய்யுமுன்னே
தாசியைப்போ லாணையிட்டுத் தந்துதரச் சொன்னாரோ 396

ஆதரிக்கும் பொன்னரசே அழகான பூவரசே
மாதரசே கொடுமணலூர் மன்னன்வரக் காணீரோ 397

பேரரசே லோகமெல்லாம் பெற்றரசே யெனையாளும்
பாரரசே கொடுமணலூர் பதியரசே காணீரோ 398

முடிகி அலந்திருக்கும் முல்லை மருக்கொழுந்தே
கடுகை பிரமியமா கண்ணரசைக் காணீரோ 399

ஒருமானைக் கரத்தில்வைத்த உண்ணா முலைபாகா
திருகுருணி பனங்காடை சீமானைக் காணீரோ 400

வானம் பரந்துவரும் வளர்கச்சி நாயகியே
ஆனங்கூர் பனங்காடை அதிபன்வரக் காணீரோ 401

உறப்பான புக்குளியூர் உற்றஅவி னாசிலிங்கா
சிறப்பான மானூர்ச் சீமானைக் காணீரோ 402

கஞ்ச மலைமேவும் கருணைகண்ணி நாயகியே
பஞ்சமா தேவிநகர் படைத்தவனைக் காணீரோ 403

முன்னைமறைக் கெட்டாத முருகர் விடைநாதா
சொன்னதொரு கோனூருச் சுகமுகவர்க் காணீரோ 404

வெண்ணைநல் லூருதன்னில் வரும்வேத மறைப்பொருளே
கொன்னைநகர்ப் பதியாளும் கொற்றவனைக் காணீரோ 405

---

394. கவுடு - கபடு.
395. 'வண்டேறனையர் ஆடவர்' (பெருங்கதை)
402, புக்குளியூர் - அவினாசி.
404. திருமுருகன் பூண்டி இறைவன் முருகநாதர்.

வடகாசி தன்னில்வரும் மங்கைவிசா லாட்சியம்மன்
திடமான நடுவைநகர் தென்னவனைக் காணீரோ 406

உண்மைதரும் பேரூரில் உகந்துவரும் பட்டிலிங்கா
வண்மை நகராளும் மன்னவனைக் காணீரோ 407

அண்ணா மலைமேவும் ஆதிபர மேசுபரனே
நண்ணாவூர்ப் பனங்காடை நண்பன்வரக் காணீரோ 408

கட்டுக் கடங்காத கருணைமீ னாட்சியம்மா
பட்டுலூர்ப் பனங்காடை பாக்கியனைக் காணீரோ 409

தீராத வினைதீர்க்கும் தீர்த்தகிரி நாதா
ஊராச்சிப் பனங்காடை உத்தமனைக் காணீரோ 410

ஆணித்தே ரேறிவரும் அலகுமலைக் குமரா
மாணிதிசேர் மாத்தூர் மன்னவனைக் காணீரோ 411

முழுமதிசேர் திருவாரூர் மூக்கண்ணி மாதரசே
எழுமாத்தூர்ப் பனங்காடை என்னரசைக் காணீரோ 412

மருவளரும் பசுபதி மகாலிங்க நாயகரே
கருவூர்ப் பனங்காடை கண்ணரசைக் காணீரோ 413

பெண்ணரசே நின்னுடைய பேரூர் வழியாக
தெண்ணெல்லி நகர்படைத்த சீமானைக் காணீரோ 414

அடையாளங் கொண்டுவந்த அத்தனா ரீசுபரனே
இடையாற்றுப் பனங்காடை யிங்குவரக் காணீரோ 415

அழாதபிள்ளை உண்டெழுப்பு ஆனந்த நாயகனே
கிழாங்குன்றல் பனங்காடை கிரீடிவரக் காணீரோ 416

நந்தா விளக்கொளியே நல்லமங்கை நாயகியே
குந்தாணி நகர்படைத்த கோமானைக் காணீரோ 417

இரவி விளக்கொளியே ஏகாம் பரநாதா
திரவியமா நகர்படைத்த சீமானைக் காணீரோ 418

---

406. நடுவைநகர் - நடுவச்சேரி,

408. நண்ணாவூர் - பவானி.

410. ஊராச்சி - ஊராட்சிக்கோட்டை.

413. பசுபதி மகாலிங்கர் - கரூர்ச்சிவபெருமான்.

416. கிரீடி - அர்ச்சுனன்.

முறிச்சகுளத் தேரிகட்டும் முன்சொக்க னாதலிங்கா
குறிச்சிநகர்ப் பனங்காடை கொற்றவனைக் காணீரோ 419

தினைப்புனத்து வள்ளிபங்கா செந்தி லறுமுகனே
அனையபனை யம்பள்ளி அதிபன்வரக் காணீரோ 420

அடக்கமுள தென்சேரி ஆறுமுக வேலா
முடக்குறிச்சிப் பனங்காடை முன்னவனைக் காணீரோ 421

மங்கள கலியாணி மசரிஉமை மாதாவே
திங்களூர்ப் பனங்காடை தென்னரசைக் காணீரோ 422

வீத்திருக்கும் விருத்தகிரி வேதாந்தத் துட்பொருளே
ஆத்தூர்ப் பனங்காடை அரசன்வரக் காணீரோ 423

தாவும் புலியுடையைத் தரிக்கும் பெருமானே
மாவிளம் பதிபடைத்த மன்னவனைக் காணீரோ 424

கண்ணன் மருகா கவலை மலைக்குமரா
மண்ணுலகில் ஈஞ்சநகர் மன்னவனைக் காணீரோ 425

கயிலைமலை மேவிவளர் கருணை உமைபாகா
வயித்தம் நகராளும் மன்னவனைக் காணீரோ 426

தேடிவருஞ் சிவகிரியின் சிங்கார வேல்முருகா
கூடிய மருதுறையூர் கொற்றவனைக் காணீரோ 427

வில்லா லடிபட்ட விசுவேஷ் பரனாதா
நல்லூர்ப் பனங்காடை நண்பன்வரக் காணீரோ 428

இலகு புகழ்விளங்கும் எங்கள்தங்க மாருமையே
உலகுதனில் கொடுமணலூர் உத்தமனைக் காணீரோ 429

எதுப்பவற்குச் சிங்கம் ஏற்பவர்க்குச் சொர்னமுள்ளோன்
கதித்த கிரிபடைத்த கண்ணரசைக் காணீரோ 430

தேசமெங்கும் புகழ்விளங்கும் திருமுரு கன்பூண்டி
வாச முடன்படைத்த மன்னவனைக் காணீரோ 431

---

419. பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் கூறப்படுகிறது.

423. விருத்தகிரி வேதாந்தத்துட்பொருளைக் கூறுவதால் குமாரதேவர் நினைவு ஆசிரியருக்கு வந்திருக்க வேண்டும்.

425. கவலை மலை - கபிலமலை.

430. கதித்தகிரி - கதித்தமலை, ஊத்துக்குழி அருகே உள்ளது.

ஆறஞ்சு நாலூரென் றவர்மொழி தப்பாமல்
பூரணம்போல் விளங்கிவரும் புகழ்பதியைக் காணீரோ 432

### தோழியர் காணல்

சோலை வனந்தோறும் சுற்றி மதிமயங்கி
ஆலயஞ்சேர் கொடுமணல் அதிபன்மேல் மையல்கொண்டு 433

ஒன்றுந் தெரியாமல் ஊனிறுவரு மானதுபோல்
தென்ற லடிக்கமனந் தெளியா தவள்கிடைக்க 434

துணையா மலரெடுத்த தோழியர்க ளெல்லோரும்
இணைபிரியா தேயிருக்கும் ஏந்திழையைக் காணாமல் 435

வேர்வைகொண்டு நாவுலர்ந்து மெல்லியர்க ளெல்லோரும்
கூர்மைதரு மாலைமுத்து கோதைதனைக் கண்டார்கள் 436

### தோழிமார் ஐயம்

சேலை குலைந்ததுவும் செங்கனியின் வாய்வெளுப்பும்
மாலை முடிந்தகுழல் மயங்கித் துவண்டதுவும் 437

பொட்டழிந்து மையழிந்து பூசுமஞ்சள் தானழிந்து
வட்டமுலை மார்பில் வைத்தகுறி தானறிந்து 438

பணுதிபல பூஷணங்கள் பண்பாக வேதிருத்தி
மணிக்கரத்தில் தானெடுத்து மடிமீதில் தானிருத்தி 439

அடுத்தாரைக் காத்தருளும் அழகுபனங் காடைகுலன்
கொடுத்தமயல் தீராமல் கோதை குழறலுற்றாள் 440

குழறு மொழிகேட்டுக் குணமான தாதியர்கள்
மழலைமொழி பேசுகிற மாலைமின்னாள் செய்ததென்றால் 441

### அன்னை பதிசேரல்

நம்மளுக்கென் றேயுரைப்பார் நானிலத்தி லுள்ளவர்கள்
செம்மையுள்ள அன்னையர்க்குச் செப்புமொழி யேயுரைப்போம்
நம்புகுழல் மாலைமின்னாள் நாயகியைத் தானடத்தி
அம்புவியில் திருவாரூர் அன்னைபதி சேரலுற்றார் 443

432. ஆறஞ்சு நாலூர் - காணியுடைய 34 ஊர்கள்.

தார்குழலாள் மாலைமின்னாள் தையல் தனக்கான
சீர்பரவும் பூமலரின் செய்யமெத்தை மீதிருத்தி 444

மொய்குழலாள் முகங்குளிர முக்காலுந் திட்டிசுத்தி
தய்யலுக்குக் கண்ணாடி தானெடுத்துத் தந்தார்கள் 445

கண்ணாடி பார்க்குமுன்னே காம சலமீறி
எண்ணாம லெனைப்பிரிந்த என்சாமி யெங்கையென்றாள் 446

## அன்னை அறிதல்

வெறிகொண்டு பேசுகிற வித்தகிதன் தாதியர்க்குள்
அறிவுடைய தாதி அன்னை தனக்குரைத்தாள் 447

அன்னையெனும் வன்னமுத்து அவள்பதறி ஓடிவந்து
பொன்னனைய மாலைமுத்து பூங்கா வனக்குயிலே 448

மலரெடுத்துக் கொண்டுவந்த மானத் தருந்ததியே
அலரிவெறி பேசுகிற அவுதானம் சொல்லுமென்று 449

பெற்றெடுத்த வன்னமுத்து பேசி அழைத்திடவே
சற்றே முகம்பாத்து சன்னைவெறி பேசலுற்றாள் 450

பைங்கிளியாள் பூங்காவில் படுத்துறங்கச் சென்றாளோ
அங்கையுள்ள தாதியரே அந்தவகை சொல்லலுற்றார் 451

## தோழியர் அறத்தொடு நிற்றல்

பாலமுர்தம் தேனமுர்தம் படியளக்கு மாதாவே
காலைமலர்ப் பூங்காவில் கண்ணுறக்கஞ் செய்ததில்லை 452

போனோம் வெகுநேரம் பூவெடுத்துக் கொண்டுநின்றோம்
ஏனோ தெரியாது ஏந்திழைபின் பாகநின்றாள் 453

நீரோடும் பூங்காவில் நின்றுமலர் கொய்தெடுத்தோம்
ஆரோ தெரியாது அங்கொருவர் வேட்டை வந்தார் 454

## அன்னையின் ஐயம்

விபரமுள்ள தாதி வீரமுத்தாள் தானுரைக்க
உபகாரஞ் சொன்னாப்போல் உங்களை நான் விட்டேனோ

பின்னும் மனம்பதறி பெற்றெடுத்த வன்னமுத்து
மன்னு புகழ்விளங்கும் வாலைமுத்துப் பொன்முகத்தை 456

பாத்துக் குறியெல்லாம் பண்பாக வேயறிந்து
கூத்தாடும் பெண்களைப்போல் கோதை முளிப்பதென்ன 457

பற்பிணியாள் மார்பில்நிகம் பட்டதுவு மல்லாமல்
கற்பகம்போல தன்னாகம் கசங்கி யிருப்பதென்ன 458

முருக்கமலர் வாய்தாம முல்லைமல ரானதினால்
கருக்கண்டு தாதியரைக் கண்டிச்சு ஏசினபின் 459

### குறிகேட்க எண்ணல்

கோடங்கி சொல்லுகுற குருநாதன் தனையழைத்து
மாடமயில் மாலைமுத்து மனசறிய வேணுமென்று 460

ஆள்அனுப்பிக் கூப்பிடென்றாள் அந்த மொழிகேட்டு
வாள்மயிலாள் மாலைமுத்து வாய்திறந்து பேசலுற்றாள் 461

### தலைவியின் உரை

ஈரேழு மிருபத்து மிலங்கு நகர்க்கதிபன்
ஊரோ கொடுமணலூர் உற்றகந்த சாமிமன்னன் 462

ஆளிசிங்கங் கரடிபுலி ஆன மிருகமெல்லாம்
தூளிபடச் சங்கரித்துச் சுனைநீ ரருந்தவந்தார் 463

பொக்கிஷ சிகாமணி புரந்தர துரந்திரீகன்
கைக்குள்வச மாகவெனைக் கண்டுமயல் பூணலுற்றார் 464

சிலைமதன னாகுநிகர் தீரரண சூரரெனும்
விலைமடவார் ரதிமோகன் விசையனள கிரிவிசையன் 465

காக்கும் புவியரசன் காராள பூபாலன்
ஆர்க்கும் சகாயமுள்ள அரிச்சந்திரன் நல்மொழியன் 466

முத்தமிழோர் கொண்டாடும் முயங்குகந்த சாமிமன்னன்
சித்தம் மகிழ்ந்தென்னைச் சேர்வனென்று தாணுதர 467

---

458. பற்பிணி-பத்மினி சாதிப்பெண்.

460. கோடங்கி - வரும் காரியம் சொல்வோன்.

462. ஈரேழு இருபத்தும் இலங்குநகர் - 34 ஊர்கள்.

464. துரந்தரீகன் - புலமைமிக்கவன்.

466. அரிச்சந்திரன் - எப்போதும் உண்மையே பேசியவன்.

நாயமல்ல வென்று நடந்தேன் தருகாமல்
சாயல்கண்டு பின்துடரத் தாதியரை நானழைத்தேன் 468

தூர நின்று தாதியர்கள் தோன்றி நடந்துவர
சேர நின்று வார்த்தைசொன்ன செங்குவளை மார்பழகன் 469

தனிவேட்டை வந்தாப்போல் தாண்டி நடந்தபின்பு
கனிமொழிவாய்த் தாதியர்கள் கண்டழைத்து வந்தார்கள் 470

ஓதுபுகழ் ஆரூரில் உள்ளவர்கள் தானறிய
ஏது மறியேனென்று ஏந்திழையாள் கூறலுற்றாள் 471

வஞ்சனை செய்யாமல் வந்தையோ தையலென்று
கொஞ்சுமொழி வசந்தகுண ரத்தின மாலைமுத்தே 472

**குற்றமில்லை கூறுக**

மாந்துளிர்போல் மேனியுள்ள மாலைமுத்தே யுன்னுடனே
சேர்ந்தணைந் தவர்பேரைச் செப்பினா லாகாதோ 473

அனலின் பிறந்த ஆரணங்கு துரோபதைதன்
நினவில் மயல்கொண்டு நின்றங்கை செப்பிலையோ 474

தேசமெல்லாம் பேர்விளங்குஞ் செயசோழன் தன்மனைவி
பூசல்கொடு அனுதினமும் புலவருடன் சேரிலையோ 475

உனக்குப் பயமென்ன உள்ளபடி நீயுரைத்தால்
மனக்கவுடு செய்யேன் நான் மாலைமுத்து சொல்லுமென்றாள்

தெள்ளுதமிழ் மாலைமுத்து தேன்மொழியாள் சொன்னதில்லை
உள்ளுறவாய்ப் போயிருந்த ஒயிலான தாதியரை 477

இவள்பயிலும் செய்தொழிலும் இந்நிலத்தில் கண்டதில்லை
நவமணிவாய் தாதியரை நமக்கொளிக்க வேண்டாங்காண் 478

இந்த விதமாக எடுத்துரைக்கத் தாதியர்கள்
சொந்தமுடன் பூங்காவில் தோள்சேர்ந்த மன்னவனை 479

---

468. தருகாமல் - வசப்படாமல்; நாயம்-நியாயம்.

471. இழை-அணிகள்.

474 அனல் - நெருப்பு;
'வில்லால் தெறிப்பவன்று வீழ்ந்திடுநெல் விக்கனியைச்
சொல்லால் பொருத்தவல்ல தோகையரும் நீர்தாமோ'
(சிவகங்கை இராசேந்திர பூபதி காதல் க. 243)

அந்நாளில் தேர்விசையன் அல்லியுடன் சேர்ந்ததுபோல்
இந்நாளில் மாலைமுத்து இவள்சேர்ந்த மன்னனெங்கே 480

**காதலன் கந்தசாமி**

பொன்மணலாங் கொடுமணலூர்ப் பூபாலன் எங்கள்துரை
நன்மணியாம் பூவுலகில் நல்லகந்த சாமிமன்னன் 481

தேடிவந்தான் பூங்காவில் திரவியசம் பன்னனவன்
கூடி உறவுகொண்டான் குணமான மாலைமுத்து 482

இன்பமுடன் தாதியர்கள் இந்தவிதங் கண்டுரைக்க
செம்பவள வாய்திறந்து சிரிச்சு மனமகிழ்ந்து 483

காமிமுத்து மாலைமின்னாள் கட்டழகி செய்ததவம்
பூமிதனை மாமியென்றே புகலவரம் பெற்றாளே 484

ராசனுக்கு ராசன் நல்லகந்த சாமிமன்னன்
ஈசனுக்கு முளைவாரி யிட்டமுது செய்தவன்காண் 485

பாருலகெல் லாமறியப் பாவாணர் தங்களுக்குச்
சீருலவும் புத்தரவின் செய்யமணி தந்தவன்காண் 486

பரிபா லனம்படைத்த பாக்கியசம் பன்னனுடன்
பிரியமுடன் மாலைமுத்துப் பேசினதென் பாக்கியங்காண் 487

சொன்னமொழி தவறாத சுமுகன்மக ராசனெனும்
அன்னநடை மாலைமுத்து அழைத்துவரச் சொல்வாரோ 488

**தலைவனுடன் வாழ்க**

பெண்ணரசு மாலைமுத்துப் பேசியின்ப மாயிருக்க
வண்மையுடன் பொற்சிவிகை வாசல்வரக் கண்டழைத்தான்

நற்சரிகை சிந்தாக்கும் நாகபடம் பொற்சிலம்பும்
பொற்கடகந் தோளுவந்தி பூஷணமெல் லாம்தரித்து 490

மங்கை தனக்கேற்ற வன்னமணிப் பட்டணிந்து
கொங்கைக் கழகான குடமணிப்பொன் தாவடமும் 491

---

480, விசையன் - அர்ச்சுனன்.

486, 'காணிக்கு மைந்தன் தனைத்தேடி நின்று கவிஞருக்கு
ஆணிப்பொன் கேட்க விலையென் றுரைக்க அவன்மனையில்
பூணிக்கை யாகப் புதர்வரும் புற்றர வாயினிலே
மாணிக்க மீந்தவன் வேலவன் வாழ்கொங்கு மண்டலமே,
(கொ. ம. சதகம்-வால. 86)

கண்ணுக் கழகான கஸ்தூரி யும்மிட்டு
பெண்ணுக் கழகான பிறையுந் திருவுமிட்டு 492

தயவாய் அமுதருந்தி தண்டிகையின் மீதேறி
செயமாகுங் கொடுமணலூர் சீமா னிடத்தில்வந்து 493

அன்பு களிகூர்ந்து அழகுகந்த சாமியுடன்
இன்பமுடன் மாலைமுத்து இயல்புபெற்று வாழ்ந்திடவே 494

வேழமுக அய்ங்கரனும் வெற்றிவே லாயுதனும்
ஆழியதில் துயிலும் ஆயர் மிகவாழி 495

இறையவனும் பார்வதியும் இரவி மதிவாழி
மறையவனும் கலைவாணி மாமுனிவர் தான்வாழி 496

இந்திரனும் அயிராணி இயல்பான தேவர்களும்
செந்திரு மடந்தையுடன் செகமேழும் மிகவாழி 497

மூவாறும் ஈரெட்டும் முயங்கு நகர்வாழி
பாவாணர் தேடிவரும் பனங்காடர் குலம்வாழி 498

சித்திதரும் மாரியம்மன் செல்லாண்டி யம்மனுடன்
பத்திதரும் அத்தனூர்ப் பார்ப்பதியுந் தான்வாழி 499

மதுர கவியுதவும் மாமதுர காளியம்மன்
முதுமறைசேர் தம்பிராட்டி முக்கணியுந் தான்வாழி 500

கனத்த புகழுதவுங் கனமதுரை காளியம்மன்
நினைத்தகரு மம்முடிக்கும் நின்றகண பதிவாழி 501

மோனமந் திரரூபி முத்தாலை யம்மனுடன்
ஞானம்புகழ் சேரும்நல்ல மல்லாண்டார் தான்வாழி 502

ராமர் துணைவி ராவுத்த நாயகியும்
மாமறைசேர் மாதேசி லிங்கர் மிகவாழி 503

---

493. ஆழி - கடல்.

496. இரவி-சூரியன்; மதி-சந்திரன். மறையவன்-பிரம்மா; கலைவாணி-சரசுவதி.

497. அயிராணி-இந்திராணி; செந்திருமடந்தை-இலக்குமி.

498. மூவாறும் ஈரெட்டும் முயங்குநகர் - பனங்காடை காணிஊர்கள் 34.

499. சித்தி - நினைத்தது நடப்பது.

500. மறை - வேதம்; முக்கணி - முக்கண்ணி.

வீட்டில் விளங்கிவரும் விந்தையுள தேவதையும்
பாட்டிமைசேர் கருப்பணனும் படைத்தலைச்சி மிகவாழி 504

செட்டி வினாயகனும் சிறந்தவண்டி அங்கானும்
கட்டியஞ்சேர் ஆபத்துக் காத்தவருந் தான்வாழி 505

மகராசன் பழனி மகிழ்ந்து பணிந்துதொழும்
அகமகிழுந் தம்பிராட்டி அம்மன் மிகவாழி 506

இயல்பான கொடுமணலூர் இலங்குகந்த சாமிமன்னன்
நயமாக யெந்நாளும் நானிலத்தில் மிகவாழி! 507

கொடுமணல் கந்தசாமிக் காதல் முற்றும்.

---

503. ராவுத்த நாயகி - சீதை; கொடுமணலில் சாத்தந்தை குலத்தினர் கட்டிய இராமர் கோயில் ஒன்றுள்ளது.

505. வண்டி அங்கான் - வண்டி ஓட்டேர் தெய்வம்.

# அருஞ்சொல் அகராதி

எண் : கண்ணி எண்



அண்ணாமலை 408
அத்தப்பன் 48
அத்தனூர்ப் பார்ப்பதி 499
அத்தனூரம்மன் 16
அபிராமி 133
அமக்கை நகர் 55
அமுர்த மலை 320
அய்ங்கரன் 11,205
அய்ந்தூர் 116
அரிச்சந்திரன் 466
அருந்ததி 313
அர்த்தநாரீசுவரன் 415
அலகுமலை 411
அனிச்சமலர்ப்பதம் 295
அன்னம் 11
அன்னை வன்னமுத்து 448
அஷ்டலட்சுமி 14
ஆத்தூரார் 30,102,108,423
ஆனங்கூர் 31,116,401
ஆலடியண்ணன் 132
ஆற்காடு நிசார் 186
இந்திரன் அயிராணி 497
இடையாறு 415
இராமர்படை 231
இருநான்கு லட்சுமி 72
இளந்தாரி வீரியர் 89
இனம்பிரிந்த மான் 294
இறையவர் - பார்வதி 496
ஈசுபர மூர்த்தி 44,157
ஈஞ்ச நகர் 425
ஈரெட்டு அவுதானம் 60
உணவு வகை 124,167,178
உண்ணாமுலை பாகன் 400
ஊராச்சி 410
ஊழியக்காரன் 98
ஊறுகாய் பத்து வகை 167
ஊற்றாணி 149
எருது வகைகள் 68 - 69
எளஞ்சு நகர் 79
எழுமாத்தூர் 1,29,112,214, 412
ஏகாம்பர நாதர் 418
ஏலேல சிங்கன் 150
ஒட்டகை 212, 319
ஓதாளன் 52, 162
ஓலை 81
கங்கை குலம் 75, 217
கச்சி நாயகி 401
கஞ்சமலை 403
கட்டியக்காரன் 139, 153
கணபதி 101
கண்ணப்பன் 39
கண்ணன் - கோபியர் 356
கதலி இலை 165
கதித்தகிரி 430
கந்தசாமி 4
கம்பனூர் மலை 227
கரி 371
கருணீகர் 210
கருப்பணன் 504

கரூர் 413
கலைவாணி 496
கவிவாணர் 61
கன்னிமணம் 217
காசி விசுவேசர் 73
காஞ்சிமாநதி 256
காட்டுக் கருப்பணன் 25
காராளத் தெய்வம் 78
காராளன் 84
காரியப்பேர் 221
காவேரி 111
கிரீடபதி 51
கிழாங்குன்றல் 416
குஞ்சரம் 388
குந்தாணி 417
குவளை மாலை 7,32,140
குழல்காரர் 229
கும்பகர்ணன் படை 227
குறிக்காரர் 220
குறிச்சி 419
குறுப்பு நாடு 32
கூந்தல் முகில் ஒப்புமை 317
கெட்டி முத்து 50,120,127, 158
கெவுளி சொல்லல் 261
கொடுமணல் 2,29,35,67,90, 112,152,374,383,397, 429,433
கொடுமணல் மக்கள் 93,96
கொடுமுடிப்பண்டிதர் 28,204
கொடுவாய் 54
கொன்னையார் 31,115,405
கோடங்கி 460
கோடு கட்டிவேட்டை 80
கோம்பைக் கணுவாய் 229
கோனூர் 30,115,404
சங்கீதம் 122
சாமி (தலைவன்) 1
சாம்புவன் 99
சிங்கத்தைத்தோல் உரித்தல் 221
சிதம்பரத் தாண்டவன் 121
சிரகிரி(சென்னிமலை) 34
சிலப்புபோல் கொண்டை 270
சிவகிரி 34,427
சிவபூசை 156
சிவனை வணங்கல் 373
சிவிகை 377
சின்னத்தம்பி 42
சின்னய்யன் 44,157
சுப்பய்யன் 47
சூரியபான் 196
செங்கோடன் 48
செஞ்சிப்பதக்கம் 189
செட்டி விநாயகன் 505
செந்திரு மடந்தை 497
செல்லாண்டியம்மன் 15,130, 499
சென்னிமலை 51,159,162
சேனாபதி பண்டிதர் 204
சேனை நகர் 31
சொக்க விநாயகர் 12
சொப்பனம் காணல் 265
சோதனை விளங்க வைத்தல் 144
சோழன் மனைவி 475
சோழியம்மன் 133
தங்கம்மார் 18,257
தங்கம்மன் விளையாட்டுக் கருவி 223

தம்பிமார் 51
தமையன் 45
தம்பிராட்டி 350,506
தம்பிராட்டியம்மன் 21
தலைவி புலம்பல் 397-430
தலைவி வேண்டுதல் 300-303
தலைவன் புகழ்தல் 313-323
தலைவன் ஆபரணங்கள் 186-193
திங்களூர் 29
திங்கள் மாநகர் 113
திட்டி சுத்தல் 445
திருவாரூர் 412,443
திருகுருணி 400
திருப்பூர் 117
திருமுருகன் பூண்டி 431
தீர்த்தகிரி 410
துரோபதை 474
தென்காசி விசுவேசர் 129
தென்சேரி 421
தேவேந்திரன் 190
தோட்டி 91
தோழிகள் ஐயம் 437
நடுநகர் 117
நடுவைநகர் 406
நண்ணாவூர் (பவானி) 408
நல்ல மல்லாண்டார் 502
நல்ல சகுனம் 215
நல் முகூர்த்தநாள் 200
நல்லூர் 29,36,117,128,428
நாகூர் அபரஞ்சி 187
நாடகசாலை 122
நாரணன் சிலைவாங்கல் 258
நீலி பழி துடைத்தது 142
நெல்லி நகர் 414
நெற்றி-பிறை ஒப்புமை 318
பசுபதி 413
பஞ்சமாதேவி 403
படைத்தலைச்சி 24
பட்டயம் கொடுத்தது 146
பட்டுலூர் 409
பரன்கிரி 205
பழனி 3, 45, 120
பழனியப்பன் 127
பனங்காடை 1, 31, 97
பனயம்பள்ளி 31, 115, 421
பாணன் பிணம் சுமந்தது 145
பாவாணர் 488
பிரமியம் 30,113,379
பிரதானியர் 106
பிடாரப்பன் 2, 3, 45, 49, 119, 123, 157
புக்குளியூர் அவினாசி 402
புரந்தரனார் 283
புலயனுடன் உண்டது 148
புற்றரவின் மணி எடுத்தது 143, 480
பெண்ணரசி அணிகலன் 271-279
பெரிய அய்யன் 43
பெருந்தொழுவூர் 53, 162
பேரூர் 407
பொங்கலூர் நாடு 75
பொருளந்தை 55
பொன் கலப்பை 67
பொன்மணலாம் கொடுமணல் 481
பொன்னையன் 50, 127, 149, 158, 160
மசரி உமை 422

மணக்கும் திருக்காஞ்சி 156
மணிகள் 385
மதுரை காளியம்மன் 17, 500
மருதுறை 29,113,427
மலை வளம் 232,241
மாதேசலிங்கர் 23,503
மாத்தூர் 411
மாவிளம்பதி 424
மாலைமுத்து 282
மானூர் 30,115,403
முடக்குறிச்சி 30,115,421
முத்தாலையம்மன் 19,502
முத்து 42
முத்துக்குமார் 46
முத்துக் குழந்தைவேல் 121
முத்து வேலம்மா 163
முத்துவேல் பிள்ளை 82
முருகன் 6,355
முருகன் பூண்டி 404
முளைவாரி அமுதளித்தது 141,415
மூவேந்தர் 71
மேகம் தளை விடுத்தது 147
மேழிக் கொடி 2
மைத்துனர் 52
யானை ஏர் 226
ராசதுரை 42
ராமய்யன் 53
ராமர் 503
ராவுத்த நாயகி 22,503
லட்சுமி 10
லிங்கயன் 160
வஞ்சியம்மன் 131
வடகாசி 406
வணிக விநாயகர் 201
வண்டி அங்கான் 505
வயலின் பெயர்கள் 338,443
வயித்தம் 426
வய்யாபுரி 27
வரையைச் சிறகு அரிதல் 324
வன்னீசர் 13,383
வன்னீசருக்குப் புலியாடை 251
வாணி 7
வாணி கூடல் 30, 37, 113
விசயரங்கன் 46
விசயன்-அல்லி 480
விசயன்-சுமித்திரை 354
விசாலாட்சி 8, 73, 129
வித்வசனர் 66
விநாயகர் 5
வினாயகருக்குப் படைப்பவை 202
விருத்தகிரி 423
வில் விசையன் 213
வீர சோழபுர நாடு 33
வீர நாராயணர் 14
வெண்ணெய் நல்லூரர் 405
வெள்ளிலை 118, 184
வெற்றிலை அடைக்காய் 218
வேட்டை ஆயுதங்கள் 87-89
வேட்டை இசைக்கருவி 197-199
வேட்டைக் கருவிகள் 134-136
வேட்டை மிருகங்கள் 242-250
வேட்டைக்கு வருவோர் அணி 102-104; 125
வேதகிரி 34

# கந்தசாமி, பொன்னையன் குடிவழி



# கொடுமணல்
# பொன்னையன் காதல்

# கொடுமணல்
# பொன்னையன் காதல்

இக் கொடுமணல் இலக்கியங்களின் முதல் காதல்நூலின் தலைவன் கந்தசாமியின் சிறிய தந்தை மகன் பொன்னையன். இவன் ஈசுவரமூர்த்தி என்பாரின் மகன். முதல் காதல்நூலைப் பாடிய அதே புலவர்தான் இக்காதல் நூலையும் பாடியுள்ளார். முதல் நூலில் விரித்துச் சொல்லும் இவர் சிலவற்றைச் சுருக்கி இந்நூலில் கூறுகின்றார்.

கொடுமணல் கிராமத்திலேயே பொன்னையனும் சிறப்பாக வாழ்ந்துள்ளான். ஒப்புமை கருதி இப்பொன்னையன் காதலும் இங்கு பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் முதல் நூலுக்குக் கூறிய செய்திகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும். கந்தசாமி, பொன்னையன் குடிவழிப்பட்டியல் இரு தலைவர்கட்கும் உள்ள குடும்ப உறவைக் கூறும்.

## காப்பு

கங்கைகுல எழுமாத்தூர்க் காராளன் பொன்னையன்மேல்
பங்கயம்சேர் காதல் பகர்ந்துரைக்க—எங்குமே
சீரான நற்பரமன் செய்யசுத னாகவந்த
காரானை மாமுகத்தோன் காப்பு.

எழுமாதை நகர்க்கதிபன் இரவலர்சேர் பனங்காடை
வழுவாத கீர்த்திபெற்ற மன்னர் - பழுதில்லா
வித்வசனர்க் கேயுதவும் வேந்தனெனும் கீர்த்திபெற்ற
முத்துப்பொன் னையவேள் முகம்.

## இறைவணக்கம்

பொன்புகழ்சேர் எழுமாதைப் புண்ணியன்பொன் னையன்மேல்
நன்புகழ்சேர் காதல் நயமாய்ப் புகழ்ந்துரைக்க 1

சொல்மதுர வாக்குதவித் துலங்கி மிகவிளங்க
நல்மதுர வாக்குதவு நல்லதந்தி மாமுகனே 2

மானதிசேர் எழுமாத்தூர் மகராசன் பொன்னையவேள்
தேனினிய காதலுக்குத் திருமாது முன்னடவாய் 3

அண்டர்புகழ் கொடுமணலூர் அரசாளும் பொன்னையவேள்
தண்டமிழ்சேர் காதலுக்குச் சண்முகனே முன்னடைவாய் 4

சுகவசன ஈசுரமூர்த்தி சுதனன் பொன்னையவேள்
செகராசன் காதலுக்குச் செயவாணி முன்னடவாய் 5

பனங்காடை குலநேயன் பாக்கியவான் பொன்னையவேள்
மனமகிழும் காதலுக்கு வாக்குதவும் பூமாதே 6

செங்குவளை மார்பழகன் செகராசன் பொன்னையவேள்
மங்கைசெறி காதலுக்கு மலைமாதே முன்னடைவாய் 7

களபமணி மார்பழகன் கர்ணன்முத்துப் பொன்னையவேள்
அழகான காதலுக்கு அச்சுதனே முன்னடவாய் 8

காமனுக்கு ராசன் கனகமுத்துப் பொன்னையவேள்
மாமறைசேர் காதலுக்கு வாக்குதவும் நான்முகனே 9

செந்தமிழ்சேர் நல்லூர்ச் செகராசன் பொன்னையவேள்
விந்தைசெறி காதலுக்கு விசாலாட்சி முன்னடவாய் 10

## தலைவன்

ஆழிபோல் தமிழுரைக்கும் அன்புகவி ராசர்முன்னே
மேழிக் கொடிக்காதல் விளம்பலுற்றேன் பொன்னையன்மேல்

மாதுசெறி பொன்னையவேள் மகராசன் என்கவியில்
ஏதுவடுக் கண்டாலும் இன்பமெனக் கொண்டருள்வான் 12

காதல் தனைக்கேட்டுக் கர்ணன்முத்துப் பொன்னையவேள்
சாதகமாய் என்குடியைத் தாபரிக்கும் ராசமன்னன் 13

எட்டுவடச் சங்கிலியை இனியமுகம் மகிழ்ந்து
மட்டுலவும் பொன்னையவேள் மகிழ்ந்தெனக்குத் தந்தானே 14

கூட்டிக் கணக்கறிந்து குவலயத்தில் சொன்னவர்க்குச்
சீட்டித் தலைப்பாகுஞ் சிறந்ததங்க வளைதருவான் 15

கோமான் புகழ்விளங்குங் குறுப்புவள நாடுதனில்
தேமாங் கனிவிளங்குந் திங்கள்நக ராளுமன்னன் 16

கற்றவர்கள் கொண்டாடும் காங்கய நாடுதனில்
உற்ற மருதுறையில் உகந்தரசு செய்யுமன்னன் 17

நண்புதவும் வடகரை நாடு தனில்விளங்கும்
பண்புசெறி பட்டுலூர்ப் பதியரசு செய்யுமன்னன் 18

தேறுபுகழ் பிரமியம் திருவாணி கூடல்நகர்
கூறுபுக ழூராச்சிக் கோட்டைநக ராளுமன்னன் 19

தென்னவர்கள் கொண்டாடுஞ் சிங்கார மாத்தூரும்
நன்னயஞ்சேர் குறிச்சி நகராளும் ராசமன்னன் 20

தாருலவும் பூந்துறை நாடு தனில்விளங்கும்
சீருலவும் எழுமாத்தூர் தேடிஅர சாளுமன்னன் 21

ஓங்குபுகழ் முடக்குறிச்சி உற்ற அனுமநகர்
தேங்கு பனயம்பள்ளி தேடிஅர சாளுமன்னன் 22

ஈஞ்சநகர் தன்னுடனே யிலங்கிவரும் ஐந்தூரும்
வாஞ்சகமாய் எந்நாளும் வந்தரசு செய்யுமன்னன் 23

வையா புரிநாட்டில் வாகான கோனூரும்
ஒய்யார மானூரில் உகந்தரசு செய்யுமன்னன் 24

விருதுகவி ராசர்புகழ் வெங்கல நாடுதனில்
கருவூர் கிழாங்குன்றல் கருதிஅர சாளுமன்னன் 25

தெண்ணெல்லி மாநகரில் சிங்கார மாயிருந்து
புண்ணியவான் பொன்னையவேள் புகழ்ந்தரசு செய்யுமன்னன்

அந்தமுள கீழ்க்கரை அரையநா டதனில்வருஞ்
சொந்தமெனும் இடையாற்றில் துலங்கிஅர சாளுமன்னன் 27

மடலெழுதும் பொன்னையவேள் மகிழ்ச்சியுடன் எந்நாளும்
வடகரை ஆத்தூரில் வந்தரசு செய்யுமன்னன் 28

இலகுபுகழ் இராசிபுரம் இன்பமுள்ள நாடுதனில்
உலகுபுகழ் கொன்னையா றுகந்தரசு செய்யுமன்னன் 29

மண்ணுலகில் திரவியமா நகருந் திருகுருணி
விண்ணவர்சூழ் குந்தாணி விளங்கஅர சாளுமன்னன் 30

பூவுலகி லெந்நாளும் புகழ்ந்து மனமகிழ்ந்து
மாவிளம் பதிநகரில் வந்தரசு செய்யுமன்னன் 31

தயவுசெறி யாறுநா டதில்விளங்கும் அந்நாளில்
நயமான நடுவைசெரி நகராளும் மன்னவன் 32

இரவலர்கள் கொண்டாடும் இந்நிலத்தில் எப்பொழுதும்
அரசன்சேர் திருமுருகன் பூண்டியர சாளுமன்னன் 33

மாசிப் பிறையழகன் மகராசன் பொன்னையவேள்
காசினியி லெந்நாளும் கடிகைநக ராளுமன்னன் 34

பாவாணர் தான்புகழும் பண்பு பொருனைநதி
தேவாதி தேவர்புகழ் திருமணிமுத் தாநதியான் 35

காமிசெறு நல்லாறுங் கருணைபுகழ் வானிநதி
பூமிபுகழ் காவேரி புகழ்காஞ்சி மாநதியான் 36

மகபதிசேர் சிவகிரியும் வானவர்கள் சிரகிரியும்
புகழூர்க் கிரிபடைத்த பொன்னையபூ பாலனெனும் 37

கதித்தகிரி வேதகிரி கவலைமலைக் கிரியுடனே
பதித்தபுகழ் பழனிமலை படைத்தமக ராசனெனும் 38

காவலர்கள் கொண்டாடும் கர்ணன்முத்துப் பொன்னையவேள்
நாவல னறிவில்வீர சோழபுர நாடதிபன் 39

சோழியம்மன் விசுவேசர் சுந்தரி விசாலாட்சி
தாளிணையை யெப்போதுந் தயவாய்ப் பணியுமன்னன் 40

வன்னியீசர் பொற்பதத்தை மறவாம லெப்போதும்
இன்னிலநாள் தோறும் இயல்பாய்ப் பணியுமன்னன் 41

தங்கமார் பொற்பதத்தைத் தயவாய் மனமகிழ்ந்து
பொங்கமுட னெந்நாளும் புகழ்ந்துதொழு தேற்றுமன்னன் 42

குடகுமலை யாளமெங்குங் கொண்டாடும் பொன்னையவேள்
நடனவாம் பரிநகுலன் நாரியர்கள் மாமோகன் 43

ஒட்டகம் கரிசிவிகை உல்லாச மாய்ப்படைத்த
வட்ட மதிவதனன் வாகாம கோசரனாம் 44

வேதியர்க்கும் ராசருக்கும் விளங்கும் வசியருக்கும்
சாதி அனைவோர்க்கும் சகாய புருஷனெனும் 45

ஓதுபுகழ் நல்லூர் உற்றபனங் காடைகுலன்
ஏதுக்கு மஞ்சாத இங்கித குபேரனெனும் 46

TAMIL NA... MADRAS-

மன்னர் படைச்சாலை மகிழ்ந்துரைக்கக் கணக்கருண்டு
பொன்னையவேள் படைச்சாலை புகலக் கணக்கருண்டு 47

மருவலர்கள் சிங்கம் மன்னன்முத்துப் பொன்னையவேள்
திருவளரு மென்னேழு தேசதிறை ராசரெனும் 48

அரும்புகனங் குழல்மடவார் ஆசை மயல்தீரக்
குரும்பைமுலை மார்பழுந்தக் கூடுகின்ற மாமோகன் 49

கங்கைகுல நேயன் கனகமணி மார்பழகன்
தங்கநிலைக் கோட்டை தயவுடைய ராசமன்னன் 50

காராளன் ராசதுரை கனகமணி மார்பழகன்
தோராத செம்பொன்மணி துலங்குநிலைக் கோட்டையினான்

**தமையன்மாரும் தம்பிமாரும்**

ஆர்க்குஞ் சகாயன் அழகுகந்த சாமிமன்னன்
காக்கும் புவிராசன் கர்ணன்பிடா ரேந்திரதுரை 52

சமய சஞ்சீவி தார்வேந்தன் பொன்னையவேள்
தமயனிரு வர்மெச்சத் தானரசு செய்யுமன்னன் 53

சீரான சிரகிரிவேள் சிறந்தகெட்டி முத்துமன்னன்
பேரான பழனிமன்னன் பின்துணைவன் பொன்னையவேள்

**வேளாளர் புகழ்**

சுத்த ரணவீரன் துரைராச கெம்பீரன்
அத்தன் அணிந்திருக்கும் அரவின்மணி தானெடுத்து 55

கவிவாணர் தங்களுட கலிதவிர்க்கத் தான்கொடுத்து
புவிமீதில் கீர்த்திபெற்ற பூமி யருள்பாலன் 56

ஈசனுக்கு முளைவாரி இயல்பாய் அமுதளித்துத்
தேசமெங்கும் கீர்த்திபெற்ற செங்குவளை மார்பழகன் 57

அருந்தின கூழமுர்தை அம்புவியோர் தானறிய
துரும்பதினால் தானெடுத்துச் சோதினை தந்தமன்னன் 58

நயமான பாண்டியர்க்கு நாடறியப் புயல்பொழியப்
தயவுடனே பிணைகொடுத்த தர்மபரி பாலனெனும் 59

## வாசல் சிறப்பு

வச்சிரமணி மண்டபமும் வங்கார மாமதிலும்
உச்சிதமாய் விளங்கிவரும் உல்லாச வாசலினான் 60

மாணிக்க முத்துநவ ரத்தினமணிப் பொற்கதவும்
ஆணிமுத்து மாலைமின்னும் அழகான வாசலினான் 61

ஆடையுடன் செம்பொன் அழகான முத்திலங்க
மாடைநவ ரத்தின மணியிலங்கும் வாசலினான் 62

முத்து மரகதமும் மொழிசேர்கோ மேதகமும்
சுத்தமது ளெங்கும் துலங்கிவரும் வாசலினான் 63

குடிதாங்கி மாரன் குமணனந்தி ராசனைப்போல்
படிமீதில் ஏற்பார்க்குப் பரிசுதவும் வாசலினான் 64

பச்சைரத் தினம்நீலம் பவளம்வயி டூரியமும்
இச்சைதரும் செம்பொன் இலங்கிவரும் வாசலினான் 65

கர்ணனைப்போல் எந்நாளும் கவிவாணர் தங்களுக்குச்
சொர்ணம் விளங்கித் துலங்கிவரும் வாசலினான் 66

சாலுவை பொற்பதக்கம் சரப்பணிசேர் தங்கவளை
மேலிமையாய் எந்நாளும் விளங்கிவரும் வாசலினான் 67

கற்கண்டு சக்கரைதேன் கலந்துவரும் முக்கனியும்
பொற்குடத்தில் பாலமிர்தம் புகழ்ந்துவரும் வாசலினான் 68

நவதானி யத்துடனே நற்பவுசு பாக்கியமும்
குவலயத்தில் எந்நாளும் கூடிவரும் வாசலினான் 69

பாமாது கலைவாணி பரதவித்தை நாட்டியமும்
பூமாது மென்மேலும் புகழ்ந்துவரும் வாசலினான் 70

சிங்காரச் செம்மறையன் சிவலைகருக் காமயிலை
வங்காரப் பொன்னரக்கன் வளர்ந்தவெள்ளை செங்காரி 71

அத்திக்காய்ப் பில்லை அழகுபசுக் கன்றுடனே
இத்தினையுங் கூடி யிலங்கிவரும் வாசலினான் 72

துகைசேர் புவிமீதில் தொண்ணூத்தா ரூர்க்கதிபன்
வகைவகையாய் நித்தம் மனுவிளங்கும் வாசலினான் 73

மேதிகன்று கொறியினங்கள் விந்தையுடன் எந்நாளும்
நீதி குறையாமல் நின்றிலங்கும் வாசலினான் 74

பாங்குதரு மேன்மேல் பண்பு குறையாமல்
தாங்குமஞ்சம் காளாஞ்சி துலங்கிவரும் வாசலினான் 75

நற்புதல்வர் நற்புதல்வி நண்புமேல் மேன்மேலும்
கற்பகம்போல் எந்நாளும் கருணைசெறி வாசலினான் 76

இரவிமதி பொய்த்தாலும் இலங்குமறை பொய்த்தாலும்
திரவியவான் பொன்னையவேள் செப்புமொழி பொய்யாதான்

## உறவினர்

புருவ னுதலழகன் புண்ணியவான் முத்தையனை
அருமை மருகனென்று அழகாய் உரைக்குமன்னன் 78

சின்னணரா சேந்திரனைச் சிங்கார மாய்ப்புகழ்ந்து
வன்ன மருகனென்று மகிழ்ந்துரைக்கும் ராசமன்னன் 79

மைப்படியும் பூவுலகில் மைந்தன்முத்துத் தம்பணுஞ்
செப்பரிய லிங்கயவேள் சிறந்த புதல்வருடன் 80

இனஞ்சேரும் நற்புதல்வர் இயலாய் விளங்கிவர
மனமகிழ்ந்து மீனாட்சி மாதுமையைப் போற்றுமன்னன் 81

பார்வேந்தன் கொண்டாடும் பராக்கிரம வசீரனெனும்
தார்வேந்தன் பொன்னையவேள் தரளமணி மண்டபத்தில் 82

## வேட்டை விருப்பம்

வந்திருக்கும் வேளைதனில் வாகான மந்திரிமார்
சுந்தரஞ்சேர் கருணீகர் துலங்குகுறிக் காரருடன் 83

வேட்டைக் கெழுந்தருள வேணுமென்று தானுரைக்க
கோட்டைக் குறிக்காரர் கொற்றவர்கள் தான்கேட்டு 84

சூளுமுனைக் காரருக்கும் தோராத வீரருக்கும்
வாளுமுனைக் காரருக்கும் மந்திரிமார் ஏதுரைப்பார் 85

துண்டுசா குழலுந் துப்பாக்கி நேரிசமும்
குண்டு மருந்துகளும் கொண்டுவர வேணுமென்று 86

மட்டாணி ஒட்டுப் பருசுகத்தி கெண்டயமும்
கட்டாரி சமுதாடுங் கைவேட்டைக் கத்திகளும் 87

சூகரத்தைக் கண்டவுடன் தூள்பரக்கச் சங்கரிக்க
நாகரிய மாக நல்லநல்ல வேல்களுடன் 88

வில்லம்பு குத்தீட்டி வேண்டிவருஞ் சக்கரமும்
மல்லர்களுக் கேற்ற வளைதடியுங் கைவெடியும் 89

நெடியவலை கையருவாள் நீங்காத கைக்கவணும்
கடிய கடமானுங் கரடிவலை யுள்ளதெல்லாம் 90

பிசகாமல் தானெடுத்து பேருலகோர் தான்புகழ
கெசமுகா சூரனைப்போல் கெச்சிதமா யெல்லோரும் 91

தயிரியமாய் ஆபரணந் தரித்து அமுதருந்தி
வயிரமணிக் கோட்டை வாசல்வந்து சேருமென்று 92

நீதிசெறி மந்திரிமார் நீங்காமல் தானுரைக்கச்
சேதிகண்ட நாழிகைக்குள் செயவீர ரெல்லோரும் 93

சேருவைசேர் குறிக்காரர் சேனை தளத்துடனே
தாருகா சூரனைப்போல் தார்வேந்தர் பக்கல்வந்தார் 94

## விருந்துண்டு வேட்டை உடைதரித்தல்

வந்த வுடனே மகராசன் பொன்னையவேள்
செந்தமிழ்சேர் மைந்தருடன் சீமான் அமுதருந்தி 95

மலையனூர்ச் சந்தனமும் வாசமுள்ள கத்தூரி
சிலைமதனன் பொன்னையவேள் சிங்கார மாயணிந்து 96

அபரஞ்சிப் பொறகடுக்கண் ஆணிமுத்து நற்பதக்கம்
விபரமாய் மேல்முருகு வித்தார மாய்த்தரித்து 97

செஞ்சுடர்சேர் முன்கரத்தில் சேர்ந்தபசுந் தங்கவளை
விஞ்சு புகழிடையில் விளங்குமுத்துப் பொன்னரைஞாண் 98

சிறுவிரலுக் கழகான சிங்கார மோதிரமும்
மறுமன்னர் கொண்டாட வச்சிரமுத் தாரியிட்டு 99

பாத விரற்கழகான பசும்பொன்னால் மிஞ்சியிட்டு
வேத மணிவிரலில் வீரமுத்திரி மோதிரமும் 100

புயவீமன் பொன்னையவேள் பூசணமெல் லாந்தரித்து
செயமான பொற்சரிகை சிங்காரப் பாகுகட்டி 101

ஆற்காட்டுத் தங்கநிசார் அருகுகெண்டைச் சோமனுடன்
பாற்கற வணிதமாய்ப் பசும்பொன்னா லங்கியிட்டு 102

நாகநிழல் காட்டுகின்ற நற்சரிகைச் சாலுவையும்
போகதே வேந்திரன் பொன்னையவேள் தான்தரித்து 103

ஒப்பரிய காசி உத்திரமணி வஷ்திரமும்
செப்பரிய பொற்கரத்தில் சிங்கார மாய்ப்பிடித்து 104

ஒளியெறி தோற்கவசம் உண்மைபெறக் கையிலிட்டு
களிகூர்ந்து மெய்ப்பாகக் கனகமணி மண்டபத்தில் 105

பாத்தனைப்போல் வந்திருந்து பரிவாய் மனமகிழ்ந்து
ஏத்தான தானியனை இயல்பாய் அருகழைத்து 106

ஆசார நேயன் அடைக்காயும் வெள்ளிலையும்
கூசாமல் எல்லோர்க்கும் கொடுத்துமன்னன் வீற்றிருக்க 107

வீரசின்னம் நாகசுரம் விந்தைசெறி துத்தாரி
ஆர மணிமுரசு அழகுசெறி தாரையுடன் 108

## வேட்டைக்குப் புறப்படல்

ஆரியதே சத்தின் அழகான தம்பூரும்
பூரிகை எக்காளம் புகழ்ந்துதொனி ஆர்ப்பரிக்க 109

மிக்கதனிப் பேரிகையும் வீறான மத்தளமும்
தக்கபுகழ் வாத்தியமும் தாராள மாயொலிக்க 110

தாம்பூரக் கொம்புடனே தனிவெங்க லத்திடுமம்
தாம்பூர மானகனத் தப்பட்டை தானொலிக்க 111

வெள்ளிக் கவரிகுஞ்சம் வெண்சா மரைவீச
தெள்ளிமைசேர் பொன்னையவேள் சீமான் எழுந்தருளி 112

மெச்சிக் கொலுவிருந்து விளங்கி அரசாளும்
உச்சிதஞ்சேர் கோட்டை ஒலிமுகத்து வாசல்வந்தார் 113

அஞ்சுவகை சூரியபான் அழகான ஆலவட்டம்
மஞ்சுலவு ரத்தின மணிக்குடைகள் தானிழற்ற 114

அத்திமுகன் அய்ங்கரனை அன்பாய்ப் பணிந்தேற்றி
வெத்திபெற வேணுமென்று வெண்பரிமேல் கொண்டருளி 115

பொருதுந் துரைமக்கள் பிரதானி மார்களுடன்
கருதுமதி மந்திரிமார் கருணீகர் தான்சூழ 116

சேனை படைத்தலைவர் செய்ய குறிக்காரர்
ஆனைபரி சேனைதளம் அத்தனையும் சூழ்ந்துவர 117

## நல்ல சகுனம்

*வாரி அலைதிரண்டு வந்தொலிக ளார்ப்பதுபோல்*
*காரியமாய் வார்த்தைசொல்லிக் கட்டியங்கள் சூழ்ந்துவர* 118

*எண்ணரிய சேனைதளம் ஏகமாய்ச் சூழ்ந்துவர*
*வண்ணமணி மார்பழகன் வார வழிதனிலே* 119

*கிள்ளை குயில்போத்து கெச்சிதமாய் வலம்போக*
*விள்ளுங் கரிக்குருவி விதமாய் இடம்போக* 120

*மதன உல்லாசன் மகராசன் பொன்னையவேள்*
*விதமான சகுனமென்று மிகவும் மனமகிழ்ந்து* 121

*கனம்புகழ்சேர் பொன்னையவேள் கண்ட சகுனமிப்ப*
*தனம்புகழ்சேர் ஆரூடந் தயவுடனே தான்பார்த்து* 122

*அங்கொருவன் இந்தச் சகுனமதை ஆராய்ந்து*
*திங்கள் நுதலழகன் சீமான் தனக்குரைத்தான்* 123

*வல்லமைசேர் கரிக்குருவி வண்மையிடம் வந்ததுகேள்*
*நல்லநல்ல வேட்டை நலமாய்க் கிடைக்குமென்றான்* 124

*பச்சமாய்ப் போத்துப் பரிந்துவலம் வந்ததுகேள்*
*இச்சைதரும் கன்னிமணம் இன்றுமக்குக் கூடுமென்றான்* 125

*நீங்காமல் கிள்ளைகுயில் நெருங்கிவலம் வந்ததுகேள்*
*பாங்கான தேசமெங்கும் பதிக்கரசு செல்லுமென்றான்* 126

*வழியிலுள்ள சகுனம் வகைவிபரம் தான்கூற*
*களிகூர்ந்து பொன்னையவேள் கனவரிசை கொண்டாடி* 127

## வேட்டையாடல்

*பாலை மலையருகில் பக்கமாய் வந்தணுகி*
*வாலை சவுந்தரியன் மகராசன் பொன்னையவேள்* 128

*வடதிசையி லுள்ள வாண்கரடி வட்டமெல்லாம்*
*அடவாகச் சங்கரிக்க அட்டமலை கட்டுமென்றார்* 129

*ஆரமுடன் நெறிவந்த அன்புபரி விட்டிறங்கி*
*வீரங் குறையாமல் வெற்றிபெற வேணுமென்று* 130

*கொல்லி மலையதிரக் கொம்புத் தொனியொலிக்க*
*மல்லியமா துருக்க மலைவரைக்குங் கோடுகட்டி* 131

குழல்காரர் எல்லோருங் கூடி யொருமுகமாய்
முழக்கி மலைதோறும் முள்ளிமரன் புதையலுங்க 132

அட்ட மலைதோறும் ஆள்பரந்து காடுகட்டி
தொட்டமலைக் கோம்பையெல்லாம் தூள்பறக்கச் சுட்டுழக்கி

கோடிக்கிக் கோடி கூடிவருஞ் சூகரத்தை
வேடிக்கை பார்ப்பமென்று வெகுண்டு குழல்காரர் 134

தாம்புக்கு நாலு தப்பாமல் தான்பிணைச்சு
வேம்புசெறி கோட்டைவிட்டு விலக்கி யொருமுகமாய் 135

எண்ணிஎண்ணித் தான்பார்த்து எத்தனையோ வென்றுசொல்லி
புண்ணியவான் பொன்னையவேள் பூபதிக்குத் தானுரைத்தார்

வடித்த தமிழ்நேயன் மகராசன் பொன்னையவேள்
வெடிக்குநா லாயிரமாய் விளம்பி யுரைக்கலுற்றான் 137

பள்ளங்கள் தோறும் பரந்துவரும் சிங்கமெல்லாம்
மெள்ளமெள்ளப் போய்நெருங்கி விதமாய்ப் பிடிப்பவரும் 138

கள்ளிக்குள் போய்மறைந்த கடமானைத் தான்பிடித்துப்
புள்ளிமான் தன்னுடனே பிணையலிட்டுக் கொள்வாரும் 139

பொருப்பிலுள்ள ஆனையெல்லாம் பிறகே துடர்ந்தோடி
தரிப்பாகச் சண்டைசெய்து தான்புகட்டிக் கொள்வாரும் 140

காண்டா மிருகமெல்லாம் கலங்கி மனம்பதற
தூண்டாக் குருதிவிழத் துடந்துதுடந் தெய்வாரும் 141

கொட்டியத்து ராணுவங்கள் கூட்டத்துக் குள்நெருங்கி
முட்டிவரும் முயல்களெல்லாம் முடிக்கி யடிப்பாரும் 142

கம்பனூர் மலையிலுள்ள கவரிமா னைப்பிடித்து
அம்புபன்றி வேல்காரர் ஆர்ப்பரித்து வால்துணிக்க 143

தனவிசையன் பூவுலகில் தார்வேந்தன் பொன்னையவேள்
மனவிமுத்துக் குட்டியம்மாள் வாரிக் குழல்முடிக்க 144

வன்கவரி மானை வளையமிட்டுத் தான்பிடித்து
பொன்கவரி மானுடனே பிணையலிட்டுக் கொள்வாரும் 145

சிறந்துவரும் வல்லையத்தில் சிங்கார மாயணியப்
பறந்துவருங் கரடிமயிர் பண்பாய்ப் பறிப்பாரும் 146

இப்படிக்கு மலைதோறு மியல்பாக வேட்டையிட்டு
செப்பமுட னெல்லோருஞ் சேர்ந்து வருங்குழுவில் 147

பதிங்கி யிருந்ததொரு பதினா றடிவேங்கை
குதிங்கால் நிகமலுங்கக் கொக்கரித்துச் சத்தமிட்டு 148

வானம் பரந்து வருவதுபோல் சேனைதளம்
கானத்தில் பரந்துவருங் காலாளுக் கெட்டாமல் 149

கந்தப்பன் தந்தை கரியமா லெழுந்தருளும்
அந்தமுள்ள செங்கருடன் அடிவந்த தால்பயந்து 150

ஓடுகின்ற பாம்பதுபோல் ஒருவருக்குஞ் சிக்காமல்
காடுஞ் செடிமலையுங் கடந்தோடும் வெண்புலியை 151

கண்டு மனமகிழ்ந்து காமன்முத்துப் பொன்னையவேள்
வண்டுலவும் பூஞ்சோலை மாமரத்தின் கொம்பதனில் 152

விலகாமல் வரமுதவும் மிக்கதங்க மார்பகத்தை
உலகாளும் பொன்னையவேள் உச்சரித்துப் போற்றிசெய்து

மந்திரமாம் வெண்ணீறு வாங்கி நுதலிலிட்டு
சந்திரா யுதமெடுத்துச் சங்கரித்தான் வெண்புலியை 154

மன்னவர் குடோரி மகராசன் பொன்னையவேள்
பன்னரிய புலிநிகங்கள் பண்பாய்த் துணித்தெடுத்து 155

**அழகியபூங்கா**

வேட்டைசெயும் ராசமன்னன் மீண்டு வருமளவில்
கோட்டைசெறி பூங்காவைக் கொற்றவனும் காணலுற்றான்

தெட்சண தேசன் செகராசன் பொன்னையவேள்
பட்சமுடன் பூங்காவில் பன்னீர் மரத்தடியில் 157

இருந்து கையாறி எங்கள்துரை பொன்னையவேள்
பொருந்தி மனமகிழ்ந்து புண்ணியவா னேதுரைப்பார் 158

கரியமால் வேணுமென்று கற்பித்த பூங்காவோ
பிரியமாய்ப் பரமசிவன் பிறப்பித்த பூங்காவோ 159

என்றுசொல்லிப் பூங்காவி லேகாந்த மாயிருக்க
குன்றுசெறி பூவுலகில் கூவும் குயில்போலே 160

**பெண்ணரசி வருதல்**

அத்தார் தனிலிருந்து அன்னநடைப் பெண்ணரசி
மத்தார் மலையருகே மல்லிகைப்பூங் காவனத்தில் 161

பூவெடுக்க வேணுமென்று புரிகுழலாள் தாதியுடன்
கூவுங் குயில்மொழியாள் கோதை அழகுரத்தினம் 162
தோன்றுந் திருநுதலில் துலங்கமுத்துச் சுட்டியிட்டு
ஆன்ற மணிக்கழுத்தில் அழகுமுத்து மாலையிட 163
இலங்கிவரும் பூவுலகில் இந்திரமணிச் சிந்தாக்குந்
துலங்கிவரும் பொற்கடகந் தோள்வந்தி தானணிந்து 164
சூடகமுந் தங்கவளை சுடரான நற்பவளம்
பாடகமுந் தண்டையுடன் பண்புசெறி பொற்கொலுசும் 165
முத்து மணிச்சிலம்பு முழுவயிரப் பீலியுடன்
சத்துமணிக் காறை சரிசரியாய்க் கைக்கணிந்து 166
பாத சரம்பீலி பண்பான மெட்டிகையும்
காதலுடன் கூந்தலுக்குக் கனகரத்தினக் குப்பியிட்டு 167
சேர்க்கையுடன் குழைக்கழகாய்ச் சிங்காரக் கொப்பணிந்து
ஏற்கையுடன் பூஷணங்கள் ஏதேதுண் டானதெல்லாம் 168
பூட்டி யுடமையெல்லாம் பொற்கொடியாள் தனக்கேற்க
தாட்டிமைசேர் வேல்விழிக்குத் தயவாக மையுமிட்டு 169
மன்னுபுகழ் ரம்பை மருங்கிலொட்டி யாணமிட்டு
மின்னுதல மாதுரத்தின மெய்ப்பாய் மனமகிழ்ந்து 170
நித்திலஞ்சேர் நுதலில் நீலமணிப் பொட்டணிந்து
சித்திரம்போ லேவிளங்கும் சிங்காரத் தாதியர்கள் 171
கன்னிதிரு மாலைமுத்து காமமுத்து மோகமுத்து
பொன்னிஅப ரஞ்சிமுத்துப் பூஞ்சோலை ஆணிமுத்து 172
வீரமுத்து வேதமுத்து வெத்திமுத்து நாகமுத்து
ஆரமுத்து சாதிமுத்து அன்னமுத்து சோதிமுத்து 173
தயவாய் மனமகிழ்ந்து தாதியர்கள் சூழ்ந்துவர
நயமான பூவெடுக்க நடந்தா ளொருமுகமாய் 174
பச்சைக் கிளிமொழியாள் பாங்கிமார் தன்னுடனே
இச்சையுடன் பூவெடுக்க இலங்கிவரும் அவ்வளவில் 175
தாதியரைத் தான்பார்த்துத் தயவுபரி பூரணமாய்
சாதினையா யிடக்கண் சற்றே துடிக்குதென்றாள் 176
இடக்கண் துடிக்குதென்று ஏந்திழையாள் தானுரைக்க
மடக்கொடியே யின்றுமக்கு மாலைமணங் கூடுமென்றாள் 177

கூடவருந் தாதியர்கள் கூறும் மொழிகேட்டு
தேடரிய எழுமாத்தூர்ச் சிறந்தமலர்ப் பூங்காவில் 178

வந்து வளைந்து வண்டினங்கள் போல்பறந்து
முந்துமலர்ச் செண்பகமும் முல்லை மருக்கொழுந்தும் 179

கொய்யு மிருவாச்சிக் கோதரிய மல்லிகையும்
கய்தைமலர் செங்கழுநீர் கனமான பாதிரையும் 180

தேடி மலரெடுக்கத் தேன்மொழியாள் தாதியர்கள்
ஓடினார் பூங்காவில் உள்ளமலர்ப் பூவெடுக்க 181

பரந்துபோய்த் தாதியர்கள் பண்பாய் மலரெடுக்க
புரந்தரஞ்சேர் பூங்காவில் பூவை யொருத்தியுமாய் 182

சேர்ந்துவருந் தாதியரைத் தேன்மொழியாள் காணாமல்
பாந்தமுள்ள பெண்ணரசு பன்னீர் மரத்தடியில் 183

## பெண்ணரசி-பொன்னையன் சந்திப்பு

தனிச்சிருக்கும் வேளைதனில் தார்வேந்தன் பொன்னையவேள்
கனிச்சுவை யின்பமுள்ள கன்னியரைக் காணலுற்றார் 184

தத்தைமொழி மாதுரத்தினத் தன்வடிவைத் தான்பார்த்து
மெத்தமெத்த மையல்கொண்டு விந்தையுட னேதுரைப்பான்

பூரணஞ்சே ரம்புலிக்குப் புகழ்கறுப்புத் தானுமுண்டு
ஆரணங்கே யுந்தனிட அழகுதனக் கென்சொலுவேன் 186

செஞ்சடையுங் கண்சுழியாய் செப்பலாம் பார்வதிக்குக்
குஞ்சரியே யுந்தனிட கூந்தலுக்கு என்சொலுவேன் 187

உரிய கலைவாணி யுடம்பெங்கும் வெண்மையெனும்
அரியதிரு மாதேயுன் அழகுவள மென்சொலுவேன் 188

மேகவா கனன்தேவி விளங்கிவரும் இந்திராணி
நாகரிகம் போதாமல் நாடினான் கலியதனை 189

உன்மொழியும் வடிவைப்போல் உலகத்தில் கண்டதில்லை
நன்மொழிசேர் பொன்னையவேள் நகர்பதியைக் கூறுமென்று

கிளிமொழியாள் அழகுரத்தினம் கிட்ட வருவதற்குக்
களிகூர்ந்து பொன்னையவேள் கன்னியரைத் தான்பார்த்து 191

உன்னூரும் உன்பேரும் உகந்தெனக்கு நீயுரைத்தால்
முன்னூறு பொன்பெற்ற முத்துமாலை நான்தருவேன் 192

வித்தார மாமயிலே வேணுமென் றெனைச்சேர்ந்தால்
முத்தா பரணமெல்லாம் முலைமார்பில் சூட்டேனோ 193

பேசியின் பந்தந்து பிரியாம லெனைக்கலந்தால்
வீசி நடந்துவர வேணுமென்ற ஆபரணம் 194

பத்துலட்சம் பொன்னுடமை பரிவாய் மனமகிழ்ந்து
வித்தகியே யுந்தனுக்கு விதவிதமாய்ச் சூட்டேனோ 195

சக்கிர கிரிவயலைச் சம்மதிச்சு நீகுடுத்தால்
விக்கிரமா தித்தனைப்போல் விளைவேற்றிக் கொள்ளேனோ

செம்முருக்கம் பூவயலைச் சிங்கார மாய்க்குடுத்தால்
... ... ... ... 197

மணிக்கரைநீ றோடிவயல் மகிழ்ந்தெனக்கு நீகுடுத்தால்
பணிக்காய்ப் பரம்படித்துப் பயிரேத்திக் கொள்ளேனோ 198

தாசனூர் மேல்வயலைத் தயவாக நீகுடுத்தால்
வாசவன்போல் எந்நாளும் வயலுழுது கொள்ளேனோ 199

கமுகடியின் மேல்வயலைக் கைவசமாய் நீகொடுத்தால்
குமுதமலை யாளமஞ்சள் கொண்டுபயிர் செய்யேனோ 200

தையலுக்கு நாயகமே தாராவே தேன்மொழியே
மையல்மனம் கொள்வதற்கு மகிழ்ந்துரைத்தா லாகாதோ 201

பானுவரக் கண்டலரும் பங்கயம்போல் நீயுமிப்ப
நானுவரக் கண்டலரும் நாரியர் சிரோமணியே 202

மலையரசன் புதல்வன் மைந்தன்வடி வேல்முருகன்
கலைமாதைத் தோள்சேர்ந்த கதையைநீ கேட்கிலையோ 203

அம்மா னடிபணியும் அரியரிஷி தேவியுடன்
கம்மாளன் தோள்சேர்ந்த கதையைநீ கேட்கிலையோ 204

ஓதரிய பூவுலகி லுள்ள மடவார்கள்
போதப் புருஷருடன் புணர்ச்சிசெய்ய வேமனதாய் 205

இருக்கிறேன் அல்லாமல் இதில்பிசகு தானுமுண்டோ
திருக்குங் கொடுமுறுக்குஞ் செய்வதென்ன மாதரசே 206

கானகத்தில் கரடிபுலிக் கனவேட்டை வந்தவரை
மானைப் பிரிச்சுவிட்டு மயில்வேட்டை யாடவிட்டால் 207

தட்டிச் செலாக்குவிட்டுத் தாங்கி எடுத்தணைச்சு
மெட்டிமெட்டி வில்லிறுக்கி வேட்டைகட்டிக் கொள்ளேனோ

ஆனை அரசுசொல்லி அன்பாய்ச் சகடேற்றிக்
சேனைதள முள்ளதெல்லாம் செயிச்சுக் கெலியேனோ 209

முன்னைவரும் குங்குமக்காய் முச்சூடும் போகவிட்டு
பின்னைவரும் பச்சையெல்லாம் பிறகே தளுங்கவிட்டு 210

முடுகி வருஞ்சிகப்பை மோதி மனையில்விட்டுத்
தொடுகுறிசேர் கறுப்பைத் தூள்பரக்க வெட்டிவெட்டி 211

ஈரா றொருபகடை இயல்பான பன்னிரெண்டும்
மாறாமல் போட்டெடுத்து மனையில்விளை யாடேனோ 212

மூக்குத்தி முத்தலுங்க முத்தமிட்டுக் கொண்டிருக்கி
தாக்குரியக் கோவையிதழ் தானருந்திக் கொள்ளேனோ 213

செண்டுமுலை மார்பில்நிகம் சிங்கார மாய்ப்பதிய
வண்டொலிசேர் மாமயிலே மருவிவிளை யாடேனோ 214

கொம்புசெறி பூங்காவில் குயிலினங்கள் காணாமல்
கும்பமுலை மாதரசே கூடியெனைச் சேருமென்றே 215

செங்கை வளையலுங்கச் சிறுவிரலைப் பிடிச்சிறுக்கி
மங்கை மனமகிழ்ந்து மருவிவிளை யாடலுற்றான் 216

**கூடல்**

மாமோகன் பொன்னையவேள் மதனலீ லைக்கரசன்
தாமோ தரன்போல தையல் தனக்கேற்ற 217

சாந்து நறுங்களபச் சந்தனமுந் தானணிந்து
ஏந்துதன மாமயிலாட் கேற்கையுள்ள பூமுடித்து 218

வாவிசூழ் பூங்காவில் மலர்தூவி மெத்தையிட்டு
தாவிப் பிடித்தணைத்துத் தய்யல்தனை முத்தமிட்டு 219

எண்பத்து நான்குலட்சம் எழுதரிய ரூபமெல்லாம்
கண்படவே கணைதாக்குங் காமன்ரதி போலிருந்து 220

குரும்பை முலைநெருடிக் கோவை யிதழருந்திப்
பெரும்புகழ்சேர் கலைநெகிழ்த்திப் பிரதாப லீலையுடன் 221

இருநான்கு புட்குரலும் இதமாகத் தான்புரிந்து
ஒருநான்கு மீரைந்தும் உண்மைதரும் ஆலிங்கனம் 222

தப்பாமல் இந்தவிதந் தான்புரியத் தையல்நல்லாள்
ஒப்பாய் மனமகிழ்ந்து உல்லாச மாய்ப்புணர 223

உன்னீரு போகம்விடா யுற்பனவி லாசமதில்
பொன்னிநதி போல்பெருகிப் பின்னையொரு போகம்விட்டு

செய்யு மறுபோகம் சிங்கார மாய்ப்பெருகி
வய்யகத்தோர் கொண்டாடும் மகராசன் பொன்னையவேள்

## தலைவன் பிரிதல்

தெப்பக் குளத்தில்வந்து சீமான் முகங்கழுவி
வெப்புதவும் பூங்காவில் வீற்றிருந்த வேளைதனில் 226

கண்ட வுடனே கர்ணன்முத்துப் பொன்னையவேள்
தண்டிகைமேல் கொண்டருளித் தயவாய் மனமகிழ்த்து 227

வேந்தர்புடை சூழ்ந்துவர வெற்றிமுர சந்தொனிக்க
சாந்த குணவசனன் சாமிமுத்துப் பொன்னையனும் 228

பதினொரு நாடாளும் பனங்காடை குலநேயன்
மதிவதனீ சுரமூர்த்தி மகராசன் தன்மைந்தன் 229

பந்துசன நேயன் பாக்கியவான் பொன்னையவேள்
கந்துகள்சேர் நல்லூர்க் கடைவீதி வாசல்வந்தான் 230

சதுர்மறையோர் கவிவாணர் சந்தோஷ மாய்ப்புகழ
எதுர்கொண்டு ஆலாத்தி ஏந்திழையார் கொண்டுவந்தார் 231

ஆலாத்தி கொண்டு அரிவையர்கள் சூழ்ந்துவர
கோலா கலம்பரவும் குடைக்கரசன் பொன்னையவேள் 232

நாடுகட்டி அரசாளும் நல்லபனங் காடைகுலன்
நீடுமணி மண்டபத்தில் நேசமுடன் வந்திருந்தான் 233

கங்கா குலநேயன் கன்னியர்கள் மாமோகன்
தங்காமல் வேட்டைகொண்டு தன்பதிக்கு வந்தபின்பு 234

## பெண்ணரசி தனிமை

செறியுமலர்ப் பூங்காவில் சேர்ந்த அழகுரத்தினம்
வெறிகொண்ட மான்போலே வித்தார மாமயிலாள் 235

மனம்பதறி மாதுரத்தினம் மையல் சகியாமல்
வனம்தோறும் சென்றுசென்று மன்னவன்மே லாசைகொண்டு

தனிச்சு ஒருத்தியுமாய்த் தயங்கி மதிமயங்கி
பனிச்சொரியும் பூங்காவில் பகவானைக் கைதொழுது 237

பூஞ்சோலைக் குள்ளிருக்கும் பூவரசே மாமரமே
வாஞ்சகமாய் எனைச்சேர்ந்த மன்னவரைக் காணீரோ 238

நாவரசே புன்னை நல்ல பலாமரமே
பாவரசே எழுமாத்தூர்ப் பதிஅரசைக் காணீரோ 239

குடக்காற்றுக் கதிராத கூழைப் பலாமரமே
வடகரைநா டாளுகின்ற மன்னன்வரக் காணீரோ 240

எல்லாருக் கெட்டாமல் இருக்கும் பலாவரசே
சொல்லாமல் போனநல்ல துரையரசைக் காணீரோ 241

நெட்டரசுக் குள்ளே நிலையாய் விளங்கிவரும்
தொட்டரசே நல்லூர்த் துரையரசைக் காணீரோ 242

பூவரசுக் குள்ளே புகழ்ந்து விளங்கிவரும்
காவரசே கொடுமணலூர்க் கண்ணரசைக் காணீரோ 243

பிறபலமா யூர்தேடிப் பின்துடர்வா மென்றாலும்
உறவாடிக் கூடுமுன்னே ஒருபொதியூர் என்றானே 244

காட்டகமாய்ப் பேசிக் கலந்துற வாடுமுன்னே
நாட்டாள வேசியர்போல் நானாசை கொண்டேனே 245

கவனமாய் வனந்தோறும் கட்டழகன் தனைத்தேடி
குவளை மரத்தடியில் கொம்பனையாள் வீற்றிருக்க 246

**தோழிமார் வருதல்**

தாண்டிப்போய்ப் பூவெடுத்த தாதிமா ரெல்லாரும்
வேண்டிப் படியளக்கும் மின்னரசி பக்கல்வந்தார் 247

கோதை யிருக்குங் குணமறிந்து தாதியர்கள்
சீதை யழகுரத்தினஞ் செய்யதிரு மேனியெங்கும் 248

பூசிக் குளிச்சமஞ்சள் பொட்டழிந்து மையழிந்து
மாசிப் பிறையழகி மங்கைநல்லாள் தன்னாகம் 249

கைக்குளகப் பட்டதுபோல் கசங்கி இதழ்வெளுத்து
முக்கியமாய்ப் புணர்ச்சிசெய்து மோகம் வடிந்தாப்போல் 250

இருக்குங் குறிப்பறிந்து ஏந்திழையாள் தாதியர்கள்
கருக்கண்டு பின்னுங் கன்னியரைத் தான்பார்த்து 251

தாயகமாய்க் குடியிருக்குந் தையல் பதிக்கேக
மாயமயல் கொண்ட மங்கையரைத் தானழைத்து. 252

## இல்லம் ஏகல்

*பெத்தெடுத்த அன்னை பெருங்கருணை தன்னிடத்தில்*
*வித்தகிதன் தாதியர்கள் வீட்டுக் கழைத்துவந்தார்* 253

*வீட்டுக்கு வந்தநல்ல மெல்லியரைத் தான்பார்த்து*
*நாட்டும் பெருங்கருணை நன்மொழியா ளேதுரைப்பாள்* 254

## தாயின் கூற்று

*நானீன்ற செங்கரும்பே நற்கிளியே பொற்குயிலே*
*கானீன்ற தந்தையுனைக் கண்டாசை கொண்டாரோ* 255

*மெல்லியலங் காரியுந்தன் மேனியெங்கும் விதவிதமாய்*
*அல்லி லகப்பட்ட அரிவையர்போல் ஆனதென்ன* 256

*கிண்ணமுலை மார்பில் கிள்ளும் நகக்குறியும்*
*வண்ணமுகம் வேறுபட்டு வாடி யிருப்பதென்ன* 257

*எனக்கறியச் சொல்லுமென்று ஏந்திழையாள் தன்மகளை*
*மனக்கவலை கொண்டுமே மங்கையரைத் தான்கேட்டாள்* 258

*கேட்ட வுடனே கிளிமொழியாள் அழகுரத்தினம்*
*நாட்டமுள்ள பூங்காவில் நான்செய்த குற்றமெல்லாம்* 259

*துணையாக வந்தநம் தோழியரைக் கேளுமென்று*
*இணைமுலையாள் அழகுரத்தினம் ஏது மறியாள்போல்* 260

*ஆசார நேயன் அணைந்தசுகம் போதாமல்*
*பாசாங்கு கொண்டு பசப்பி அழுகலுற்றாள்* 261

*அழுத விதமறிஞ்சு அன்னை பெருங்கருணை*
*முழுதுமயல் கொள்வளென்று முத்துநீர் வான்துடைத்து* 262

*கடினமாய்ப் பெருங்கருணை கனகோப முண்டாகி*
*வடிவான தாதியரை வாருமென்று தானழைத்து* 263

## தோழியரிடம் வினாவும் விடையும்

*பூச்சொரியும் பூங்காவில் பொற்கொடிமே லாசைகொண்டு*
*ஆச்சரிய மாய்க்கூடி அணைந்தவகை சொல்லுமென்று* 264

*தக்கமிட்டுப் பெருங்கருணை தாதியரைத் தான்கேட்க*
*பக்கமா யங்கொருவர் பகல்வேட்டை யாடவந்தார்* 265

சோலைசெறி பூங்காவில் சுனைநீர் தனையருந்த
வாலை அதிமோகன் வந்த்வழி போகலுற்றார் 266

இதுவிபர மாய்ப்பின்னை ஏதுமறி யோமென்று
பதுமைபோல் தாதியர்கள் பண்பா யுரைக்கலுற்றார் 267

பகல்வேட்டை யாடவந்த பார்முடி மன்னவனென்
மகள்வடிவைக் கண்டு மருவாமல் போவதுண்டோ 268

உண்மையா யிருக்குமென்று உத்தமியாள் பெருங்கருணை
வண்மையுடன் தன்மகளை வாரி யெடுத்தணைத்து 269

**தாயின் மகிழ்ச்சி**

முத்தமிட்டுக் கொண்டு முகத்தோ டுறவுசெய்து
இத்தலத்துக் குள்ளேநான் ஏதுதவஞ் செய்தேனோ 270

காமிமுத்து மாலைமின்னாள் கட்டழகி செய்ததவம்
பூமிதனை மாமியென்று புகலவரம் பெற்றாளே 271

பொன்னனைய பூங்காவில் பொற்கொடியைச் சேர்ந்தமன்னன்
நன்னயமாய்ப் பின்னொருக்கால் நாடாமல் போவானோ 272

என்று பெருங்கருணை இயல்பாய் மகிழ்ந்திருக்க
ஒன்றுக்கு மஞ்சாத உத்தமனார் பொற்சிவிகை 273

நீதியுடன் வாசல்வர நேரிழையாள் பெருங்கருணை
பாதிப் பிறையணியும் பரமசிவன் கிருபையென்ன 274

பூரியமாய்ப் பெருங்கருணை புதல்வி தனைப்பார்த்து
ஆரியமா லைமுத்துன் னரசுபதி பக்கலுக்கு 275

போய்ச்சேர்ந்து நீயும் பிரபலமாய் வாழ்வுபெற்று
வாய்ப்பான புத்திரனை வண்மையுடன் பெற்றெடுப்பாய் 276

உந்தன்மனைக் கேகுமென்று உண்மையுட னமுதளித்து
சொந்தமுள்ள ஆபரணம் தோகையர்க்குந் தானணிந்து 277

விடைகொடுத்துத் தன்மகளை வித்தார மாயனுப்ப
அடைவான தண்டிகைமேல் அன்பாகத் தானிருந்து 278

காவேரி தாட்டிக் காரிழையாள் அழகுரத்தினம்
தேவேந்திரன் போலிருக்கும் செகராசன் பொன்னையவேள்

பூணிக்கை யானபொன் அரமணையில் வந்திருந்து
மாணிக்கம் போல்கூடி மகிழ்ந்திருக்கும் பூமகள்போல் 280

**வாழ்த்து**

அத்தி முகன்வாழி அரனுமையாள் தான்வாழி
சித்திரமயில் வாகனனுஞ் செங்கண்மால் தான்வாழி 281

நான்முகனுங் கலைவாணி நயமான தேவர்களும்
தேனனைய முனிவர்களும் தேவேந் திரன்வாழி 282

விசுவேசர் தன்னுடனே விசாலாட்சி உமைவாழி
பசுபதிசேர் நல்லூர் பனங்காடை குலம்வாழி 283

கனயோகன் பொன்னையவேள் காசினியில் மிகவாழி
மனைவி புதல்வருடன் மற்றுமுள்ள பேர்வாழி 284

குடிகவுண் டர்கணக்கர் கொற்றவர்கள் தான்வாழி
படிமீதில் கேட்டவர்கள் படித்தோர் மிகவாழி! 285

—✶—

# கொடுமணல் கோயில்கள்

# கொடுமணல் கோயில்கள்

கொடுமணல் கிராமத்தில் அக்கினீசுவரன், வீரநாராயணப் பெருமாள், தங்கம்மன், அத்தனூரம்மன், முத்தாலையம்மன், மதுரகாளியம்மன், செல்லாண்டியம்மன், தம்பிராட்டியம்மன், விநாயகன் ஆகியோர் கோயில்கள் இருக்கின்றன. அக்கோயில் களைப் பற்றிய பாடல்கள் இங்கே தொகுத்துத் தரப் பெற்றிருக் கின்றன.

**அக்கினீசுவரன்**

வாலை யம்புவி யிறைவி தும்பையும்
வன்னி சூடிய தேவனே
மாலு மயனறி யாத காரண
வத்து வாகிய தேவனே
சோலை சூழ்திருக் காஞ்சி மாநதி
துலங்க வந்தருள் தேவனே
சூல மான்மழு கால கண்டதிரி
நேத்திர மாகிய மூர்த்தியே
வேலை விடமமு தாக வுண்டருள்
விமல னேகயி லாசனே
வீர சோழபுர நாடு வாழ்வுபெற
விழவு செய்யுவித் தாரனே
ஆல யஞ்செறி கொடும ணல்பதி
அதனில் மேவிய கருத்தனே
ஆதி யுமையிடப் பாக மாகிய
அக்கி னீசுர தேவனே!

**வீரநாராயணப் பெருமாள்**

இரணியனை இருபிளவு செய்தவா சரணம்
இலங்கைதனில் ராவணனை வதைத்தவா சரணம்
தரணிதனை யோரடியில் அளந்தவா சரணம்
தன்மருக்குத் தூதுசென்ற தாணுவே சரணம்

முராரியரி முகுந்தனே மூர்த்தியே சரணம்
மூலமென்ற ஆனைக்கி முன்னின்றாய் சரணம்
விரவுபுகழ் கொடுமணலில் விரகனே சரணம்
வீரநா ராயணன்தன் பாதமே சரணம்!

**தங்கமாரம்மன்**

காஞ்சி மாநதி தன்னி லேவளர்
கன்னி மாமயில் அன்னமே
கருத லாடரும் இனிய வேடருங்
பணிப தாம்புய பூரணி

வாஞ்சை யாகவே மலர்ப்ப தந்தனை
மனதில் வைத்திடும் அன்னையே
வளமை யாகவே பவுசு பாக்கியம்
அருளு காரணி வல்லியே

பூஞ்சோ லைநீள் வாவி தாமரை
பொய்கை நீருநீ ராடியே
புண்ணிய ரூபி புரந்தரி சத்தி
பூர ணிகவு மாரியே

ஆய்ந்த தமிழறு பத்து நாலுகலைக்
கான வள்நீ ரூபியே
ஆதி கொடுமணல் தன்னி லேவளர்
ஆயி த்ங்கமா ரம்மனே!

**அத்தனூரம்மன்**

அலகையொடு பூதத்தின் படைச்சிமக மாயி
ஆனைபரி சேனைமிகு நாணமது வாகி
உலகமதி லாடனுடன் நடனமிடு வீறி
உக்கிரமிகு பயிடன்முடி மேட்டுகவு மாரி
குலவுபுகழ் கொடுமணலில் வாழுமக மாயி
கும்பமுலை யம்பிகையே பார்வதிசங் கரியே
மலரிதனில் சூழுமுக் கண்ணிமக மாயி
வைத்தபொரு ளுத்தமியே அத்தனூ ருமையே!

### முத்தாலையம்மன்

திருநுதலும் மதிவதன அழகுள்ள ரூபி
சிந்தூரம் நெற்றிமிசை தீட்டியஓய் யாரி
சுரிகுழலும் சவுரியுள சூட்டியப ராரி
துடியிடை கமலக்கை தோன்றியஓய் யாரி
வருமுரசு விருத்தியா நல்வாணர் கொண்ட
மறையோர்கள் புகழ்ந்தேற்ற வரமுதவும் தேவி
திருமருவுங் கொடுமணல் நகரில்வளர் ரூபி
சித்தமிகு முத்தாலை அம்மைபார் வதியே!

### மதுரகாளியம்மன்

வீர காளி அகோர சுந்தரி
விமலி யாமளி முக்கணி
மேதி ரூப மெடுத்த சூரனை
வீற டக்கிய சூலியே
பூர வாகிணி கௌர வனைப்பொய்
சொல்ல வைத்த புரந்தரி
பொங்க மாகிய அரவ பூஷணி
பூத சேனை தளத்தியே
பார மேரு வெடுத்த ராவணன்
பதியை வென்ற சமர்த்தியே
பத்து ரூப மெடுத்து வைத்தருள்
பரம லோக துரந்தரி
மாரண மேவிய கொடும ணல்பதி
வாழ்வு செய்யுமொய் யாரியே
மால்ச தாகிரி சிங்க வாகினி
மதுர காளிமக மாயியே!

### செல்லாண்டியம்மன்

அத்தருடன் நடனமிடு பத்திரகங் காளி
அம்புவிக்குத் தாயாக வந்தருளுங் காரி
சத்துரரை மட்டடக்கி நிறத்தமாக மாயி
சதகோடி யலகைபடை சூழவரு தாயி

முத்துவட மிட்டருளும் உற்றகிரு பாலி
 மோதுபுகழ் கொடுமணலில் மேவுமனு கூலி
பத்திமிகு அடியவரை லட்சிகவு மாரி
 பத்தர்புகழ் செல்லாண்டி அம்மைநா யகியே !

**தம்பிராட்டியம்மன்**

பரமருடன் நடனமிடும் பத்திரகங் காளி
 பாருலகில் அடியவரை லட்சிகவு மாரி
கரதல கபாலியே கங்காள ரூபி
 காசினியில் முயலகனை மிதித்ததிரி சூலி
திருவளருந் தம்பிராட்டி நகர்வளரும் தேவி
 தென்காஞ்சி மாநதியில் செழிக்கும்அனு கூலி
அரவணையி லேதுயிலும் அயன்சகோ தரியே
 அம்புவியில் தம்பிராட்டி அம்மைநா யகியே !

**சரசுவதி**

பங்கயன் மனைவியென வந்தருள்பார் வதியே
 பாருலகில் அடியவர்கள் பாங்கில்உறை மாதே
வெங்கமல ரூபமென வந்தவித் தகியே
 வேண்டுமடி யார்களிட வினைதவிர்க்கும் தாயே
பொங்கமிகு பூலோகம் எங்குமொரு முகமாய்
 பொத்தகந் தனிலுறையும் பூரவா கிணியே
சங்கரன் துணைவியென வந்ததர்ப் பதியே
 சரசுபதா தேவிபதம் சாற்றிப்பணி வோமே !

**மாரியம்மன்**

கார்பரவும் குழலனைய கன்னிகவு மாரி
 காரணிசிங் காரிகலை யோதியமெய் யாளி
வார்மருவும் கும்பமுலை வல்லியபி ராமி
 வய்யகம் அளந்தமால் தனதுசகோ தரியே
சீர்பரரும் கண்ணனூர் தன்னில்வளர் தேவி
 செப்பரிய புகழ்படைத்த தேவர்தொழும் தேவி
தேர்பரவு கொடுமணலில் வாழுமக மாயி
 தேவிபொன் மாரிபதம் தினமும்பணி வோமே!

**மேற்குவிநாயகன்**

அப்பளமும் கடலைபொரி அவல்பயறு தேங்காய்
அதிரசமும் பணியாரம் அமுர்தமும்பால் தேனும்
முப்பழமும் தேன்குழலும் முறுக்குபணி யாரம்
முதிந்தவெல்லம் சர்க்கரையு முண்மையுடன் படைப்போம்
செப்பமுள்ள கல்விசெல்வம் அருள்புரிஅய்ங் கரனே
சிறப்பான கொடுமணலாம் நகர்தனிலே வாழும்
கற்பக மெனும்புண்ணிய விருச்சமதில் வாழும்
கணபதிதன் பாதமலர் கருத்தில்மற வோமே!

**செட்டி விநாயகன்**

இருசரணம் அருள்புரியும் ஈசுவரி தன்பால்
இமையோர்கள் தொழுதேற்றும் எங்கள்குரு பரனே
கருணைபுரி திருநயன மழகுமுக் கணனே
கரகடா சலமூர்த்தி விக்கினீசு பரனே
திருமுருகா பழனிமலை முருகன்முன் னோனே
தேவர்கள் வந்துறையும் காஞ்சிமா நதியில்
அருள்பரவும் கொடுமணலில் அருளும்அய்ங் கரனே
அனைவோரை லட்சிக்கும் செட்டிவிநா யகனே!

**உள்ளூர் விநாயகன்**

நதியணிந்த சம்புவன் நாரியருள் பாலா
நானிலத்தை ஓரடியால் அளந்தமால் மருகா
வேலவற்கு முன்பிறந்த வேழமுகத் தோனே
வேண்டுமடி யார்களுக்கு வினைதவிர்க்கும் பரனே
கார்மேவும் சோலைதிகழ் காஞ்சிநதி வாழும்
கருணைசெறி தம்பிராட்டி கதித்துவளர் மூர்த்தி
விதமான நாம்கரனில் விளங்கும்அய்ங் கரனே
வித்தைசெல்வம் கொடுத்தருளும் விக்கினேசு பரனே!

**கிழக்கு விநாயகன்**

தித்திக்கும் ரசதாளி தோசைபணி யாரம்
தினைமாவும் போதகமும் தேங்காய்இள நீரு
கொத்துமாங் கதலிபலாக் கோவின்பால் தயிரும்
குடல்வயிறு நிரம்பவுணும் கும்பகும் பீரா

நதியுலவும் காவேரி காஞ்சிநதி சூழ
நலமான கொடுமணல் நகர்தனிலே வாழும்
பத்திதர வந்தருளும் ஆனைமுகத் தோனே
புகழ்கொண்ட கணபதிதன் பாதமற வோமே!

**சொக்க விநாயகன்**

சீர்மேவும் கயிலைமலை நாதனருள் மைந்தா
செயமுற்ற நாரணன்தன் இயல்புற்ற மருகா
கார்மேவும் கயமுகா சூரனைவ தைத்த
கருணையுள்ள குஞ்சரமு கக்கடவு ளோனே
பார்மேவும் அடியார்கள் கடலைபொரி பயறும்
பச்சரிசி வெல்லமும் பகரணுகா வோனே
ஏர்மேவும் கொடுமணல் நகரில்வாழ் பவனே
எத்திசையில் இயல்பான இனியகண பதியே !

**பள்ளிக்கூடத்து விநாயகன்**

தெள்ளுதமிழ்க் குதவிசெயும் தேவியருள் பாலா
தேன்குழலும் அதிரசமும் சீனிபனி யாரம்
எள்ளுருண்டை தோசைவடை இனியமுக் கனியும்
இன்பமுள்ள பால்தயிரும் இனியதேங் காயும்
விள்ளுமடி யார்கள்தினம் வேண்டியே படைக்க
விதமான கொடுமணல் விளங்கவரும் தேவா
துள்ளுமயில் வாகனன் துதிக்கவோர் நொடியில்
தும்பிவடி வாகவரும் தொந்திவயிற் றோனே!

கடலைபொரி அவல்பயறு வடையும்அதி ரசமும்
கற்கண்டு சீனிதேன் கதலிபலாச் சுளையும்
குடலையுடன் மாங்கனியும் கோதில்சர்க் கரையும்
கும்பமுடன் பால்தேனும் குலையும்பணி யாரம்
திடமுடைய எள்ளுருண்டை சீனிதேன் கனியும்
தீங்கரும்பு ரசதாளி சேரஅமு தருந்தி
நடனமிடும் பள்ளிக்கூட நகர்தனிலே வாழும்
நாதனே அரனுதவும் செல்வகண பதியே!

**சுப்பிரமணியர்**

சீர்பெருகும் திருச்செந்தூர் வேலவா சரணம்
திருவாவி நன்குடி முருகனே சரணம்

பார்பெருகும் அலகுமலைக் குமரனே சரணம்
பண்பான சிவன்மலையில் பண்டிதா சரணம்
கார்படியும் சிகரகிரி கந்தனே சரணம்
கதித்தமலை மேவிவளர் காங்கேயா சரணம்
தார்அணிபொன் ஊதிமலை சண்முகா சரணம்
சங்கரன் அருள்புத்ர தயாபரா சரணம்!

**அனுமந்த ராயன்**

நெஞ்சமதில் அனுதினம் உன்னுடைய பாதமலர்
நீங்கா திருக்கவேணும்
நினைத்தபடி முடியவே அடியார்க்கு அனுதினமும்
நினதருள் செய்யவேணும்
வஞ்சனைகள் ஆனது ஓடியேவல் சூனியம்
வைப்பு கடப்புநோயும்
வலியதொரு பூதங்கள் பிசாசுராட் சதைகளும்
வாரா திருக்கவேணும்
தஞ்சமுட னேஉனைத் தொழுகின்ற பேருக்குச்
சகலபிணி அணுகாமலே
சம்பத் துடன்கல்வி மேன்மேலும் அருளியே
தற்காத்து ரட்சி அய்யா
அஞ்சனா தேவியருள் சஞ்சீவி ராயனே
அபிஷேக மாடியருளே
அடியவர்க் கருளுதவு அனுமந்த ராயனே
அபிஷேக மாடியருளே!

**நாட்டுராயன்**

கூட்டமிடும் சதுரங்க சேனைகளும் வாழ்க
கோட்டசுரர் அடியர்பணி வெட்டும்ப டைசூழ்
வேட்டைவரு ரணசூரர் விருதுகருப் பணனும்
வேண்டிவெகு புகழுடைய வெற்றிமுனி தானும்
நீட்டுபுகழ் வள்ளிநகர் மாந்தைபுர மதனில்
நிழல்பரவு உசிலவன நீதமுடன் ஆளும்
நாட்டிலுயர் காங்கயநன் னாட்டிலுயர் நீயே
நாட்டுராயன் பாதத்தை நாவில்மற வோமே!

**தங்கம்மன் பந்தடி**

தந்திரமாய் பிரமஹத்தி துலைத்த வீர
சோழபுர நாடுதனில் தழைத்து வாழும்
அந்தமுடன் கொடுமணலூர் தன்னில் மேவும்
அழகுடைய தங்கமா ரம்மன் பேரில்
பந்தடியோர் பத்தையுமே அடியேன் சொன்ன
பைந்தமிழைப் பெரியோர்கள் பரிவு கூர
கந்தனுக்கு முன்பிறந்த கரிமு கத்துக்
கணபதிதாள் எந்நாளும் கருத்தில் சேர்ப்பாம்!

தினதி னானத் தினதி னானத்
தினதி னானத் தினதின

அன்னம் மயில்கள் செங்கால் நாரை
அதிக பேடுந் தாராவும்
ஆலிக் குந்திருக் காஞ்சி நதியில்
அழகாய்த் தீர்த்தம் ஆடியே
வன்னக் கலைகள் கொய்தே உடுத்தி
வாகாய்க் குழல்கள் திருத்தியே
வரிசை யுடனே முல்லை மல்லிகை
வளமை யுடைய செண்பகம்
கன்னி மார்கள் குழலைச் சூடிக்
கடைக்கண் விழிக்கிமை எழுதியே
களப குங்குமம் கஸ்தூரி பன்னீர்
கதம்பம் புனுகு அணிந்துதான்
இன்னி லந்தனில் கொடுமண லூரில்
இலங்கும் தங்க மாரம்மன்
ஏழு லோகந் தழைத்து வாழ
எடுத்தொரு பந்து அடிப்பளே!

அருமை யாகிய நுதலில் திலகம்
அணிந்து பொட்டொளி மின்னவே
அளக பாரந் தன்னில் மல்லிகை
முல்லைச் சரங்கள் இலங்கவே

திருவெ னும்செந் தாம ரைப்பூ
சிறந்த முகத்தில் வேர்வை
சிந்த வேகுழைக் காதில் அணிந்த
செம்பொன் பணிதி துலங்கவே

இருமை யாகிய பாதச் சிலம்பு
இசைகள் புலம்பிக் கொஞ்சவே
இடையில் ரத்தினக் கலைகள் துலங்கிட
இலங்கிப் பணிதிகள் ஆடவே

தருமம் வளரும் கொடுமண லூரில்
வாழுந் தங்க மாரம்மன்
சரிகை வளைகள் குலுங்கவே கையில்
தயவாய் ரண்டுபந் தடிப்பளே!

செய்ய புகழும் கீர்த்தி விளங்கும்
திருவும் விளங்கு மேன்மையான்
செகத்தில் பாண்டி யகுல கோத்திரன்
செந்தமி ழுக்குப காரனாம்

துய்யந் தன்னீ சுவர மூர்த்தி
துரைசி காமணி அருளினால்
தோன்றும் சின்னய ராசாதி ராசன்
தொழுது பணிபா தத்தினாள்

தய்யல் மடவார் தோழி மார்கள்
தங்கக் கவரி வீசவே
சங்கீ தத்துடன் வாணர் புகழ்ந்து
தனிமை ராகம் பாடவே

வய்யந் தன்னில் கொடுமண லூரில்
வாழுந் தங்க மாரம்மன்
வரிசைக் கன்னியர் உடனே நின்று
வகையாய் மூன்றுபந் தடிப்பளே !

செங்குவ ளைசேர் மாலை மார்பன்
செய்ய பாண்டிய குலத்தினன்
தீரன் ஈசுர மூர்த்தி பூபன்
செல்வன் சின்னய ராசனும்

பொங்க முடனே பணிந்து போற்றப்
புகழும் செல்வம் அருளியே
பூலோ கந்தனில் அதிக வாழ்வு
பொருந்த அருள்செய் பூரணி

திங்களும்மும் மாரி பொழியத்
தேசம் எங்கும் தழைக்கவே
சிறந்த தாம்திருக் காஞ்சி நதியில்
வளரும் செல்வத் துரைமகள்

தங்கம் விளங்கும் கொடுமண லூரில்
வாழுந் தங்க மாரம்மன்
சகல பேரும் தழைத்து வாழ
தயவாய் நாலுபந் தடிப்பளே !

# நாட்டுப் பாடல்கள்

# நாட்டுப் பாடல்கள்

கொடுமணல் கிராமம் அமைந்துள்ளது கொங்கு நாட்டில் குறுப்புநாடு என்னும் பிரிவிலாகும். கொடுமணல் கிராமத்தின் காணியாளர்கள் கொங்கு வேளாளரில் பனங்காடை, பாண்டியன், சேரன் குலத்தினர் ஆவர்.

இங்கு குறுப்புநாடு பற்றிய பாடல்களும், பனங்காடை, பாண்டியன், சேரன்குலத்துச் சிறப்புப்பாடல்களும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாளர் சிறப்புப்பாடல்களையும், புலவர் பாடிய சில தனிப்பாடல்களையும் காணலாம்.

## குறுப்பு நாட்டுப் பாடல்

ஓங்குதமிழ் சேர்விசைய மங்கையும் கற்றைநகர்
ஓடைசெறி குன்றைநகரும்
உண்மைதிகழ் பாலதொழு கொடுமணல்நல் லூர்திங்க
ளூர்சிறு வலூர்கோசனம்
பாங்குதிகழ் ஈஞ்சநகர் திலுப்பையூர் ஊற்றலூர்
பண்பான அமுக்கயமதும்
பார்புகழ் முகுந்தைசிறுக் களிஞ்சியூர் தெக்கலூர்
பரிவான மண்ணறையுடன்
பூங்கமல வாவிசூழ் அல்லாள புரியுடன்
புகல்கின்ற வெள்ளரிவெளி
புனிதமிகும் செவியூர் அயிலூர் தாளூன்றி
பொருந்திய முடச்சியூரும்
தேங்குபுகழ் ஆதியூர் கொளப்பலூர் குருமந்தூர்
தேறல்மிகு கலிங்கயமதும்
தென்கூட லூர்செங்கப் பள்ளிவாய்ப் பாடியும்
சேர்ந்தருள் குறுப்புநாடே!

### குறுப்பு நாடு

செந்திரு விளங்கும் கதித்தமலை யருளுமலை
திட்டமலை யுள்ள நாடு
செங்ககிரி அதிசிகா மலையுடன் விசையகிரி
சீர்பெற விளங்குநாடு
விந்தைதிகழ் வட்டமா மலையுடன் வெள்ளிமலை
மிகவே விளங்குநாடு
வெண்சாரை கருநொச்சி காணாத சுனையுமே
மெய்ப்பா யிருக்குநாடு
சுந்தர மிகுந்துவளர் பஞ்சவர்கள் அய்வர்
சுடரென விளங்கு நாடு
தூண்டா மணிவிளக் கேற்றிவில் லடைக்கலந்
துலங்கியே விளங்குநாடு
கொந்துலவு காஞ்சிநதி சவுந்திரமா நதிவானி
குலாவி விளங்குநாடு
கூர்ந்தசங் கத்தையும் தாதியால் வெற்றிசெயும்
குறுப்புநன் னாடுதானே!

### குறுப்பு நாட்டுவளம்

மஞ்சளிஞ்சி கமுகுதென்னை வளமிகுந்த நாடு
வளர்சோலை மாகதலி வாத்திக்கும் நாடு
தஞ்சமென்று வந்தவரைத் தாபரிக்கும் நாடு
தரணிதனில் சுக்கிரன்வந்து பூசைசெய்த நாடு
வஞ்சிசெல்லி அத்தனூராள் மதுரகாளி நாடு
வண்மையுள்ள காஞ்சிமா நதிபெருகும் நாடு
நஞ்சணிந்த அக்கினீ சுபரன்றன் நாடு
நலமான குறுப்புவள நாடுமெங்கள் நாடே!

### பணமே போனாயே

பதினாறு மாகாணி கொண்டதொரு பணமே
பகரறிய எட்டரைக்கால் ஆனதொரு பணமே
சதுரான நாற்பத்தெட்டு ஆனதொரு பணமே
தயவுடனே நாலுகால் கூடியொரு பணமே

மதமுடனே பெரியதனம் ஆக்கிவைத்த பணமே
வையகத்தில் பாடுபட்டுத் தேடிவைத்த பணமே
கதையுடனே கம்புகொண்டு தவிடுவித்த பணமே
கையைவிட்டு அய்யய்யோ போனாயோ பணமே!

## கொங்கு வேளாளர் குலங்கள்

திங்கள்மணி மணிமேடை பூச்சக்ர வாள்குடைத்
தென்திசை யலங்கரித்துச்
சேரனவர் பாண்டியன் சோழர்திசைக் காராளர்
செய்யநதி காவேரிமுன்
கொங்கில்வரு பண்ணை ஓதாளன் பெரியகுலன்
பொருளந்தை கோவன்வேந்தன்
குழாயன்நீ லன்செங்கண் ணன்காடை விளிபுல்லன்
கூரப்பனை பூந்தைபுன்னை
மங்கைமணி சாத்தந்தை பூசகுலன் அந்துவன்
மளுவழகர் பரதர்விரதர்
மாடை குன்றலி யாடை யடகர்
வாணர்பூச் சந்தைஆந்தை
நங்குடிகள் வெண்டுவன் தளிஞ்சிசெம் பூதன்தூரை
நாரைநீ ருணிபெருங்குடி
ஆதிகீரை கண்ணந்தை வண்ணக்கர் கோட்டார்
நற்கொங்கு வளநாடரே!

பன்னுலவுஞ் செழுவரை சேடர்குல எண்ணையைப்
பனங்காடை சேரன்வில்லி
படுகுண்ணி செங்குண்ணி சேகன் செவ்வாயன்
பாண்டியன்கண வாழன்காடன்
சொன்னமய பூபனைக் கல்வியைச் செல்லனை
தோடகுல புல்லந்தையை
வெள்ளம்பன் முத்தம்பர்க் கொடியனை வாய்மை
சொல்சொளுகன் கணபரஞ்சன்
அன்னதரு தாடவன் தேவேந் திரகுலன்
ஆவுலுவன் சாத்துவாயன்
ஆனகுல மீனவன் எருமைகுல பரதனும்
அம்மயிலை பயத்தலையகோன்

கொன்னைசேர் வடிபுன்னை தளிஞ்சி கடுந்துளிர்
காரைக் குங்கிலியுடனே
கொண்டிரங் கிக்குலம் மூலகுல சேரிலான்
கொங்குவள நன்னாடரே !

**வேளாளரும் தமிழும்**

கம்பர்செந் தமிழும் இரட்டையர் மொழிந்த
கட்டளைக் கலித்துறைக் கவியும்
கனிந்ததெள் ளமிர்தம் எனப்புக ழேந்தி
களித்திடும் கலம்பகத் தமிழும்
பண்புசீ ரொட்டக் கூத்தனாம் புலவன்
பகர்ந்திடும் பைந்துளா யிரமும்
பசுந்தமிழ் தேறு வாணிகர் தாசன்
பரிவுடன் புகன்றசெங் கவியும்
செம்பியன் கவியும் வழுதிமார் கவியும்
சேரமான் செப்பிய கவியும்
தேவர்தன் சிறையை மீட்டவேள் குமரன்
தெளிவுரை இசைத்தவெண் பாவும்
சம்பந்தர் கவியும் அவ்வைதன் தமிழும்
சங்கத்தார் செப்பிய தமிழும்
தவத்தினால் மிகவும் புகழ்கொண்ட வேளாளர்
தகைமையைச் சாற்றுதற் கரிதே !

**பனங்காடை குலத்துப் பாட்டு**

வளமைதிகழ் கலியுக சகார்த்த நாலாயிரத்தி
வழங்குமுப்பத் தய்ந்துமேல்
வருகின்ற குரோதன ஆண்டுதை மாசமும்
வடிதமிழ் விளங்கவந்த
அழகுதிகழ் ஒன்பதாம் திகதியில்ரே பதிவெள்ளி
அன்புற்ற சுபதினத்தில்
ஆதிகன் எழுமாதை வளர்பனங் காடைகுலன்
அருள்முத்துக் காங்கயன்சொல்
செழுமலர்ப் புயனான பொன்கவுண் டய்யனுக்கு
செம்பொன்முடி சூட்டுநாளில்
சேவயம் பதியரசு சோழரா சேந்திரன்
சேவணையில் குமரசாமி

நளினமிகு கொங்கர்று நாட்டினில் கந்தர்புரி
நாதர்முரு கீசர்முன்பாய்
நாட்டிலுயர் காங்கயன் சிவசுப்பிர மன்னியர்க்கு
நாட்டிவைத் தருள்பட்டமே !

திருவுலவு செய்பண்ட பகிரண்ட நவகண்ட
செயமுழுது மேகுலுங்க
செம்பொன்மலை கிடுகிடென இறையோ ணைஉமை
சிக்கெனத் தான் பிடிக்க
திரள்கொண்ட இமையோர்கள் நடுநடுங் கிடர்ஆதி
சேசனெற் றியுமையுள்
அசுரர்பொடி தவிடுபட மரகதன்
சீர்கன்ன விருத்தாடியே
மருவுலவு சிங்கார நடனமிட் டாடிவரும்
மயில்வா கனச்சேவுகர்
மனமுலவு யிறுகமத புனுகுபரி மளகளபம்
திமிர்ந்தொளுகி விம்மியே
வார்கொண்டு அண்ணாந்து மேகொண் டெழுந்து
முலைவல்லிக் குஞ்சரமணாளன்
மறையோனை முனிவுகொண் டொருநாலு சிரசு
வன்கையால் குட்டுமுருகா
அருள்பரவு அம்புவி இனிதான கொடுமணல்
அத்தனூர் அம்மனிருதாள்
அகமதனில் இனிதுட னேயிர வுபகல்
அர்ச்சனைசெய் தேதுதிப்போம்
ஆதிநாள் ஒருநா வலர்க்கரவின் வாய்மணியை
அங்கியால் வாங்கி யீந்தோம்
அமரர்மன மகிழவே முளைவாரி அமுதிட்டு
அதிகபுக ழேகொண்டவன்
தருவுலவு மடவின்மிசை வருகின்ற நீலிபழி
தான் கொடுத்தவன்
குபேரன் சதுருள்ள பனங்காடை குலதிலத
கெம்பீரன் சற்குணவுதாரன்
சதயீசுர பரமூர்த்தி நற்றவம் தன்னில்வரு
மகிமை மகிந்தன்

தகவுடைய பொன்னையன் மகீபன் கிருபை
தந்துகை காக்கவென்றே!

## பனங்காடை காணியூர்கள்

திங்களூர் எழுமாதை கொடுமணல் விசயமங்கை
தென்னெல்லி பட்டிலூரு
திருமுருகன் பூண்டிகுந் தாணி கச்சிபளி
திருவானி கூடல்மாத்தூர்
கங்கைபுரி கொன்னையார் இடையாறு மானூர்க்
கதித்தநடு வச்சேரியும்
கருவலூர் பிரமியம் குறுணியும் கடுகநகர்
கந்தமா புரிகுறிச்சியும்
பொங்கமுடன் ஆத்தூரு மருதுறை கிழாங்குன்றல்
புகழ்சுந்தர பாண்டியநல்லூர்
பொருள்பஞ்ச மாதேவி யூராச்சி அனுமன்
பள்ளி முடக்குறிச்சி
செங்கையா னங்கூரு கோனூரு மாவிளந்
திருவைநகர் பனயம்பள்ளி
சீர்பெருகு வைத்தியூ ருபனங் காடைகுல
செல்வமிக்க காணியே!

## பாண்டியன் குலத்துப் பாட்டு

சீர்மருவு கங்கைபுனை அக்கினீசு பரக்கடவுள்
செகவீர நாராயணன்
செல்வியுமை யகத்தூர் ஆயிமக மாயியுமை
திருவுற்ற தங்கம்மனும்
பார்மருவு மாமதுரை காளியுடன் முத்தாலை
பட்டத் தலைச்சியுடனே
பண்புதிகழ் ராவுத்த மாருடன் பொன்மாரி
பரிவான கணபதியுடன்
ஏர்மருவு ராமரு முதலான கடவுளர்கள்
கிருபையால் இயற்ற
... ... ...
செங்கோல் நடாத்தும்

தார்மருவு குவளைமலர் புனைபாண்டிய குலத்தில்
தருமவே ளாளமன்னா
தரணிதனில் நீடூழி காலமினி தாகவே
தழைத்துமிக வாழிநன்றே !

தண்டமிழ் துதிக்கவரு மதுரைதென் நஸையனூர்
சாற்றுபுகழ் மானூருடன்
தயவுபெரு பட்டாலி கொடுமணல் வயூருடன்
தழைக்கின்ற காணாங்குளம்
மண்டலந் தனிலாத் தூர்கொங்க ணாபுரம்
வளமுற்ற பாலமேடு
வலுவான கோட்டைக் கரைபுன்னம் முகவனூர்
வாய்த்தகா வேரிபுரமும்
கொண்டலுயர் பவுத்திரம் குடையூரு இடையாறு
கூறுமிவ் வூர்களெல்லாம்
கொற்றவர் மதிக்கவுயர் கம்பருக் கடிமைமுறி
ஈந்தகுண சாந்தமுடையோர்
... ... ... ... ...
... ... ... ...
இந்திரனென வந்துலவு பாண்டியகுல வேளாளர்
இனிதாக மிகவாழியே !

சீருற்ற சிவன்மலையில் முருகர்தன் கிருபையால்
செகராசர் மெச்சுதயவும்
செல்வகன யோகமும் புத்திரசந் தானமும்
செந்தமி ழுணர்ந்தஅறிவும்
தாருற்ற குவளைமலர் மாலிகா பரணமும்
தாய்தீங்கை யுதவுவரமுஞ்
சற்சனர் விலாசமும் மேன்மையும் வீரமும்
சாற்றுதற் கொருவருளரோ
மேருற்ற பொன்மேழி விருதுடைய சோமனே
மேலான பாண்டியகுலனே
மேதினியில் வருகின்ற கொடுமணல் பட்டாலி
விளங்கிய விசுவாசனே
வாருற்ற தனமாதர் வேள்காளி ராயனருள்
மைந்தனாம் சேனாபதி

மன்னன் துணைவரு சிவமலை மகீபனே
வனசலட் சுமிவாசனே !

## சேரன் குலத்துப் பாட்டு

சீர்மேவு பைந்துளப மார்பனே சீதரா
புனிதமிகு லட்சுமி மணாளா
பொன்கருட வாகனா சங்குசக் ராயுதா
பூதலந் தன்னில் மூவர்
பார்மேவு சம்புசிவன் மைத்துனா கர்த்தனே
பாருல களந்த ராமா
பால்வண்ண னானவெங் கடேசு பரன்அடிமை
பசுரும்விண் ணப்பமதுகேள்
கார்மேவு சோலைசூழ் குறுப்புநன் னாடனே
கனமான சேர குலனே
காசினி மதிக்கவரு கொடுமணல் பதியரசு
கதித்துவளர் அக்கினீசுபரா
தார்மேவு காண்டீப னாகவரு பொன்னையன்
கனதுங்க அகளங்கனே
தேகசுக ரட்சகன் யோக முடன்வாழ்க
அருள்செய்திருப் பதிவாசனே !

கார்கொண்ட மேனிதிகழ் மாயனும் போதனும்
காணரிய அக்னீசுரர்
கரியமால் வீரநா ராயணன் முகுந்தனும்
கமலமீன் பூமங்கையும்
பார்கொண்ட தளவல்லி தங்கமார் அம்மனும்
அத்தனூர் மகமாயியும்
மதிவதன செல்லாண்டி அம்மனும்
மாமதுர காளியுமையும்
... ... ... ...
... ... ...
... ...
தேர்கொண்ட வீதிதிகழ் கொடுமணல் பதியரசு
சேரர்குல கோத்திரத்தில்
தீபமென வருகின்ற காராள மன்னவர்கள்
செழித்துமிக வாழிநன்றே !

## கொங்குநாடு

திருமருவு புகழ்கொங்கு மூவாறு கோட்டமும்
தென்கரைநா லாறு நாடும்
தென்கரைசை பூந்துறைசை யாறுதன் தலசையும்
செயகாங்கை வேங்கை தட்டை
மருவுலவு அண்டையும் திருவாவி நன்குடி
வாரக்க மானை மலையும்
மதுசொக்க நல்லூரும் பொங்கலூர் நறையனூர்
வடகரை யொடுவங் கமும்
அருள்பரவு காவடி குறுப்பைபூ வாணியும்
அன்றுபுகழ் ராசி புரமும்
அரையமண நாடு கிழங்குவாழ வந்தியும்
ஆகநா லாறு நாடு
குருவருள் முந்நூற்று எண்பது சிவாலயங்
கொங்கேழு தேவர் சபையும்
கொல்லிமலை வெள்ளிமலை தலைமலை வராககிரி
கொழித்துலவு கொங்கு நாடே!

## கொங்குத் தலங்கள்

சீருலவும் கருவூரில் வாசபசு பதிலிங்கர்
செய்யவடி வுளமங்கையும்
செம்மையா கியவெஞ்ச மாங்கூடல் விகுர்தீசர்
திருப்பண்ணார் மொழியம்மையும்
பாருளோர் புகழ்கரசை யன்பர்கொடு முடிலிங்கர்
பங்கில்வடி வுளமங்கையும்
பண்புதரு திருவானி கூடல்நண் ணாவுடையர்
பண்ணார் மொழிகெவுரியும்
மூரிவிடை யோன்முருகன் பூண்டிமுரு கீசரும்
முயங்குபூண் முலைவல்லியும்
முத்திதரு தென்காசி அவினாசி ஈசர்தவ
முயர்பெருங் கருணைமாதும்
ஆருலவு பேரையில் பட்டிஅர சம்பலவர்
அரியமர கதவல்லியும்
ஆசரித் திடுமன்பர் அகிலமிசை நீடூழி
அனுதினமும் மிகவாழ்வரே!

# வேளாளர் சிறப்புப் பாடல்கள்

**நெறி தவறாதவர்**

*நீதிநெறி அறமுறைமை தவறாத மறைபாலர்*
*நிலைநின்ற புகழை யுடையோர்*
*நீசருட னேகூடி யுண்டபேர் பழையனூர்*
*நீலியுட பழிக முவினோர்*
*மேதினியில் என்னவே புலவருக் காகவெழு*
*வீடுதனில் விலையுண்ட பெரியோர்*
*மேன்மையுடன் முன்கையில் சந்தன முரைத்துமுளை*
*வாரிஅமு திட்ட பெரியோர்*
*பாதகமெண் ணாமலே சூலியிட முதுகினில்*
*பாலன்ன மிட்ட பெரியோர்*
*பாணனிட நட்பதனைப் பிணந்தன்னைச் சுமந்துமவர்*
*பார்முழு தாண்ட பெரியோர்*
*ஆதலவர் கொண்டாடும் ஆயிரம் ஆனைக்கி*
*அய்யமு தளித்த பெரியோர்*
*அறிவுபுரை நெறிமுறைமை தவறாத மறைபாலர்*
*அவனிசூழ் வேளாளரே!* 1

**மிக்கான சமுகம்**

*அம்புவியில் மிக்கான சித்திரமே ழிக்கொடிக்கு*
*அதிபனென வந்த சமுகம்*
*அரவின்மணி தன்னையே கவிவாணர் தங்களுக்கு*
*அன்பாய்க் கொடுத்த சமுகம்*
*பண்புபெற வேயுலகில் நீலிபலி யதுதந்து*
*பார்புகழ வந்த சமுகம்*
*பரதவித நாட்டியம் புரிகின்ற பொதுமாதர்*
*பண்புரிசை யிட்ட சமுகம்*
*தம்பமென வேதியர்கள் மறையோதி அச்சதை*
*சதாதினம் விளங்கு சமுகம்*
*தானமிகு தருமமும் அன்னசொன் னங்களும்*
*தயவாய் விளங்கு சமுகம்*

கம்பர்தன் தமிழ்பெற்ற கீர்த்தியும் புகழுவே
கனிவுகூர்ந் துற்ற சமுகம்
காசினியில் மிக்கான மேலான சமுகமது
காரா ளர்தன்சமுகமே! 2

## வாசல் சிறப்பு

நாவ லர்புகழ் நவமணி வாசலே
நாத கீதம் முழங்கிடும் வாசலே
தேவ தேவர் சிறந்திடும் வாசலே
சித்திர பத்தர் விளையாடும் வாசலே
பூமி பாலகர் ஓலக்க வாசலே
பூலோக மெங்கும் ரட்சிக்கும் வாசலே
மார்பி லேறி யவினாசி நாயகர்
வாழ்வு தந்திடும் கோபுர வாசலே
சேர லார்கள் பணிந்திடும் வாசலே
செம்பொன் மேருவுக் கிணையான வாசலே
பாரில் அன்னக் கொடிகட்டும் வாசலே
கம்பர் பச்சம் தவிராத வாசலே
வீர லட்சுமி விளங்கிடும் வாசலே
விருது காள முழங்கிடும் வாசலே
கார நீர்குடை யாகர வாசலே
கங்கை பாலர் கலியாண வாசலே
நம்பி னோர்தமைக் காத்திடும் வாசலே
நாவ லர்கள் புகழ்ந்திடும் வாசலே
சொம்ப தான குடைதரும் வாசலே
துய்ய பூமிதன் பாலகர் வாசலே! 3

## வேளாளச் சாமி

வாராத காலங்கள் வந்தாலும் பார
வழக்குவரும்
தீராத கோபங்கள் பசிநோய் தரிக்கச்
சிதந்தனிலே
சேராத பேர்வந்து மேலில் விழுந்தாலும்
தீர்க்கச்சிவன்
தோராத மேழியன் வேளாளச் சாமி
துணை நமக்கே! 4

### வேளாளர் துணை

தேரோடும் வேதியர் மன்னவர் மூன்றினில் சீர்வசிகர்
கூரிடும் பின்னோர் முதலான சாதி குலங்களுக்கு
நீரிடு மேழிச் சிவனாக வந்து நிலம்உழுதும்
சோறிடு மேழியன் வேளாளச் சாதி துணைநமக்கே! 5

### சோறிடும் தெய்வம்

வீறுடன் வார்த்தை யுண்டோ
மாமேருக் கப்பால் இப்பால்
ஊறிடும் கிணறு போல
உதவிய செங்கை மேகம்
பாறிடும் கலிய கன்ற
பாணிவே ளாளர் தம்மைச்
சோறிடும் தெய்வமென்று
சொல்லுவோம் சொல்லு வோமே! 6

### கம்பன் அடிமை

முந்திய காரா ளர்சொல்
முன்னுமை நினைய தாகில்
சிந்தையில் சடையன் தன்னைத்
தீண்டிய விஷத்தைக் கண்டு
அந்தவெள் விஷத்தைத் தீர்க்க
அக்கசா லையனை நோக்கி
உந்தனுக் கடிமை யாக
உரைத்தனன் கம்பன் தானே ! 7

### மேழித் தெய்வம்

ஆழித் தேவர் அலைகடலில்
ஆடும் தேவர் அம்பலத்தில்
வாழித் தேவர் குலமக்கள்
வய்யந் தோறும் பெருக்காளர்
ஊழித் தேவர் எல்லோரும்
உலகங் காக்க வல்லாரோ
மேழித் தெய்வம் அல்லாமல்
வேறோர் தெய்வம் கூறோமே! 8

# குருப்பு நாட்டுப் பட்டயம்

## குறிப்பு

இப்பட்டயம் ஓலையில் எழுதப்பட்டுள்ளது. கொடுமணலில் வசிக்கும் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடம் உள்ளது. இதில் கந்தசாமிக் காதல், பொன்னையன் காதல் ஆகிய நூல்களின் பாட்டுடைத் தலைவர்கள் குறிப்பிடப் பட்டுள்ளனர். அவர்கள் வாழ்ந்த நாடான குருப்பு நாடும் இதன் எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. பாட்டுடைத் தலைவர்களின் முன்னோர்கள், அவர்களுடைய காடை குலம், இக்காதல் நூல்களை எழுதிய ஆசிரியரின் முன்னோர்கள் ஆகியவர்களைப்பற்றிக் கூறுவதால் இப்பட்டையம் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

# குருப்பு நாட்டுப் பட்டயம்

## முதல் ஏடு

திருச்சிற்றம்பலம் கலியுக சகார்த்தம் 810ந் மேல் செல்லாநின்ற கீலக ஷு ஆனி மீ 21 ந்தேதியும் சுக்கிர வாரமும் தசமியும் அமிர்த கேளிகையும் கூடின சுபதினத்தில் தெச்சணா தேசத்து றாசாக்களாகிய மகா றாசமானியஸ்ரீ றாசா ராயேஸ்த்திரி ஆளித மகாராயர் சேர றாசர் சோழ றாசர் பாண்டிய றாசர் மூவர் றாசாக்களும் செங்கோல் செலுத்துகிற நாளையினு...டதேசத்திலிருந்து குருகுலத்து வேட்டுவ றாசாக் களை யெங்களுக்குதவியாகத் தருவிச்சு யிருக்குற படியினாலே யிவர்களில் நரசிங்கராயரும் சங்கரராயரும் கெசபதிராயரும் பூலுவராயரும் யிவர்கள் நாளையில் குருப்புநாடு முப்பத்தி ரண்டு கிராமத்துக்கு முதல்வராகிய பூந்துறை நாடு யெழுமாத் தூரில் பனங்காடை குலத்தில் ஆண்ட ராசாக் கவுண்டருடைய குமாரன் சோழியாண்டாக் கவுண்டர் ரண்டாவது பொருளந்தை குலத்தில் சூரியநாராயணக் கவுண்டர் மூணாவது படைத் தலைக் கவுண்டர் யின்னம் யிருக்கப்பட்ட மற்றுமுண்டான கவுண்டர்களுக்கு யிந்த நாட்டில் சதுர்மத்தியமான விசைய கிரி 1, அருளுமலை 1, திட்டமலை 1, வெள்ளிமலை 1, பவழ மலை 1, கதித்தமலை 1 யிந்த ஆறு மலை உள்ள

## இரண்டாம் ஏடு

நதியில் நொய்யல் நதி 1, வானிநதி1 சவுந்தரமா நதி 1, ஆக நதி 3 யிந்தச் சதுர்மத்தியத்தில் வடக்குக் காஞ்சிக் கூவல் நாட்டுக்குச் சேர்ந்த பாரியூரு யெல்லைக்குத் தெற்கு முடச்சியூரு யெல்லை பவழமலைக்குத் தெற்கு பூந்துறை நாட்டுக்குச் சேர்ந்த பெருந்துறை யெல்லை கருங்கரட்டுக்கு மேற்கு நொய்யலாற்றுக்குத் தெற்கு வெங்கிட்டாபுரத்துக்குந் தென் பாரிஷத்தில் மேல்பார்க்கு கீள்ப் பாரிஷத்தில் காங்கய நாட்டு யெல்லை சிலாசாசனக் கல்லுக்கு வடக்கு அதுக்கு மேற்கு திலுப்பையூருக்குந் தென் பாரிஷத்தில் பொங்கலூர் நாட்டு யெல்லை சிலாசாசனக் கல்லுக்கு வடக்கு ஆறு நாட்டு யெல்லை நம்பியூரு யெல்லைக்கும் கிழக்குச் சதுர்மத்தியும் நால்பாங்கிலேயும் அங்கம் அச்சு அடையாளம் சிலாசாசனங்கள் செப்பேடுபட்டையம் யெளுதிக் குடுத்து யிந்த மூணு பேருக்கும் முப்பத்திரண்டு கிராமத்துக்குச் சகல அதிகாரமும் பண்ணிக் கொண்டு துஷ்ட்ட நிக்கிரக சிஷ்ட்ட பரிபாலனம் பண்ணிக் கொண்டு தரும நீதியாய் புத்திர பவுத்திர பாரம்பரியமாகச் சுகமேயிருக்கும்படி

## மூன்றாம் ஏடு

யாயின்னார்களென்றும் நிலை நாட்டுகளும் பண்ணிவிச்சு யிருக்கிறோம் யிதுக்கு மதுரை மீனாட்சியுஞ் சொக்கனாத சுவாமியும் ஆகாச சந்திர சூரியரும் சாட்சியாகத் தங்கள் மூவறாசாக்களும் ராயரும் யெளுதிக் குடுத்த பட்டயம் யிந்தக் குருப்பை நாட்டுக்கு முப்பத்திரண்டு கிராமத்துக்கும் முதல் விசையமங்கலம் அதுக்கு முதல்வனாகிய தென்திசை வேளாளக் கவுண்டர்கள் பனங்காடை குலத்தில் சோளியாண்டாக் கவுண்டர் ரண்டாவது பொருளந்தை குலத்தில் சூரிய நாராயணக் கவுண்டர் மூணாவுது படைத்தலைக் கவுண்டர்கள் விசையாபுரி யம்மனுக்கு முப்பாடு உள்ளவர்கள் கதித்தமலை ஆண்டவருக்குத் தேரும் திருநாளுக்கு முந்தின விபூதி பிரசாதம் சோளியாண்டாக் கவுண்டருக்கு ரண்டாவது சூரியநாராயணக் கவுண்டருக்கு மூணாவது படைத்தலைக் கவுண்டருக்கு யிந்தப் படிக்கு நாங்கள் மூவறாசாக்களும் ராயரவர்களும் முப்பத்தி ரண்டு கிராமத்தாருங்கூடி உண்டு பண்ணி வய்த்துயிருக்கிறது யிதுக்கு யாதா மொருத்தர் நிந்தனை செய்யக்கூடாது விசய மங்கலம் முகுந்தை நல்லூரு திலுப்பையூரு செங்கப்பள்ளி கோசணம் குருமந்தூரு தெக்கலூரு செவியூர்

## நான்காம் ஏடு

முடச்சியூரு அலிங்கயம் அல்லாளபுரம் மண்ணறை குண்ணத் தூரு கத்தாங்கண்ணி அமுக்கயம் கொடுமணல் பாலதொளுவு ஆதியூர் அலிங்கியம் கலிங்கயம் ஆயலூரு தாளுணி வாய்ப்பாடி ஊத்துக்குளி துடுப்பதி சீனாபுரம் பாலக்கரைப்புத்தூரு யிப்படிக் குருப்பை நாடு முப்பத்திரண்டு கிராமமும் ஒழவிடைக் கிராமம் ஒண்ணு யிந்த முப்பத்திரண்டு கிராமத்தாருங் கூடி செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் நஞ்சராயப் புலவ னுக்கு யெளுதிக் குடுத்த யெல்லைச் சதிர் மத்தியத்துக்குச் சாசினப் பட்டையம் யிது யெளுதினவன் சொக்கனாசாரி விசயாபுரி அம்மன் லச்சிக்கவும் கதித்தாசலமூர்த்தி லச்சிக்கவும் சுப்பிரமண்ணியர் லச்சிக்கவும்

## ஐந்தாம் ஏடு

பூந்துரை நாடு . காடை குலத்தில் அவினாசி முத்தனகவுண் டர் தேன்கரை நாடு பெரிய குலத்தில் முத்துரற்றின வேணா வுடையா ரவர்கள் காங்கயநாடு புரளந்தை குலத்தில் சரவண காங்கய மன்றாடியாரவர்கள் பயிர குலத்தில் சிதம்பரப் பல்லவ ராயரவர்கள் பொங்கலூர்க்கா நாட்டு ஓதாள குலத்தில் ரகுநாதக் கவுண்டர் ஆறு நாடு சேவூரில் பாலை வெள்ளாழரில் மசக்காளி வேலப்பகவுண்டர் குருப்புநாடு ஈஞ்ச குலத்தில் தம்பி......கவுண்டர் சிவந்தி குலத்தில் செந்தேவண கவுண்டர்.

# பட்டய அருஞ்சொற்பொருள்

## முதல் ஏடு

*1. இதன் காலம் பிழையானது. எப்பொழுதோ நடந்த செய்தியை ஏட்டில் எழுதியுள்ளனர்.*

*2. சுக்கிர வாரம் - வெள்ளிக் கிழமை.*

*4. தெச்சணா - தெற்கு.*

*5. ஆளித மகாராயர் - ஈரோட்டில் ஆட்சி புரிந்ததாகப் பல பட்டயம் கூறும்; 'பூந்துறை நாட்டு ஈரோட்டில் ஆளித மகாராயர் செங்கோல் செலுத்தும் நாளில்' — முகுந்த நல்லூர்ப் பட்டயம்.*

*7. குரு குலம் - வேட்டுவர் குலம்.*

*16. விசயகிரி - சீனாபுரத்தில் உள்ள மலை.*

*17. அருளுமலை - திங்களூருக்கு மேற்கே உள்ள அருள் மலை. நஞ்சயப் புலவர் என்பவர் இம்மலைக்குப் பல பாடல்கள் பாடியுள்ளார்.*

*18. கதித்த மலை - ஊற்றுக்குழி அருகே உள்ள மலை.*

## இரண்டாம் ஏடு

*2. காஞ்சிக்கூவல் - இன்று காஞ்சிக்கோயில் என வழங்கப் பெறும்.*

*6. வெங்கிட்டாபுரம் - கொடுமணலின் தென்மேற்கே இருந்து அழிந்த அக்கிரகாரப் பகுதி.*

*7. பாரிஷம் - பக்கம்.*

*8. சிலா சாசனம் - கல்வெட்டு.*

*9. திலுப்பையூர் - திருப்பூர்.*

*11. சதுர் - நான்கு.*

*16. பௌத்திரர் - பேரர்.*

**மூன்றாம் ஏடு**

*4.* மூவறாசா - சேரர், சோழர், பாண்டியர்.

*6.* தென்திசை வேளாளர்-சோழன் பூர்வபட்டயம் காண்க.

*10.* முப்பாடு - உரிமை. 'இராச முப்பாடு, கோயில் முப்பாடு' என்று வேட்டுவர் பூர்வ பட்டயம் கூறும்.

**நான்காம் ஏடு**

*5.* ஒழவிடைக் கிராமம் - உழவின் பொருட்டுப் புதிதாக ஏற்பட்ட ஊர் போலும்.

*7.* நஞ்சராயப் புலவர் மரபினர்க்குக் காங்கேய நாடு காணி கொடுத்ததாகப் பட்டயம் கூறும்; 'குருப்பை நாட்டில் பால் சாப்பிடும் பழனிமலைப் புலவன் மகன் சென்னிமலைப் புலவனை நாங்களனைவரும் சேர்ந்து காங்கய னாடு கீரனூர் கிராமத்துக்கு ஆதிகனாக' (கீரனூர்ப் பட்டயம்)

**ஐந்தாம் ஏடு**

*4.* பயிர குலத்தில் கையொப்பமிட்டவர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார்; சிதம்பரப் பல்லவ ராயர் செங்கண்ண குலம்.

*6.* பாலை வேளாளர் - திருமுருகன் பூண்டி எனப்படும் கந்தமாபுரிப் பட்டணத்தில் இருந்தவர்கள். பின் சேவூருக்குக் குடிபெயர்ந்து விட்டனர்.

# தனிப்பாடல்கள்

பாண்டிய நாட்டில் வாழ்ந்து பல்வேறு வகையான இலக்கியங்கள் படைத்த மிதிலைப்பட்டிப் புலவர் மரபினர் போலவே கொங்கு நாட்டில் சிறப்புற்று விளங்கிய புலவர் மரபினர் வாழ்ந்த ஊர் தென்கரை நாட்டுப் புதுப்பை ஆகும்.

அப்புதுப்பையில் தோன்றிக் கொங்கு நாடெங்கும் விரிந்து பரந்து வாழ்ந்த திருக்கைவேல் புலவர் வழியினர் கொடுமணலிலும் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றனர். கொங்கு நாட்டு வேளாண்குலத் தலைவர்கள் பலர் ஆதரவு பெற்று அவர்களையெல்லாம் புகழ்ந்து பாடியிருக்கின்றனர்.

அப்புலவர் மரபினர் பாடிய பல தனிப்பாடல் சுவடிகள் அம் மரபினரான கொடுமணம் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடம் உள்ளன. அவற்றில் ஒரு பகுதியே இங்கு தனிப் பாடல்கள் என்னும் தலைப்பில் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

திருமுகன் பூண்டி, பழனி, சிவன்மலை முதலிய கொங்குத் தலங்கள் பற்றியும், கொங்கு நாட்டின் குலத்தலைவர்களான பட்டக்காரர்கள் பற்றியும், ஏனைய வேளாண் குலச்செம்மல்கள் பற்றியும், கொங்கு வேளாளர் திருமண வாழ்த்துப்பற்றியும் கிடைத்த சில பாடல்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. இவை கொங்கு நாட்டு அரசியல், சமூக, சமய வரலாற்று ஆய்வுக்கு மிகத்துணை செய்யும்.

## திருமுருகன் பூண்டி முருகநாதர் மீது பாடல்கள்

நீட்டும் புவனிச் சராசரம் யாவும் நினைக்கில்முத்தி
கூட்டுந் திருமுரு கன்பூண்டி மாலையைக் கூறநேயாய்
ஆட்டுந் தடக்கையி னால்வகை மோதகம் அள்ளியள்ளி
ஊட்டுங் குடவயிற் றைங்கரன் சேவடி உண்டெமக்கே ! 1

பூவே அதன்மணமே பொன்னே அதனொளியே
பாவே அதன்பொருளே பாச்சே அதன்சுவையே
தேவே அதன்அருளே சிற்சுகமே தத்துவத்தின்
மூவேன மூன்றான முருகர்புரி யாண்டாயே ! 2

பன்னா ளுருவெடுத்தான் பாசவலைப் பட்டுழன்றான்
தன்னால் நமையறியுஞ் சார்பரியான் என்றறிந்தும்
இன்னாள் வரையும் இரங்காது நீயிருந்தாய்
முன்னாள் வினையோ முருகர்புரி யாண்டாயே ! 3

கைநிறையப் பூவெடுத்துங் கால்நிறையத் தூவியிந்த
மெய்நிறையக் கண்ணீர் விழுந்தாலும் பெற்றிலனே
செய்நிரையச் செஞ்சாலித் தென்னிலத் திலுமிலங்கி
மொய்நிறையுந் தெய்வ முருகர்புரி யாண்டாயே ! 4

மைப்போ தெனும்விழியார் மாயா மயக்கிமதி
உப்போ புளியோ ஒருபலனும் நானறியேன்
எப்போதும் போலே இராதே அருள்புரிவாய்
முப்போதுஞ் சொன்னேன் முருகர்புரி ஆண்டாயே ! 5

---

1. திருமுருகன் பூண்டி கொங்கு நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற ஏழு திருத்தலங்களில் ஒன்று. அவினாசி அருகில் உள்ளது. இறைவன் முருகநாதர். அம்மன் முயங்கு பூண் முலை அம்மை. இப்பாடல்கள் ஒரு தனி நூலின்கண் அமைந்தவை (திருமுருகன் பூண்டி மாலை). புவனி - உலகம்; சராசரம் - இயங்காத, இயங்கும் பொருட்கள் அனைத்தும்; மோதகம் - கொழுக்கட்டை (விநாயகனுக்குப் பிடித்தமானது); ஐங்கரன் - விநாயகன்.

2, பாச்சி - பால்; சிற்சுகம் - ஞானானந்தம்; மூவேன மூன்று - முத்தலைச் சூலம்.

3. முன்னாள் - பழம்பிறப்பு,

4. மெய் - உடல்; பெற்றிலேன் - அருள் பெறவில்லை; செய்-வயல்: சாலி-நெல்; நித்திலம் - முத்து. முத்துத் தோன்றும் இடங்களில் நெல்லும் ஒன்று.

5, முப்போது - மூன்று பொழுது.

சீலம்போ லிவ்வரத்தைச் செய்தால் நினைக்கிலிந்திர
சாலம்போ லத்தோன்றும் சலவாழ்வு நிச்சயமோ
கோலம்போல் யார்க்குமனு கூலம்போல் மூவருக்கும்
மூலம்போல் தோன்றும் முருகர்புரி யாண்டாயே! 6

என்னிதிய மென்னுடல மென்னாவி மூன்றையுநின்
சன்னதியில் நின்றுமக்கே தாரையாய் வார்ப்பதென்றோ
அன்னதியில் போட்டபொருள் ஆரூரில் தோற்றிவைத்தோன்
முன்னதியைச் சூட்டு முருகர்புரி ஆண்டாயே! 7

திக்காலுக் கொன்றாய்த் திரியும் கரணமெல்லாம்
எக்கால மொன்றுபட்டு இன்பம் பெறுவதென்றோ
கொக்கா லிரகணிந்த கோடீறா பாடீரம்
முக்காலந் தோய்ந்த முருகர்புரி ஆண்டாயே! 8

நாவுருக நானுருக நல்லோர் மனமுருக
கோவுருகப் பாடியுனைக் கூவினேன் சற்றிரங்காய்
பாவுருகப் பூவுருகப் பண்ணெடுத்த புண்ணியனே
மூவுருவும் நீயே முருகர்புரி ஆண்டாயே! 9

பொய்யெடுத்த திரேகமிது புண்ணியனே என்றுருகிக்
கய்யெடுத்த தீனர்தமைக் காவாத தேவுளதோ
பய்யெடுத்த ஆபரணா முன்முப்பு ரத்தின்
மொய்யொழித்த தெய்வ முருகர்புரி ஆண்டாயே! 10

---

6. இந்திரசாலம் - மாயவித்தை; மூவர் - மும்மூர்த்திகள்.

7. நிதியம் - செல்வம். உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கு அளிப்பேன் என்கிறார். இப்பாடலில் சுந்தரர் வரலாறு கூறப்படுகிறது. சுந்தரரிடம் இருந்த பொருளை வேடனாக வந்து பறித்து அருள் செய்த இடம் திருமுருகன் பூண்டி. பறித்த தலத்தில் வழங்கியதைக் கூறுதல் ஒரு நயம்.

8. திக்காலுக்கொன்றாய் - எல்லாத்திசைகள் தோறும் (கொங்கு நாட்டு வழக்குச் சொல்); கரணம் - ஐம்பொறிகள்.

10. மெய்யென்று பெயர், ஆனால் பொய்யானது உடல். தீனர் - இரப்போர். இங்கே யாசிப்பது இறையருளை என்க; தேவு - இறைவன்; பை - பாம்பு; முப்புரம் - திரிபுரம்; அவை இரும்பு, பொன், வெள்ளி மதில்களுடைய கோட்டைகள். 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' என்ற வழக்குக் காண்க. மொய் - வலிமை.

என்செய்தி யென்பருவம் எல்லாம் அறிந்துணர்ந்தும்
வன்செய்கை செய்தால் மருமாற்ற மேதுரைக்கேன்
நன்செய்கை யுன்மீது நான்பாடப் பெற்றதவம்
முன்செய்த தவமோ முருகர்புரி ஆண்டாயே! 11

பன்னூலின் வேதாந்தப் பாதையிலே சென்றாலும்
என்னூலும் மோச்சபதி இம்மையிலே தாராதே
பொன்னூல் முயங்கும் பூண்முலைத்தாய் தொட்டணைத்தாய்
முன்னூல் மருகா முருகர்புரி ஆண்டாயே! 12

தேகம் பிரியாத தீவினையின் வேரறுத்துன்
தாகம் பிரியா தார்ந்துநிட்டை கூடுவனோ
போகம்பிரி யாமுயங்கு பூண்முலைத்தாய் தொட்டணைத்தாய்
மோகம் பிரியா முருகர்புரி ஆண்டாயே! 13

ஈன்றாள் சலிப்பார் எம்பாடாழ்க் காலாற
நான்றான் இழப்பார் நற்பதவி சற்றருள்வாய்
சான்றா யுதித்த தவமே சடிலமிசை
மூன்றாம் பிறையோ முருகர்புரி ஆண்டாயே! 14

பொன்மயமுந் தன்மயமும் போக நிராமயமும்
சின்மயமும் நீங்கச் சிவமயமும் உற்றுணர்ந்தால்
உன்மயமே அல்லால் ஒருமயமுங் கண்டறியேன்
முன்மயமாய் வந்த முருகர்புரி ஆண்டாயே! 15

சுத்திப் படர்ந்துவளர் தொல்வினைக்கோம் புங்குருத்துக்
குத்திப் பிடுங்கிநிஷ்டை கூடுவதும் எந்நாளோ
தித்திக்கும் தேனே தெவிட்டாத தெள்ளமிர்தே
முத்திக்கும் வித்தே முருகர்புரி ஆண்டாயே! 16

---

11. மாற்றம் - சொல்.
12. மோச்சபதி - வீடு பேறு.
13. நிட்டை - தவம்.
14. சடிலம் - சிவபெருமான் சடைமுடி; பிறை-பிறைச்சந்திரன்.
15. நிராமயம் - உருவமற்ற தன்மை.
16. வித்து - விதை.

நீரில் நுரைபோல் நெடுவான் பிறந்தமின்போல்
பாரில் உதித்தோடும் பாழுடம்பு வேண்டேனே
தேரிலுனை யன்றிமறு தெய்வமென்று சொல்வதெல்லாம்
மோரில்வெண் ணைபோல முருகர்புரி ஆண்டாயே ! 17

கட்டிக் கிடக்கும்வினை காடெல்லாம் மேடாக
வெட்டித் திருத்திநின்னை வேண்டிநிற்ப தென்னாளோ
திட்டிக் கினிய திருமாட மீதுசந்திரன்
முட்டித் தவழும் முருகர்புரி ஆண்டாயே ! 18

கல்லை வனஞ்செயினும் காரிரும்பைப் பொன்செயினும்
தொல்லைவினை தீர்க்கவொரு சொப்பனத்தும் வாராதே
இல்லை இனிப்பிறவி எந்தவிதி வந்திடுமோ
முல்லை வனஞ்சூழ் முருகர்புரி ஆண்டாயே ! 19

தாலிகட்டும் பெண்டுதந்தை தாய்சூழ்ந் திருந்தாலும்
வேலிகட்டி னாலும்நமன் விட்டுவிடான் இன்னுமென்ன
சோலிகட்டுங் கட்டெனவே சொல்லுமுன்னே செனனமில்லா
மூலிகட்டி ஆள்வாய் முருகர்புரி ஆண்டாயே ! 20

என்போலத் தொழும்பருனக்கு எண்ணிலாப் பேர்களுண்டு
உன்போலத் தெய்வமெனக்கு ஓரிடனும் கண்டறியேன்
பொன்போல் முயங்கு பூண்முலைத்தாய் தொட்டணைத்தாய்
முன்போலச் செய்யாதே முருகர்புரி ஆண்டாயே 21

தெக்காலை உள்ப்படுவ தென்னை இருவினையாம்
செக்கா லரைக்கமனஞ் சிக்கா தனப்பொருளாய்
அக்கா லருகா அலங்காரஞ் சேர்சடிலா
முக்கா லுரைத்தேன் முருகர்புரி ஆண்டாயே ! 22

---

17. உடலின் நிலையாமை முதலிரண்டடிகளில் கூறப்படுகிறது. மோரில் வெண்ணெய் இல்லை; அது போலச் சிவனை யன்றி வேறு தெய்வமும் இல்லை.

18. திட்டி - பார்வை (திருஷ்டி).

20. நமன் - எமன்.

21. தொழும்பர் - அடியவர்.

22. கால் அருகா - எமன் வரமாட்டான்.

தொக்குள் வெகுவிதமாம் தோலுருக்கு ளூருகருப்
பைக்குள்முட் டைக்குள்ளாம் பலவுயிர்க்குள் உள்ளுயிராம்
இக்குள் மதுரம்போல் இருக்கு மதுரசமே
மொக்குள் நகையாய் முருகர்புரி ஆண்டாயே ! 23

ஆன பழவடியார்க் காளடுமை செய்யாமல்
போன வழிதேடும் புன்பிறப்பு வேண்டேனே
ஞான முளையே நறுமணமே முக்குணமே
மோன விளைவே முருகர்புரி ஆண்டாயே ! 24

ஆளுருவைப் போலே உண்டாக்கி யுனைத்துதியாப்
பாளுருவைப் பாடவைத்தாய் பாவியேன் ஆனாலும்
வேளுருவு மற்றுருவும் வேந்துருவும் பொன்னுலகில்
மூளுருவும் வேண்டேன் முருகர்புரி ஆண்டாயே ! 25

## பழனியாண்டவர் பேரில் தாய்-மகள் ஏசல்

சேவலங் கொடிகள் வாழி தினம்தினம் பாடி யாடும்
பூலலங் கார மான புகழ்பெறு முருகர் மீதில்
தாவலங் கார மான தாய்மக ளேசல் பாட
நாவலங் கார மான் நான்முகன் காப்புத் தானே ! 26

---

23. இக்கு - கரும்பு.

24. புன் பிறப்பு - இழிந்த பிறப்பு.

25. இப்பாடலின் இறுதியில் 'முளையாம் பூண்டிக் கிராமம் கரவலசிலே இருக்கும் நடுவளவு வடக்கு வாசல் வீடு பழனிமலைக் கவுண்டர் மகன் சின்னக் கருப்பணன் முருகர்புரி மாலை படிச்சு முடிஞ்சுது' என்று எழுதப்பட்டுள்ளது.

26. தாய் மகள் ஏசல் என்பது ஒரு சிற்றிலக்கிய முறை மகளின் வேறுபாடுகளால் தாய் (தன் மகள் ஒரு தலைவனைக் கூடினாளோ என) ஐயமுற்றுக் கேட்க, மகள் ஏற்றவாறு மறைத்துச் சமாதானம் கூறுவது. வினா விடையாக இப்பகுதி அமையும். 'தாய்க்கொளித்த சூல் உண்டோ' என்று தமிழ் நாவலர் சரிதை கூறும்.

பருவ இளங்குயிலே - உன்
சொருகு குழல் சரிந்ததென்னடி மகளே - உமை
பாலரெனும் தென்பழனி
வேல்முருகர் உன்னையணைந் தாரோ......அதுகேள்

அரிவையர்க ளுடன்கூடி
தெருவினில் பந்தெரிந்தாடும் போது - அந்த
அழகுசெண்டு பட்டதினால்
குழல் விழுந்து விட்டதடி தாயே ! 27

கஞ்சமலர் நுதலிலிடுங்
கஸ்தூரி திலகமழி வானேன் — இந்த
காசினியோர் புகழ்பழனித்
தேசிகனார் உன்னையணைந் தாரோ......அதுகேள்

வஞ்சியிள மாதருடன்
கொஞ்சிக்கொண்ட லடித்தாடும் போது—எந்தன்
மதிமுகத்தின் வேர்வைபட்டு
அதிவிதப்பொட் டழிந்ததடி தாயே ! 28

குவளை விழிக்கண் நடு
பவளநிற மானதென்னடி மகளே-வளர்
குமரனெனும் தென்பழனி
அமரர்தொழு முருகரணைந் தாரோ......அதுகேள்

நவரிசக்கரக் கெளிபந்தம்
நாட்டியமு மாடுகிற போது — அன்று
நாலுசாம முழித்ததினால்
நீலவிழி சிவந்ததடி தாயே ! 29

---

27. குழல்-கூந்தல்; அரிவையர் - பெண்கள்.

28. கஞ்சம் - தாமரை; நுதல் - நெற்றி; திலகம் - பொட்டு; வஞ்சி- வஞ்சிக்கொடி; கொண்டல் - மகளிர் ஆடும் ஒரு விளையாட்டு.

29. பவள நிறமானது - கண் சிவந்தது; நாலு சாமம் - இரவு முழுவதும்,

கற்கண்டு ரசஇதழில்
பற்குறிகள் ஏதுசொல்லாய் மகளே — சிறு
கந்தரெனும் தென்பழனி
வந்துஉனைச் சேர்ந்தணைந் தாரோ......அதுகேள்

சொல்கொண்டு கிளியுடனே
மிக்கபழ மருத்திவைக்கும் போது — அப்போ
துலங்குகோவைக் கனியிதென்று
சொலுங்குகிளி கொத்தியது தாயே ! 30

செங்கையிலே தொட்டிருந்த
முன்கைவளை நெறிந்ததென்னடி மகளே — சிறு
திங்கள்மதி வாகனெனும்
எங்களது முருகரணைந் தாரோ......அதுகேள்

மங்கையர்க ளுடன்கூடி
இங்கிதமாய்க் கும்மிதனை அடித்தேன் — அப்போ
வஞ்சியர்கை பட்டதினால்
அஞ்சுவளை நெறிந்ததடி தாயே ! 31

மார்முலைகள் பருத்துமெள்ளக்
கார்முகில்போல் கருத்ததென்னடி மகளே — நாளும்
மால்மருகர் தென்பழனி
வேல்முருகர் உன்னையணைந் தாரோ......அதுகேள்

சீர்பெருகுஞ் சவ்வாதென்
மார்நிறையப் பூசினதுனாலே — என்
செவ்விளநீர்த் தனங்கள் ரண்டும்
இவ்வண்ணமாய்க் கருத்ததடி தாயே ! 32

---

30. இங்கிதம் - அழகு.

31. சொலுங்கு - அழகான.

32. சவ்வாது - ஒரு வாசனைப் பொருள்.

வட்டமுலை மீதில்நகம்
பட்டிருக்கக் காரியமென்னடி மகளே — மகா
துட்டரெனும் தென்பழனி
கட்டியுனைச் சேர்ந்துஅணைந் தாரோ......அதுகேள்

வெட்டிவேருக் கதம்பம்
இட்டமுடன் பூசினதுனாலே — என்
கொடியநகம் பட்டதனால்
உள்டுருவி விட்டதடி தாயே ! 33

ஆலிலைபோல் இருந்தவயர்
சாலதுபோல் ஆனதென்னடி மகளே - நாளும்
ஆதிபர மேசர்தரும்
சோதிமுரு கேசரணைந் தாரோ......அதுகேள்

பாலுரச வர்க்கமுடன்
தேனுமிள நீர்கதலிப் பலாவும் - இப்பப்
பச்சமுடன் புசித்ததினால்
உச்சிதமாய் பெருத்துதடி தாயே! 34

அழகுமத னல்குலரை
அணிந்தகலை நெகிழ்ந்ததென்னடி மகளே - எங்கள்
களப்பழனி சீரலைவாய்
காங்கயனார் கூடியணைந் தாரோ... அதுகேள்

பிறகுவெள்ளி லையெடுத்துப்
பிரியமுடன் மடிதனிலே வைத்தேன் - அப்போ
இளமுலைமான் அரிவையர்கள்
இடைக்கலையை நெகிழ்ந்தெடுத்தார் தாயே! 35

---

34. சால் - பெரிய மண் பாத்திரம்; மிடா அல்லது மொடா என்று கொங்கு நாட்டில் வழங்கப்பெறும். கதலி - வாழை; பச்சமுடன் - விருப்பமுடன்.

35. கலை - ஆடை; சீரலைவாய் - திருசசெந்தூர்; காங்கயன்-முருகன்; வெள்ளிலை - வெற்றிலை,

தையலீர் நவமணியும்
தாள்சிலம்பு புலம்புதென்னடி மகளே - எங்கள்
வைகைதனில் மண்சுமந்தோன்
மைந்தர்திருக் கந்தரணைந் தாரோ......அதுகேள்

தேவர்தொழுங் கைலாசர்
தேவிபெரி யம்மனுக்கு முன்னே - அப்போ
துய்யமயில் மிரட்டிவந்து
சுறுக்குடனே ஓடிவந்தேன் தாயே! 36

**சிவன்மலையாண்டவர் மீது பாடல்கள்**

தகமைபெறு முப்பத்து முக்கோடி தேவரும்
தாமரைக் கண்ணனுந்தி
தனில்வந்த நான்முகன் இந்திரன் மயேசுபரன்
சத்தரிஷி யுங்கூடியே

மகமேரு மத்தாக நாகமுங் கயிறாக
மதிநடு தறியாகவே
வாரியுந் தாளியாய் வைத்திவர் யாவரும்
வந்தமிர்தம் கடையும்வேளை

பகவனொரு பாலிலே நின்றிடும் போதுகன
பாரம் பொறுக்காமலே
பாதாள மாகுதென் றாயிரக் கலாமை
பாருரு வாய்ப்படர்ந்து

சிகமெலாம் தாங்கியே வாழ்வுபெற வேவைத்த
திருமாலின் மருகாகுகா
தெய்வானை வள்ளிமண வாளனென வந்தவா
சிவன்மலைக் குமரேசனே ! 37

---

36, தாய் கூற்றில் பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது.

37. சிவன்மலை-காங்கேய நாட்டின் தலைமைத் தலம். கொடு மணலின் தெற்கே 10 கி. மீ. தொலைவில் உள்ளது. முருகன் கோயில் கொண்டுள்ள சிறு மலை. அருணகிரிநாதர் பாடல்பெற்ற தலம். சிவன் மலைப் பாடல்கள் என இருப்பினும் பெரும்பகுதி திருமாலின் சிறப்பினைக் கூறி மருமகன் முருகன் பெயரைக் கூறி முடிகிறது பாடல். தாமரைக் கண்ணன் - திருமால்; உந்தி - கொப்பூழ்; நான்முகன் - பிரம்மா: மயேசுபரன் - சிவபெருமான்; சத்த ரிஷி-அத்திரி, வசிட்டர் காசியபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், ஜமதக்கினி என எழுவர்; இவர்களைக் குபேரனின் ஆசிரியர்கள் என்பர்,

அரிதான தேவகிக் கொருமதலை யாகியே
ஆயர்பாடியி லேவளர்ந்து
அய்வருக் கனுகூல மாகுறேன் என்றவர்க்கு
அபயஷ்த முங்கொடுத்து

உரமான சகடுதைத் தலகையின் முலையுண்டு
உரிதாவி வெண்ணெயுண்டு
உயர்க்களத்தி லேவிசைய னுடதேர் அதனையும்
ஊரவே வந்திருந்து

கரிபரித் தேருடன் பதினெட்டு அக்குரோணி
காலாள் நெருங்கிவரவே
கர்ணனை அடுத்துமொரு தர்மம்கொ டென்றமுர்த
கவசத்தோ டுயிர்வாங்கியே

துரியோ தனன்படப் பஞ்சவர்க் காதரவு
செய்ததிரு மாலின்மருகா
தெய்வானை வள்ளிமண வாளனென வந்தவா
சிவன்மலைக் குமரேசனே! 38

## முருகன் மீது பாடல்கள்

அன்னமே தாராவே அஞ்சுவர்ணப் பைங்கிளியே
வண்ணமுடன் தென்பழனி வாவிக்கும் போவீரோ! 39

பச்சைத் தேரோடப் பவளத்தேர் நின்றசைய
சித்திரைத்தேர் ஓடிவரும் தென்பழனி வேலவனே! 40

---

மகமேரு - இமயமலை; நாகம் - ஆதிசேடன்; வாரி - கடல்; தாளி-பெரிய வாயகன்ற பாத்திரம்; சிகம் - செகம் (உலகம்); இப்பாடலில் தேவர்கள் பாற் கடலில் அமிர்து கடைந்த செய்தி கூறப்படுகிறது.

38. மதலை-குழந்தை; ஆயர்பாடி - திருமால் கிருஷ்ணாவதாரத்தில் ஒளிந்து வளர்ந்த ஊர்; அய்வர்-பாண்டவர் ஐந்து பேர்; அபயஷ்தம்-அடைக் கலம்; சகடு - வண்டி; அலகை - பேய்; விசயன்-அருச்சுணன்; களம் - பாரதப் போர்க்களம்; கரி - யானை; பரி - குதிரை; அக்குரோணி - 21870 யானை, 56410 குதிரை, 21870 தேர், 109350 காலாட்களும் கொண்ட ஒரு சேனைத் தொகை; கர்ணன் - குந்தியின் மூத்த மகன், பாண்டவருக்கு மூத்தவன், கொடையில் சிறந்தவன்; இப்பாடலில் கிருஷ்ணாவதாரச் செய்திகள் அனைத் தும் சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளன.

39. தாரா - ஒரு பறவை; அஞ்சு - ஐந்து; வாவி - குளம்.

எருக்கிலைக்குத் தண்ணிகட்டி எத்தனைபூப் பூத்தாலும்
மருக்கொழுந்து வாசமுண்டோ? மலைப்பழனி வேலவனே! 41

குலுக்கை யடியிலே குயிலுவந்து கூவுதய்யா
அலுக்கய்யா தென்பழனி ஆறுமுக வேலவனே! 42

வையா புரியழகும் மலைசுத்தித் தோப்பழகும்
அய்யா பழனிமலை ஆறுமுக வேலவனே! 43

பட்டதய்யா வெண்ணீறு பறந்ததய்யா குளிர்காய்ச்சல்
விட்டதய்யா தலைவலியும் விராலிமலை வேலவனே! 44

கிண்ணியிலே சந்தனமும் கிளிமூக்கு வெத்திலையும்
அள்ளிஅள்ளிப் பூசைகொளும் ஆறுமுக வேலவனே! 45

வேலெடுத்துக் கச்சைகட்டி விதவிதமாய் மயிலேறி
ஓடிவருஞ் சிலம்புகொஞ்ச ஓடிவந்தா லுன்னாரோ! 46

## கொற்றைநகர் வேணாவுடையார் மீது பாடல்

எண்ணரிய கலியுக சகார்த்தமது எண்ணூத்தி
யெட்டான திற்குமேலே
எழில்பெற்ற செயவருஷம் இனியவை யாசியும்
மேன்மைபதி மூன்றுதேதி

நண்ணிய சனிவாரமும் அமரபட் சத்துடன்
நலம்பெறும் சஷ்டி நாளில்
நளினமிகும் பூராட சுபநாம யோகமும்
நாடுபவ கரணமதிலே

43. வையாபுரி - பழனி; கொங்கு 24 நாடுகளில் வைகாவூர் நாட்டின் தலைநகர். காதல் இலக்கியம் பழனி முருகனை வய்யாபுரித்துரை என்று கூறும் (இந்நூல் பக். 23).

44. வெண்ணீறு - விபூதி; 'மந்திர மாவது நீறு' என்பது திருஞான சம்பந்தர் வாக்கு; விராலி மலை - முருகன் திருத்தலங்களில் ஒன்று. திருச்சிக்கு அண்மையில் உள்ளது. அருணகிரியால் பாடல் பெற்ற திருத்தலம்.

46. உன்னுதல் - நினைத்தல்.

47. கொற்றனூர் வேணாவுடையார் கொங்கு வேளாளர்களில் மூத்த குடியினர். பெரிய குலத்தைச் சார்ந்தவர்கள். 'கொங்கு 24 நாட்டிற்கும் வேணாடர் பெரிய வீட்டுக்காரனாக இருந்தபடியினாலே' என்று காடையூர் மன்றாடியார் பட்டயம் கூறும். அமரபட்சம் - தேய்பிறை; இவர் மரபுபற்றிய வரலாற்றுக்குத் தமிழக அரசு தொல்பொருள் துறை வெளியிட்டுள்ள பாளையபட்டுக்களின் வமிசாவளி II பக். 80-86 பார்க்கவும்.

மன்னவர் மதிக்குமக் குலோத்துங்க சோழனிட
        மந்திரித் தலைமையாகி
    வளமைபெறு காவேரிப் பூம்பட் டணமதை
        மகிமையொடு திறைகொண்டிடும்

தன்மைபெறும் ஐநூறு குலவணிகர் தன்னையே
        தனதுவச மாய்ச்செய்ததால்
    தரணிபுகழ் செட்டிவே ணாவுடையா னென்றுமுடி
        தனம்பெறச் சூட்டினர்களே ! 47

**உலகுடைய மன்றாடியார் மீது பாடல்**

திசைக்குமது புகழ்கொண்ட ராவுத்த ராயனே
        சிகமன்னர் ரணகண்டனே
    சீரங்கப் பட்டணம் விசைநகர் மகராயர்
        சிம்மா சனத்துமுன்னே

மசக்குதிரை யேறியே பூச்சக்கர வாளமதில்
        வய்யாளி நடனமிட்டு
    மாவுத்த ராவுத்ர சீனத்தர் துலுக்கர்
        வாதித்து முனைகூறியே

அசைக்கமுடி யாதகெடி கோட்டையைக் கொண்டிடித்து
        அயன்றாள் படுத்தியே
    ஆனைகுந் திக்குவரு ராயருக்கு முன்னின்று
        அழகான சிவிகைபெற்றாய்

நிசைக்குமது தென்னாகம் வெள்ளோடை அல்லாளம்
        நிருபன்சாத் தந்தைகுலனே
    நீதிபெறு உலகுடைய காலிங்க மன்றாடி
        நீலவான் பரிநகுலனே! 48

---

48. உலகுடைய மன்றாடியார் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தின் தலைவர். இவர்கள் மரபினர் பெரியார் மாவட்டத்தில் உலகபுரம் என்னும் ஊரில் வாழ்கின்றனர். காலிங்கராயன் கால்வாயைக் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வெட்டி வைத்து நாட்டுடைமையாக்கி அரிய பணியைச் செய்த காலிங்கராயன் இம்மரபில் தோன்றியவன். பின்னர் பொள்ளாச்சி ஊத்துக்குழி சென்று காலிங்கராயன் மரபினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். காலிங்கராயன் பற்றிய விரிவான வரலாற்றுக்குத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை வெளியீடான 'பாளையப்பட்டுக்களின் வம்சாவளி' I (பக். 59-71) பார்க்கவும்

### பயிரகுல மன்னர்கள் மீது பாடல்

மன்னுபுகழ் கொண்ட மூவரசர் செங்கோல்
வழங்கிடும் நங்குடிவழி
வண்மைபெறு நாளில்நற் குடிநாற்பத் தெண்ணாயிரம்
வ்குப்புற்று வாழும்நாளில்

நன்னயம தாகிய பவுத்திரம் வெள்ளியணை
நற்காரை ஆனூர துவும்
நலமைதிகழ் தென்பரஞ் சைப்பதியும் வளரும்
நட்பான கூடலூரும்

தென்னுலவு வெள்ளோடும் உயர்கொன்னை யாறுடன்
சேர்ந்தபுள் ளாநத்தமும்
செய்யதிரு முக்கூடல் அண்டவள நாடதுவும்
செல்வவயி ரம்பள்ளியும்

கன்னல்வயல் சேர்கின்ற கொடுமணல் பாலதொழு
காணிபெற் றேவாழ்ந்திடும்
காராள ராமனெனும் பயிரகுல மன்னவர்கள்
கதித்துவளர் காணியாமே! 49

### பூந்துறை வாரணவாசி மீது பாடல்

சோழன்முன் னாகவரும் சேரனும் பாண்டியன்
சோடுகரை பிரிக்குநாளில்
சொன்ன முதலிக்கு முன்அனக் கொடிகட்டி
சோறிட்டு நிலமைபெற்றாய்

---

49. நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் - வேளாளரைக் குறிக்கும் சிறப்புச் சொல்.

'நற்குடி நாற்பத்தெண் ணாயிரங் கோத்திர நாட்டவர்கள்
பொற்கிரீ டந்தனைச் சாற்றவந் தார்புவிக் காவலனாம்
அக்கினி கோத்திரன் புகழ்சேர மான்பெரு மாள்றனக்கு
வைக்கவும் வந்திடும் வேளாளர் வாழ்கொங்கு மண்டலமே'

என்பது வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகப் பாட்டு. பயிர குல மன்னவர் - பழைய கோட்டைப் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சக்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மரபினர். இவர்கள் பற்றிய வரலாற்றுக்குத் தமிழக அரசு தொல்பொருள் துறை வெளியிட்டுள்ள பாளையப்பட்டுக்களின் வரலாறு III பார்க்கவும்.

TAMIL ... DOCS

வேழமுன் மணிபரவு பூச்சக்கர வாளமது
வேங்கல நன்னாட்டினில்
வெண்ணமலைப் பவுதியில் தோளூர் இளம்பிள்ளை
மேன்மைபெறு பூந்துறைசையில்

வாழரசன் முன்னின்று நானரச நீயென்று
வாதிட்ட ராயசமுகம்
வரிசைபெறு தண்டியில் சுருட்டி தீவட்டியும்
மவுலிநீர் பௌவமதுவும்

ஆழித மகாராயர் பூந்துறைசை நாட்டிலே
அதிகபேர் பெற்றுவந்தாய்
அன்புபெறு காடைகுல செல்வவா ரணவாசி
அடையலர் பணிசிங்கமே ! 50

## காங்கேயம் பல்லவராயர் மீது பாடல்

அஞ்சாமல் சிங்கயன் பல்லவன் தேசத்தை
அளித்துநீர் பட்டம்பெற்றாய்
அஞ்ஞூறு வருஷமது பின்னிட்டு வாழ்வது
அழகுமுன் பிறந்துதித்தாய்

செஞ்சாலை சூழ்வரு மனுநீதி ராயருட
சிம்மா சனத்திருந்தாய்
செங்கண்ணர் குலதிலதா துலுக்காண பௌவமுன்
திசைகூடங் கட்டிவைத்தாய்

---

50. பூந்துறை வாரணவாசி - கொங்கு வேளாளர்களில் காடை குலத் தலைவர். பூந்துறை நாட்டுத் தலைவர். கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகம்

'காரண வான்வணங் காமுடிக் கட்டி கனத்தபடை
பூரண வாகினி யுஞ்சிரந் தாழப் பொருதுவென்ற
வாரண வாசி வளர்பூந்துறை'

என்று கூறும். இவர்களின் பூந்துறை நாடு கொங்கில் உயர்ந்தது என்று கூறுவது மரபு.

'பூவுலகு கொங்கில் இருபத்து நாலினில்
பூந்துறைநாடு அதிகமெனப் புகன்றிட்டாரே'

என்பது ஒரு பழம்பாடல் பகுதி. இன்றும் பூந்துறையில் இப்பெயரிடுதல் மரபாக உள்ளது.

மஞ்சரெனக் குளைக்களத் திரிபுவன்ச் சக்கர
வர்த்தியெனப் பேர்படைத்தாய்
வாங்கியே சுந்தரப் பல்லவன் இளையான்
விளங்கவே பேர்படைத்தாய்

குஞ்சர மெனப்பரிகள் ராசராசன் மறுபதி
குடைக்குமணி காங்கயத்தில்
குமணனென வருகின்ற சிதம்பரப் பல்லவன்
கொலுசிவிகை முடிவேந்தனே! 51

**காடையூர் மரபினர் மீது பாடல்**

ஆதிகரு மாபுரம் காடையூர் தென்பழனை
ஆதியூர் விசயமங்கை
அமுக்கயம் பரமுத்தி புன்னமது தோடயம்
ஆலாம்பாடி யாறையேழூர்

சோதிபெறுங் கொங்கணா புரம்வஞ்சி முத்தூரும்
சொக்கர்வாழ் மதுரைஉறையும்
சுயமான நல்லூர் பிடாரியூர் மாம்பூண்டி
சொற்பொருளின் மாவுரட்டி

தாதுலவு கட்டமனை மீசேமூர் வளர்தலையூர்
புத்தூர்மா குந்தமதுவும்
தமிழ்பெற்ற பிள்ளைக் கரைக்கதிப ராகவரும்
தார்கொங்கு வேளாளராம்

---

51. காங்கேயம் பல்லவராயர் கொங்கு வேளாளரில் செங்கண்ண குலத் தலைவர்கள். பல்லவராயர் எனப் பட்டம் பெற்றவர்கள். இப்போது புதூர்ப் பட்டக்காரர் என்று அழைக்கப்பெறும் மரபினர்.

'சிதம்பரப் பல்ல வேந்திரன் அரசு
செலுத்து காங்கேய நாட்டெங்கள் நாடே'

என்று சிவன்மலைக் குறவஞ்சி பாடும். இவர்கள் பற்றிய விரிவான வரலாற்றுக்கு தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை வெளியீடான 'பாளையப்பட்டுக்களின் வம்சாவழி' I (பக். 86-91) பார்க்கவும்.

52. காடையூர்க் காங்கேய மன்றாடியார் மரபினர் கொங்கு வேளாளரில் பொருளந்தை குலத் தலைவர்கள். காடையூர் அவர்தம் ஊர். அவர்களின் விரிவான வரலாற்றுக்கு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடான 'பாளையப்பட்டுக்களின் வம்சாவழி' I (பக். 92-104) பார்க்கவும்.

நீதியுள மன்னவர்கள் சிற்றம் பலத்தாள்
நினைக்கின்ற கங்கைகுலமன்
நீணிலமை தவறாத பொருளந்தை கோத்திரனவர்
நிலமையென வருகாணியே! 52

## மூலனூர்த் தொண்டைமான் மீது பாடல்

கொங்குதென் கரைநாடு ஆன்பொருநை நதியுதவுங்
குலவுபொன் னூதிகிரியும்
குவலயந் தனில்அதிக முப்பேறும் பெற்றவர்
கொற்றவர்கள் மெச்சுசிங்கம்

திங்களணி சோழீசர் வடிவுள்ள மங்கையைத்
தினம்பணி சுமுகநேயா
திருவஞ்சி யம்மைபதம் பரமேசர் கிருபையால்
செழித்துவளர் அதிகயோகன்

தங்கமக மேரான மூலநகர் அதிபனே
தருமனே பூசகுலனே
தரியலர்கள் பணிசிங்கம் குமாருத்தொண்டை மாராசன்
தவத்தினால் வந்தபுத்ரன்

மங்கல மிலங்கிவளர் சின்னயத் தொண்டைமான்
மன்னனென வந்தசுமுகா
மதிமந்திரி யெனவந்த துரைராச ராசனே
மறுவலர் பணிசிங்கமே! 53

---

53. மூலனூர்த் தொண்டைமான் மரபினர் கொங்கு வேளாளர்களில் பூச குலத் தலைவர்கள்.

'சொற்புகழ் மூலனூர் பூசகுலன் வாதுரு
தொண்டைமான் கொடுத்தது துணிந்துபார் சிங்கா'

என்று ஓதாளர் குறவஞ்சி இவர்களைச் சிறப்பிக்கும்.

## வெள்ளோடு குப்பணன் மீது பாடல்கள்

பூவுக் கழகுசெந் தாமரைப் புட்பம் புகழ்ந்துரைக்கும்
நாவுக் கழகு பழுதுரை யாமைநன் னாவலர்சொற்
பாவுக் கழகு நினைப்பாடல் வாழும் பயிரகுலக்
கோவுக் கழகுபின் நீயேவெள் ளோடையிற் குப்பணனே! 54

நிலத்துக் கழகது நெல்லும் கரும்பும்பின் னீண்டமரக்
கலத்துக் கழகுமுன் னீரோட்டம் காண்பதும் கண்டிடும்கண்
புலத்துக் கழகுகண் ணோட்டம்எல் லாரும் புகழ்பயந்த
குலத்துக் கழகுபின் நீயேவெள் ளோடையிற் குப்பணனே! 55

ஊட்டத்தில் வந்த சிறாரைப் பலபெற் றுறுவதிலும்
தேட்டத்தில் வந்த சிறாரொன்று போதும் செழுங்கதிர்கொண்
டீட்டத்தில் வந்த மதியொன்று போதும் இரவில்விண்மீன்
கூட்டத்தி லென்ன பலன்காண்வெள் ளோடையிற்
குப்பணனே ! 56

சொல்லாமற் செய்யுங் குறிப்பறி வாரைச் சுவாமியென்பார்
அல்லாமற் சொல்லியும் செய்வாரை யும்பின் னனுசரிப்பார்
இல்லாம லின்றைக்கு நாளைக்கென் பாரை யிரப்பவர்கள்
கொல்லாமற் கொல்பவ ரென்பர்வெள் ளோடையிற்
குப்பணனே ! 57

மட்டிக்கி நீதிநன் னூலும்நல் வாய்மையும் வாரிமெத்தக்
கட்டிக்கச் சொல்லினும் பொல்லாத தன்னுட கயமைவிடார்
கிட்டிக்கக் கற்கண்டு சற்கரை யிட்டாலும் செட்டபன்றிக்
குட்டிக் கொருசந்தி யுண்டோவெள் ளோடையிற்
குப்பணனே ! 58

---

54. கொங்கு வேளாளர்களில் பயிர குலத்தார்கட்கு உரிய காணி ஊர்களில் வெள்ளோடும் ஒன்று. அக்குலத்தில் தோன்றி வெள்ளோட்டில் வாழ்ந்த குப்பணன் மீது பாடப்பட்ட சில நீதிப்பாடல்கள் இவை. வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயில் கல்வெட்டில் 'குப்பன் அழைப்பிச்சான் பாட்டு கலயபகம்' என்ற சொற்றொடர் காணப்பகிறது.

55. மரக்கலம் - கப்பல். முன்னீர் - கடல் (மூன்று + நீர்). கண்ணோட்டம்- அருள்; 'கண் என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்' என்பது வள்ளுவர் வாக்கு (குறள்).

58. மட்டி - அறிவற்றவர்.

## வெள்ளோடு சாத்தந்தை முத்தையன் மீது பாடல்

கல்லுங் காவேரியும் சந்திராதித்தர் உளமட்டும்
கம்பநாடன்
சொல்லியசெந் தமிழ்க்கடிமை துரைநாங்கள் என்றுரைத்த
சோமாபூமேல்
வல்லமைசேர் வெள்ளோடைச் சாத்தந்தை கந்தயவேள்
மைந்தன் கீர்த்தி
நல்லயவேள் ஈன்றெடுத்த முத்தைய மகீபதியே
நளினமாலே! 59

## வேளாளர் கொடுத்த கம்பு

மேடையால் மாளிகையால் விளங்குமுடி மன்னரெல்லாம்
ஆடைகயால் சேர்சனத்தால் ஆரதிர்ந்து விட்டாலும்
தேடரியப் புகழ்படைத்த சிறப்புடைய காராளர்
கூடையினால் மொண்டெடுத்துக் கொடுத்தகம்புக் கொவ்வாதே
60

## திருமலைராயன் மீது பாடல்

நேய ராலை மருதின மாயசீ
காய நாமளி ஆளிம நாயகா
மாய னேமளி ஆளிம நேயமா
சீய மான திருமலை ராயனே! 61

---

59. கொங்கு வேளாளர்கள் கம்பருக்கு அடிமையானதைத் தங்கள் சிறப்புக்களுள் ஒன்றாகக் கருதுவர்.

'அம்பல வாணர்மின் காமாட்சி யம்மன் அணிவரைமேல்
கம்பருக் கென்றும் அடிமை ..' என்பது வாலசுந்தரக் கவிராயர் கொங்கு மண்டல சதகப் பாட்டு. இதுபோல் வேளாளரில் அந்துவன் குலத்தினர் சுந்தரர் பாடலுக்கு அடிமையானதாகப் பெருமையுடன் கூறிக் கொள்வர்.

61. இப்பாடல் சொல்லணி கொண்டது. முதல் அடியும் நான்காம் அடியும் ஒப்புமையுடையன. முதல் அடியின் இறுதி எழுத்திலிருந்து முன்னோக்கிப் படித்தால் நான்காம் அடி வரும். நான்காம் அடியின் இறுதி எழுத்திலிருந்து முன்னோக்கிப் படித்தால் முதல் அடி வரும். இடையடிகளான இரண்டு மூன்றாம் அடிகளை முன் பின்னாக எப்படியும் படிக்கலாம். இவை போன்ற பாடல்கட்குத் தண்டியலங்காரம் சொல்லணியியல் காண்க. திருமலைராயன்-மதுரை நாயக்க அரசனாக இருக்கலாம். பல கொங்குத் தலைவர்களும் இப்பெயர் தரித்துள்ளனர்.

## கம்பர் வாழி

சம்புநா தசாமி சாத்திரமு வேதநூல்
கம்பநாத சாமிக் கன்றளித்தார் - உம்பர்புகழ்
பட்டமு வாயிரவர் படியதொன்று நாடறியக்
கட்டினார் கணபதிமுன் காப்பு. 62

மணநாறு கொன்றையந் தார்சடை யோனும்
மலர்வல்லியும்
பணநா டரவினில் பள்ளிகொள் வோனும்
மகபதியும்
துணைநான் முகமுடைத் தோன்றலும் பன்னிரு
தோளன்முனோன்
கணநா தருமிந்தக் கல்யாண நன்மையைக்
காத்திடவே! 63

கண்ணு மனமுங் களிகூர ஞானிகள் கண்டுதொழ
எண்ணின் சிறந்த வழித்துணை நாரியைப் பாகம்வைத்த
பண்ணின் பயோதிரப் பங்கயத் தாளென்னும் பச்சைவல்லி
பெண்ணும் அழகு மணவாளப் பிள்ளையும் பேரின்பமே! 64

ஆலிக்குந் தேவர் அருகதிர் சூட்டி அருக்கன் திங்கள்
பாலுக்குந் தீபந் தனைக்காட்டி மாமணப் பந்தலிலே
காலக்குள் ளுயர்புலன் நீட்டஅய் வர்கய் நீட்டக்கண்டோம்
தாலிக்கய் நீட்டுமம் மேசிவ காமி சவுந்தரியே ! 65

---

62. கொங்கு வேளாளர் திருமணங்களில் பாடப்பெறும் மங்கல வாழ்த்தினைக் கம்பர் இயற்றியதாகக் கூறுவர். முன்பு மங்கல வாழ்த்துடன் 'ஏரெழுபதும் கம்பர் வாழி பதினாறும்' திருமணத்தின்போது பாடப்பட்டதாகக் கொங்குப் புலவர் பட்டயம் கூறும்.

63. திருமணத்தைச் சிவன், திருமகள் (மலர்வல்லி), திருமால் (அரவினில் பள்ளி கொள்வோன்), இந்திரன் (மகபதி), பிரம்மா (நான்முகத் தோன்றல்), முருகன் (பன்னிரு தோளன்), விநாயகர் (கணநாதர்) ஆகிய தெய்வங்கள் காத்திடவேண்டும் எனக் கூறுகின்றார்.

வெள்ளி வைப்பது வானோரும் மற்றுளோர்
வென்றி மாலுடன் வேதாவி னங்கூடி
அள்ளி மிக்க அருகோட ருள்செயும்
அழகு சேரவே சென்னிவைப் பானதே
தெள்ளு முத்தமிழ் வாணர்கொண் டாடவே
தெரிவை மாதரும் பல்லாண்டு கூறவே
வள்ளி யம்மனும் வேலரும் போலவே
வாழி வாழிநன் மாமன்னன் வாழியே ! 66

மருப்பு லாவுங் குழல்மட மாதுக்கும்
மாப்பிள்ளைக் கும்பொருத் தம்கேட்க வேநல்ல
விருப்ப மாகிய சாத்திர கோசலர்
மிகுத்த வேதியன் சொன்னமு கூர்த்தத்தால்
பொருப்பு லாவும் புயமண வாளனார்
பூங்கொ டிக்குப் பொருந்திய தாலிநூல்
யிருப்பு நூலது வாக வரம்பெற்று
யின்று மென்று மினிதாக வாழியே ! 67

நந்து பால்கடல் மாலும் திருவும்போல்
நான்மு கத்தனும் வாணியும் போலவே
எந்தை பார்வதி யீசனும் போலவே
இன்றும் என்றும் மண்மேல் சிறந்துதான்
சந்திர சூரிய ருள்ளநல் காலமும்
சகல சம்பத்தும் புத்திராதி களுடன்
இந்த வாசல் மணவாள னும்பெண்ணும்
இன்றும் என்றும் இனிதாக வாழியே ! 68

நாள்க்கரசு நாட்டி நல்ல முகூர்த்தமிட்டுப்
பேய்க்கரும்பை நாட்டிப் பிரமண்வைத்து - பூக்கமலர்
நற்பிடியும் வேலவர்முன் நன்மங்கிலி யஞ்சிறக்கக்
கைப்பிடித்துக் கொண்டார் கலந்து. 69

---

69-71. வேளாளர் திருமணச் சடங்குகள் சில கூறப்படுகின்றன.

விளக்குநீர் கரகம் வெண்பாலி வைத்து
துளக்கமணி மகுடஞ் சூட்டி - முழக்கமுடன்
இப்புவி யேரன்னும் இயல்பு மணவாளன்
கைப்பிடித்துக் கொண்டார் கலந்து. 70

அரசிலையைப் பைங்கோலஞ் செய்து அதின்மேல்
விரைசெறிசேர் செந்தா மரைமேவி - நரசிங்கம்
தென்மங்கை யன்னைத் தெருவைநீர் முன்செய்த
தருமங்கள் கூடியவர் தான். 71

முரசுடன் கொம்பு காளம் முழங்கிட விளங்கு மண்மேல்
திருமகிழ் திருமால் போலே சேர்ந்திடு மங்கை வாழி
அருமைமங் கிலியம் வாழி ஆயிரத் தாண்டும் வாழி
இருவரும் பெருகி நன்றாய் இன்றுபோல் வாழி தானே! 72

வாழி மணஞ்செய்த மணவாளப் பிள்ளைதனை
ஆழிசங்கு மாலோனும் அம்புயனும் - வேழமுகத்
தய்ங்கரனும் வேலவனும் ஆதி வயிரவனும்
சங்கரனும் காத்திடவே தான். 73

மணவாளன் வாழி மனையாட்டி வாழி
மணவாளன் தந்தைதாய் வாழி - மணவாளன்
சுற்றத்தார் கிளையும் சூழ்ந்திருந்த வான்கிளையும்
குற்றமற வாழ்வீர் குளிர்ந்து. 74

மணமுடனே நன்றாக வாழ்த்தும் புலவோர்க்கு
பணமுடனே நன்றாகப் பால்வைத்து - குணமுடனே
சிங்கார மாகக் கலியாணஞ் செய்தோர்கள்
மங்காமல் நீடூழி வாழி. 75

மாறாமல் பாலமுர்தம் மக்கள் பதினாறும்
ஊறின்றிப் பெற்றே விளங்குவார் - பேறான
சீதேவி முன்னடக்கச் செல்வரும் தேவியரும்
மாதேவர் காக்க மகிழ்ந்து. 76

---

73. அம்புயன் - பிரம்மா. வயிரவன் - பைரவக் கடவுள்.

75. வேளாளர் திருமணங்களில் நாட்டுப் புலவர்கள் வாழ்த்துக்கூற வரும் பொழுது பால் கொடுத்துப் பணமும் கொடுத்தனுப்புவது பண்டைய வழக்கம்.

வரிகால் வருவண்டே வாழ்வாய் வளருவாய்
ஒருகாலும் ஆயிரங்கா லாவாய் - இருபோதும்
பூமடந்தை வாழ்த்தப் புவிமடந்தை போற்றிசெய்ய
மாமடந்தை நீடூழி வாழி. 77

புத்திர சம்பத்தும் புண்ணியமே யுண்டாள்வீர்
வித்தகனைப் போலே விளங்குவீர் - எத்திசைக்கும்
பூமாது சேரப் புயமா தளவுடனே
மாமாது நீடூழி வாழி. 78

ஆயிரவர் சீர்பெருகி அன்றுலகை யாளுவீர்
மாயாய்ப் பிரள்கென்றே பேர்படைப்பீர் - நோயகற்றி
நல்லுடம்பும் ஆள்வீர் நவநார்க் கரசாள்வீர்
பல்லூழி வாழ்வீர் பரிந்து. 79

கதிரவரு பொன்னி கரைகடக்கா வண்ணம்
பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி
மாடை அரைக்கழஞ்சு வன்கம்பர்க் கீந்தமய்யா
ஏடர் குலோத்துங்கன் எழுத்து. 80

ஆர்போல் தழைத்து அருகதுபோல் வேரூன்றி
நார்போல் கிளைகிளைத்து நன்றாக - சீர்போன்ற
வாகைபுனை மணவாளன் மனையாட்டி மிகவாழ்க
வாகைதந்து நீடூழி வாழி. 81

---

80. முன்னொரு காலத்தில் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வேளாளர்கள் குலோத்துங்க சோழனிடம் முறையிட்டனர். அரசன் எவ்வளவு முயன்றும் வெள்ளப் பெருக்கினைத் தடுக்க இயலவில்லை, அரசன் கம்பரிடம் கூறக் கம்பர்

'கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரைகடந்து போயினள்என் - றின்னீர்
உரைகடைக்க வேண்டாம் உலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண்'

என்று பாடியபோது வெள்ளம் வடிந்ததாகவும் குலோத்துங்கன் தனக்களிக்கும் வதுவை வரியை (திருமண வரி) இனிமேல் வேளாளர்கள் கம்பருக்கு அளிக்கலாம் என்றும் எழுதிக் கொடுத்தான். கம்பர் வரி பெற்றமைக்குப் பதிலாக வாழ்த்துப் பாடினார். பிற்காலத்துப் டலவர் திருமணத்துக்கு வந்து வரி வாங்குவது கம்பரின் இவ்வரலாற்று நினைவாகவே ஆகும்.

அட்டலட் சுமியுனது பங்கிலே நின்றுதினம்
அகலா திருக்க வேணும்
அதிகசம் பத்துடன் புத்திரசந் தானமும்
அருள்ந்து கொடுக்க வேணும்

பட்டிமா டெருமை குதிரைபல தானியம்
பாலாறு பெருக வேணும்
பசியென்று வந்தபேர்க் கன்னமும் சொன்னமும்
பந்தியில் பகர வேணும்

கட்டழகு வாலிபம் வயதுநூ றாகவே
சருத்தன் கொடுக்க வேணும்
கண்ணேறு நாவேறு வருகாம லேதினம்
காட்சிதந் தருள வேணும்

துட்டரண சூரரும் நொடிபில்லி சூனியம்
தூரவே நிற்க வேணும்
துளசிமால் மருகனே பழனிவேல் முருகனே
தோகைமயி லேறு குகனே ! 82

சில ஏடுகளில் கீழ்க்கண்ட பாடல்களும் கிடைக்கின்றன.

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றாலும்
மாயன்ஊ துங்சருவி ஆனாலும் - தூயமணிக்
குன்றுபோல் வீற்றிருக்கும் குவிமுலையாள் தன்னுடனே
இன்றுபோல் என்றும் இரு.

கணவனே தெய்வம் கருத்ததனில் வைப்பாய்
குணமலி தார்க்குழலி மாதே - குணமுடைய
காந்தன் மகிழக் கலந்து விளையாட
வேந்தர் எடுத்தார் அறுகு.

# கொடுமணலூரார் கற்ற இலக்கியம்

இதுவரை கொடுமணல் புலவர் மரபினர் எழுதிய இலக்கியங்களும், தனிப்பாடல்களும் தொகுத்தளிக்கப்பட்டன. கொடுமணல் மக்கள் இவ்வண்ணம் பல இலக்கியங்களைப் படைத்ததுடன் பல தமிழ் இலக்கியங்களைப் படித்துமிருக்கின்றனர்.

அவைகளில் அவ்வையாரின் ஆத்தி சூடி, கல்வி ஒழுக்கம் என்பவையுமிருக்கின்றன. அவை முன்பே அச்சாகியிருந்தாலும் சில அரிய பாட பேதங்கள் கொடுமணல் ஏடுகளில் இருக்கின்றன.

## (அ) கல்வி ஒழுக்கம்

கொடுமணல் ஏட்டில் இந்நூல் 'சேமணன் கல்வியொழுக்கம்' என்று காணப்படுகிறது. கொடுமணல் அருகே சிவன்மலை இருப்பதால் சேமலை அண்ணன் - சேமணன் என்ற பெயர் இப்பகுதியில் வழங்கிவந்துள்ளது. தொடக்கத்தில் கொடுமணல் ஏட்டில் இருவரிகள்

> அஞ்சு வயதில் ஆரியம் ஓது
> ஆரியம் ஓத அறிவுண் டாமே

என வருகின்றன. ஒரு சில பிற பதிப்பில் இவ்வரிகள்

> அஞ்சு வயதில் ஆதியை ஓது
> ஆதியை ஓத அறிவுண் டாமே

என்று காணப்படுகிறது.

## (ஆ) ஆத்தி சூடி

| பிற ஏடுகளில் உள்ளவை | | கொடுமணல் ஏட்டில் உள்ளவை |
|---|---|---|
| 1. சனி நீராடு | ... | சனிபுதன் நீராடு |
| 2. ஒப்புரவு ஒழுகு | ... | ஒப்பதை ஒழுகு |
| 3. இயல்பு அலாதன செயேல் | ... | இயங்கித் திரியேல் |
| 4. அழகு அலாதன செயேல் | ... | அழகனார் துணை செய் |

| | | |
|---|---|---|
| 5. | கடிவது மற | ... கடுவது மற |
| 6. | சொற் சோர்வு படேல் | ... சொற் சோர விடேல் |
| 7. | புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | ... புகழ்மைப்பட வாழ் |
| 8. | பூமி திருத்தி உண் | ... பூமி விரும்பு |
| 9. | மீதூண் விரும்பேல் | ... மீதோணி விரும்பு |
| 10. | வேண்டி வினை செய் | ... வேண்டி வினை செய்யேல் |
| 11. | வல்லமை பேசேல் | ... வளமைப்பட வாழ் |
| 12. | ஓரம் சொல்லேல் | ... ஓதுவது வேதம் |
| 13. | வீடுபெற நில் | ... வீரியம் பேசேல் |
| 14. | தொன்மை மறவேல் | ... தொன்மை தொடர்ந்திடு |
| 15. | தூக்கி வினை செய் | ... தூக்கி வினை செய்யேல் |

அவ்வையாரின் ஆத்திசூடியிலும் இவைபோன்ற பல பாட வேறுபாடுகள் இருக்கின்றன. இவை ஆய்வுக்குரியவை.

## (இ) ஒயில் கும்மி

42 வகையான பல்வேறு அபிநயங்களுடனும், பாடல்களுடனும் அழகான ஒயில் கும்மியைக் கொடுமணலில் ஆண்கள் ஆடுகின்றனர். அவை வள்ளி திருமணம் தொடர்பான அழகான காவியமாகும்.

# பொருள் அகராதி

(எண்-பக்க எண்கள்)


அக்கினீசுவரன் 99
அத்தனூரம்மன் 100
அறத்தொடுநிற்றல் 93
அனுமந்தராயன் 105
உலகில் மன்றாடியார் 143
உள்ளூர் விநாயகன் 103
கம்பர் வாழி 150
கம்புக் கொடை 149
காங்கேயர் மரபு 146
கிழக்கு விநாயகர் 103
குறுப்புநாடு 111-113
குறுப்புநாடு-பட்டயம் 125
கொங்குத்தலங்கள் 119
கொங்கு நாடு 119
கொடை 76,77
சகுனம் 84
சரசுவதி 102
சாத்தந்தை 143, 149
சிவன்மலையாண்டவர் 140
சுப்பிரமணியர் 104
செட்டி விநாயகன் 103
செல்லாண்டியம்மன் 101
சேரன் குலம் 118
சொக்கவிநாயகன் 104
தங்கமாரம்மன் 100
தம்பிராட்டியம்மன் 102
தலைவன் அணிகள் 82
தலைவன்-பெண்சந்திப்பு 88
தலைவன் வேட்கை 89
தாய் மகள் ஏசல் 136
திருமலைராயன் 149
தொண்டைமான் 140
நாட்டுராயன் 105
பணம் போனது 113
பந்தடி 106
பயிர குலம் 144
பல்லவராயர் 145
பழனிமுருகன் 136
பள்ளிக்கூட விநாயகர் 104
பனங்காடை காணி 77, 78
பனங்காடை குலம் 114
பாண்டியன் குலம் 116
பெண்ணரசி ஏக்கம் 92
மதுரகாளியம்மன் 101
மாரியம்மன் 102
முத்தாலையம்மன் 101
மேற்கு விநாயகன் 103
முருகநாதர் 132
வாசல் சிறப்பு 80
வாரணவாசி 144
விராலி மலை 142
வீரநாராயணப்பெருமாள் 99
வெள்ளோடு 144, 148
வேட்டைக் கருவி 81
வேணாவுடையார் 142
வேளாளர் குலங்கள் 113
வேளாளர் சிறப்பு 120-122
வேளாளர்-தமிழ் 114
வேளாளர் புகழ் 79

# பாடல் முதற்குறிப்பு அகராதி

(எண் - பக்க எண்கள்)


| | | | |
|---|---|---|---|
| அஞ்சாமல் | 145 | என்னிதியம் | 133 |
| அட்டலட்சுமி | 154 | ஓங்குதமிழ் | 111 |
| அத்தருடன் | 101 | கங்கைகுல | 75 |
| அப்பளமும் | 103 | கஞ்சமலர் | 137 |
| அம்புவியில் | 102 | கடலைபொரி | 104 |
| அரசிலை | 152 | கதிரவரு | 153 |
| அரிதான | 141 | கட்டி | 135 |
| அருமை | 106 | கண்ணும் | 150 |
| அலகை | 100 | கம்பர் | 114 |
| அழகு | 139 | கல்லும் | 149 |
| அன்னம் | 106 | கல்லை | 135 |
| அன்னமே | 141 | கற்கண்டு | 138 |
| ஆதிகரு | 146 | காஞ்சிமாநதி | 100 |
| ஆயிரவர் | 153 | கார்கொண்ட | 118 |
| ஆர்போல் | 153 | கார்பரவும் | 102 |
| ஆலிக்கும் | 150 | கிண்ணியிலே | 142 |
| ஆலிலை | 139 | குலுக்கை | 142 |
| ஆளுருவை | 156 | குவளைவிழி | 127 |
| ஆழித்தேவர் | 122 | கூட்டமிடும் | 105 |
| ஆனபழவடியார் | 136 | கொங்குதென் | 147 |
| இரணியனை | 99 | கைநிறைய | 132 |
| இருசரணம் | 103 | சம்பு | 150 |
| ஈன்றாள் | 134 | சீலம்போல் | 133 |
| ஊட்டத்தில் | 118 | சுத்தி | 134 |
| எண்ணரிய | 142 | செங்குவளை | 107 |
| எருக்கிலை | 142 | செங்கையிலே | 138 |
| எழுமாதை | 75 | செந்திரு | 112 |
| என்செய்தி | 134 | செய்யபுகழும் | 107 |
| என்போல | 135 | சென்னெல் | 19 |

| | |
|---|---|
| சேவலங்கொடி | 136 |
| சீருலவும் | 119 |
| சீருற்ற | 117 |
| சீர் பெருகும் | 104 |
| சீர் பருவு | 116 |
| சீர் மேவு | 118 |
| சீர் மேவும் | 104 |
| சொல்லாமல் | 148 |
| சோழன்முன் | 144 |
| தகைமைபெறு | 140 |
| தண்டமிழ் | 116 |
| தந்திரமாய் | 106 |
| தாலிகட்டும் | 135 |
| திக்காலுக்கு | 133 |
| திங்களூர் | 116 |
| திங்கள்மணி | 113 |
| திசைக்குமது | 143 |
| தித்திக்கும் | 103 |
| திருநுதலும் | 101 |
| திருமருவு | 119 |
| திருவுயவு | 115 |
| தெக்காலை | 135 |
| தெள்ளுதமிழ் | 104 |
| தேகம் | 134 |
| தேரோடும் | 122 |
| தொக்குள் | 136 |
| தையலீர் | 140 |
| நதியணிந்த | 103 |
| நந்து | 151 |
| நாவலர் | 121 |
| நாவுருக | 133 |
| நாள்க்கரசு | 151 |
| நிலத்துக்கழகு | 148 |
| நீட்டும் | 132 |
| நீதிநெறி | 120 |
| நீரில் | 135 |
| நெஞ்சமதில் | 105 |
| நேயராலை | 149 |
| பங்கயன் | 102 |
| பச்சை | 141 |
| பதினாறு | 122 |
| பரமருடன் | 102 |
| பருவஇளங்குயில் | 137 |
| பட்டதய்யா | 142 |
| பன்னாள் | 132 |
| பன்னுலவும் | 113 |
| பன்னூலின் | 134 |
| புத்திர | 153 |
| பூவுக்கழகு | 148 |
| பூவே | 132 |
| பொய்யெடுத்த | 133 |
| பொன்புகழ் | 76 |
| பொன்மயமும் | 134 |
| மஞ்சளிஞ்சி | 112 |
| மட்டக்கி | 148 |
| முத்தமிழை | 19 |
| மணநூறு | 150 |
| மணமுடனே | 152 |
| மணவாளன் | 152 |
| மருப்பு | 151 |
| மன்னுபுகழ் | 144 |
| மார்முலை | 138 |
| மாறாமல் | 152 |
| முந்திய | 122 |
| முரசுடன் | 152 |
| மேடையால் | 149 |
| மைப்போது | 132 |
| வட்டமுலை | 139 |
| வரி கால் | 153 |
| வளமை திகழ் | 144 |

| | |
|---|---|
| வாழி | 152 |
| வாராத | 121 |
| வாலையம்புவி | 99 |
| விளக்குநீர் | 152 |
| வீரகாளி | 101 |
| வீறுடன் | 122 |
| வெள்ளி | 151 |
| வேந்தன் | 20 |
| வேலெடுத்து | 142 |
| வையாபுரி | 142 |

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ.ஆ.ப.
GIFTED BY
R. THIRUMALAI I.A.S. (Late)

—*—